
# வரலாறு

## தரம் 7




கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| ஆய்த எழுத்து ஃ | | | | | | | | | | | | |

# வரலாறு

## தரம்

## 7

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | - | 2007 |
| இரண்டாம் பதிப்பு | - | 2008 |
| மூன்றாம் பதிப்பு | - | 2009 |
| நான்காம் பதிப்பு | - | 2010 |
| ஐந்தாம் பதிப்பு | - | 2011 |


எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

**உங்களுக்குக் கிடைத்திருக்கும் இப்பாடநூலுக்காக அரசினால் ரூபா. 118.00 செலவிடப்பட்டுள்ளது.**

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால், வரையறுக்கப்பட்ட சொப்ட்வேவ் பிரிண்டிங் அண்ட் பக்கேஜிங் பிரத்தியேக நிறுவனத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ, சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.

## அதிமேதகு சனாதிபதி அவர்களின் செய்தி

**அன்பான பிள்ளைகளே!**

நாம் அன்று சுதந்திரம் பெறும்போது எம்மைவிடவும் பின்னடைந்திருந்த பல நாடுகள் இன்று எம்மைப் பின்தள்ளி நீண்ட தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன. எனினும், இன்று நாம் அந்த நாடுகளைப் பின்பற்றவோ அந்த அபிவிருத்திகளின் சாயலைக் கொண்டு செயற்படவோ தயாராக வேண்டியதில்லை. அதே போன்று கைவிட்டுப்போன மரபுரிமைகளைப் பற்றிப் பேசிப் பேசித் தவிக்கவும் வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அனைத்தையும் பின்தள்ளிச் சென்று உலகுக்கு அவர்கள் அடையாத அபிவிருத்தியொன்று தொடர்பான புதிய வழிகளைக் காட்டுவதேயாகும்.

அன்பான பிள்ளைகளே! நாம் இப்போது உங்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ளோம்.

**மஹிந்த ராஜபக்ஷ**
**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி**

(2010.08.15 ஆம் திகதியன்று அம்பாந்தோட்டை, மாகம்புர சர்வதேச துறைமுகத்திற்கு நீர்நிரப்பும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வின்போது சனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி).

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

அன்பான பிள்ளைகளே,

எங்கள் தாய்நாட்டின் பெறுமதிமிக்க வளம் நீங்களே. கல்வியினூடாகவே உங்கள் பெறுமதி மெருகூட்டப்படுகிறது. இப்பணியை நிறைவேற்றுவதில் தொடர்ந்து அர்ப்பணிப்புடனுள்ள எமது நோக்கம், மிகச் சிறந்தவற்றை உங்களுக்கு வழங்குவதே.

அரசுக்கு மக்களால் செலுத்தப்படும் வரியைத் திரட்டிப் பெறப்படும் தேசியச் செல்வத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்நூலை உங்களுக்கு நன்கொடையாக அளிப்பது, அறிவுத் திறன்களும் நற்பண்புகளும் நிறைந்த ஒருவராக உங்களை ஆக்கும் எதிர்பார்ப்பிலேயேயாகும். இதனூடாக ஒளிபெறும் நீங்கள் தேசியச் செல்வத்திற்கு வளமூட்டுவீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதயமற்ற, வன்மையான பாறையிலிருந்து கருணையையும் அன்பையும் வெளிப்படுத்துகின்ற சிலைகளை வடித்தவர்களும் கண்ணாடிச் சுவரின் மீது இலக்கிய நயமுள்ள வாசகங்களை எழுதியவர்களுமாகிய பெருமைமிக்க மூதாதையரின் வழிவந்த உங்களில் ஆக்கச் சிந்தனையை ஏற்படுத்த இந்நூல் கைகொடுக்கும்.

இந்நூலை உங்களுக்கு வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சகலருக்கும் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பந்துல குணவர்தன**
கல்வி அமைச்சர்

# முன்னுரை

பண்பும் அறிவும் வலிமையும் நிறைந்த பிள்ளைகளே வியத்தகு தேசத்தின் எதிர்பார்ப்பாகும். இதனை நிறைவேற்றத்தக்கதாக இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசு இந்நூலை உங்களிடம் வழங்குகின்றது.

இந்நூலை நன்றாகப் பயன்படுத்தி நல்லறிவு பெற்று உங்கள் வாழ்வை ஒளிமயமானதாக ஆக்கிக்கொள்வதற்கு வழிவகுப்பதுடன், தாய் நாட்டின் சௌபாக்கியத்தின் உண்மையான உரித்துடையவராக உங்களை ஆக்குவதற்கான வாயிலைத் திறந்து தருவதும் எமது எதிர்பார்ப்பாகும்.

உங்களிடம் வழங்கப்படும் இந்நூலை உங்கள் ஆப்த நண்பராகக் கருதுவதன் மூலம் நாட்டிற்குப் பயன்படும் பிரசையாக அமையும் பாதையில் நீங்கள் பிரவேசிப்பீர்கள். இப்பாதையில் நீங்கள் பிரவேசிக்கின்றமையால், இலங்கை மென்மேலும் அபிவிருத்தியடையும் என்பதில் ஐயமில்லை. அது மாத்திரமன்று. ஏழு கடலுக்கு அப்பால் உள்ள உலகை வெல்வதற்கும் இந்நூலின் மூலம் உங்களுக்கு வழங்கப்படும் அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியன உதவும். ''கீழைத்தேய உலகின் மினுங்கும் முத்தின்'' பிரகாசம் தேர்ச்சிமிக்க உங்களால் மென்மேலும் அதிகரிக்கும்.

இந்நூலை வெளியிடுவதில் தமது தொழினுட்ப அறிவை வழங்கி, நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணிப்புச் செய்த எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், பாடநூல் மதிப்பீட்டுச் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் ஒத்துழைப்பை நல்கிய ஏனையோருக்கும் எனது நன்றி உரியது.

**டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
''இசுருபாய''
பத்தரமுல்ல
2011. 05. 26

## கண்காணிப்பும் மேற்பார்வையும் - மீள்பதிப்பு 2011

**திரு.டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**திருமதி கே.வீ. நந்தனி ஸ்ரீயாலதா**

ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## இணைப்பாக்கம்

**திருமதி. அ. குலரத்தினம்**

உதவி ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திருமதி விசாகா ஜயவிக்ரம**

உதவி ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

1. **தலைமை - பேராசிரியர் திருமதி மாலனி அந்தகம**
   ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
2. **திருமதி. டி.எச். சி. தர்மபால**
   செயற்றிட்ட அதிகாரி, தேசியகல்வி நிறுவகம்.
3. **திரு.ஏ.எம்.எஸ்.ஜயவீர**
   ஓய்வுபெற்ற பணிப்பாளர் - தேசிய கல்வி நிறுவகம்
4. **திருமதி. ஆர்.டபிள்யு.எஸ். தால**
   ஆசிரியர் டி மசனட் வித்தியாலயம், கந்தான
5. **திரு. பீ.எல்.ஆர். ரோஹன குமார**
   ஓய்வுபெற்ற சிரேஷ்ட செயற்றிட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகம்
6. **திரு. சமன் சஞ்சீவ**
   உதவி விரிவுரையாளர் - களனிப் பல்கலைக்கழகம்

7. **திருமதி. ஜே.பீ. காந்தி வயலட்**
ஆசிரிய ஆலோசகர் - களுத்துறை வலயம்

8. **திரு.யு.எல்.எம்.பசீர்**
ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்விக் காரியாலயம் - வத்தேகம

9. **அருட் சகோதரி. மேரி டொனேட்டா**
ஆசிரியர் - புனித அந்தோனியார் ஆண்கள் தமிழ் மகா வித்தியாலயம்
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13

10. **திரு. யு.எல். சிபார்தீன் மரிக்கார்**
ஆசிரியர் - க/பாரதி தமிழ் வித்தியாலயம் - வத்தேகம

11. **திருமதி. அமாவாசி இந்திராணி**
ஓய்வுபெற்ற ஆசிரியை - புனித அந்தோனியார் கல்லூரி - வத்தளை

12. **திரு.எம்.டி.எம். செனவிரத்ன**
முகாமைத்துவ ஆலோசகர்

13. **திருமதி.டபிள்யு.டி.டபிள்யு. பி. ஜயவர்த்தன**
ஓய்வுபெற்ற ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்

14. திருமதி. எம்.எஸ்.ராஜபக்ஷ
ஓய்வுபெற்ற அரச நிர்வாக சேவை அதிகாரி

15. **திருமதி விசாகா ஜயவிக்ரம**
உதவி ஆணையாளர் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (இணைப்பாளர்)

## பதிப்பாசிரியர்

**திரு. வீ. செல்வராஜா - உபபீடாதிபதி**
ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி - பத்தனை

## சரவை நோக்கு

**ஜனாப் எம். முஸ்தபா ம.்.ஸூர்**
கொ/ ஹம்ஸா முஸ்லிம் வித்தியாலயம்
கொழும்பு -15.

## சித்திரம், வரைபடம்

**திரு. கொடகந்தே ஜயதிஸ்ஸ**
ஓய்வு பெற்ற சித்திரக்கலை ஆலோசகர்
செனத்லாண்டஸ் கல்லூரி - காலி

**திரு. பிரியலால் மாரசிங்க ஆராச்சி**
சித்திரக்கலை ஆலோசகர்
கம்/ கிரிந்திவெல மத்திய கல்லூரி.

**திருமதி. அமித்தா இந்திராணி**
சித்திரக்கலை ஆலோசகர்
கே/ ரிவிசந்த மகா வித்தியாலயம் - உஸ்ஸாபிட்டிய

## இறுதி மதிப்பீடு

**பேராசிரியர். எஸ். சத்தியசீலன்**
யாழ். பல்கலைக்கழகம்

# பொருளடக்கம்


## அலகு 01

**புராதன நதிக்கரை நாகரிகங்கள்**

பக்கம் 01- 26

## அலகு 02

**நாகரிகத்தின் பரம்பல்**

பக்கம் 27 - 63

## அலகு 03

**தென்னிந்திய ஆக்கிரமிப்பும் அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்**

பக்கம் 64 - 78

## அலகு 04

**பொலன்னறுவை இராசதானி**

பக்கம் 79 - 102

## அலகு 05

**மத்தியகால ஐரோப்பா**


பக்கம் 103 - 117

## அலகு 06

**பொலன்னறுவை வீழ்ச்சியின் பின் இலங்கை**

பக்கம் 118 - 132

# 01 புராதன நதிக்கரை நாகரிகங்கள்




நதிக்கரை நாகரிகங்களின் அமைவிடம்
படம் 1.1

மேலேயுள்ள உலகப் புறவுருவப் படத்தை அவதானியுங்கள். அதில் உலகின் புராதன நதிக்கரை நாகரிகங்களின் அமைவிடத்தை அவதானியுங்கள்.

மனிதன் பரிணாம வளர்ச்சியினால் உருவானதொரு விலங்கு எனப் படித்திருப்பீர்கள். அப்பரிணாம வளர்ச்சியின் ஒரு முக்கிய படிமுறையாக நாகரிகங்களையும் கருதலாம். நாகரிகம் என்றால் என்ன? ஒழுக்க நெறி, சிறந்த குணப்பண்புகள் என்பவற்றை வெளிப்படுத்தல் ஆகும். மேலும் விவசாயம் செய்தல், வியாபாரம் செய்தல், நகரங்களை நிர்மாணித்தல், நிரந்தரமான வீடுகளில் வசித்தல் என்பன நாகரிகத்தின் சிறப்பம்சங்களாகும். அழகியல் உணர்வு, பொழுது போக்குப் பண்புகள் என்பவையும் நாகரிகத்தின் பண்புகளாகும்.

படம் 1.1 இல் காட்டப்படும் நான்கு நாகரிகங்கள் நிலவிய கால கட்டங்களும் அப்பிரதேசங்களுக்கு உரித்தாகும் இன்றைய நாடுகளும் வருமாறு.

| நதிக்கரைகள் | நாகரிகங்கள் | நாகரிகங்களுக்கு உட்படும் இன்றைய நாடுகள் | நிலவிய காலகட்டம் |
|---|---|---|---|
| யூபிரதீஸ் தைக்கிரீஸ் | மொசப்பத்தேமியா | ஈராக் | கி.மு. 3500 - 1500 |
| நைல் | மிஸிர்(எகிப்து) | எகிப்து | கி.மு. 3100 - 1070 |
| இந்து | இந்தியா | பாகிஸ்தான் | கி.மு. 2500 - 1500 |
| ஹுவாங்கோ | சீனா | சீனா | கி.மு. 1700 - 1000 |

இந்த நாகரிகங்கள் நான்கும் சம காலத்துக்குரியவனவாகக் காணப்படுவதுடன் அவை நதிக் கரைகளிலேயே தோன்றியுள்ளன.

## நாகரிகங்கள் நதிக்கரைகளில் தோன்றுவதற்கான காரணங்கள்

நாகரிகங்கள் நதிக்கரைகளில் தோற்றம் பெறுவதற்கு விசேட காரணங்கள் என்ன என்பதைச் சிந்தித்து, அதனை எழுதிக் கொள்ளுங்கள். உங்கள் விடைகளை கீழ்வரும் விடயங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

### நீர் வசதி

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவை விட தண்ணீர் முக்கியமாகின்றது. எனவே, நதிக் கரைகளில் தனக்குத் தேவையான நீரையும், விவசாயத்துக்குத் தேவையான நீரையும் மனிதனால் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

### வளமான மண்

உணவு உற்பத்திக்கான நடவடிக்கைகளுக்கு நீரைப் போல வளமான மண்ணும் அவசியமாகும். வருடத்தில் ஒருமுறை பெய்யும் அதிக மழை காரணமாக நதிகள் பெருக்கெடுத்தோடிச் செல்லும் போது வளமான வண்டல் படிவுகளைச் சேர்த்தன. இம்மண் விவசாயம் செய்வதற்கு மிகவும் ஏற்றதாகக் காணப்பட்டது.

விவசாயத்துடன் விலங்கு வளர்ப்பும் இணைந்ததாகக் காணப்பட்டது. எனவே வளமான மண்ணில் புல்லும் செழிப்பாக வளர்ந்தது. அந்தப் புல் நிலத்தில் ஆடு,

மாடு, செம்மறியாடு முதலிய மிருகங்கள் மேய்ந்ததுடன் தேவையான குடிநீரையும் இலகுவாகப் பெற்றுக் கொண்டன. எனவே கால்நடைகள் பல்கிப் பெருகின. அவற்றின் மூலம் மனிதனுக்குத் தேவையான பால், இறைச்சி முதலியன கிடைத்ததுடன் அவனது விவசாய நடவடிக்கைகளுக்கும் கால்நடைகள் உதவின.

ஆறுகளில் காணப்பட்ட மீன்களையும் மனிதனுக்கு உணவாகப் பெற்றுக் கொள்ள முடிந்த காரணத்தால் நதிக் கரைகளில் குடியிருப்புகள் தோற்றம் பெற்றன.

## போக்குவரத்தும் பொருட்களை கொண்டு செல்லும் வசதியும்

ஆறுகள் பிரதான போக்குவரத்துப் பாதைகளாகவும் அமைந்தன. நிலத்தில் பயணம் செய்வதை விட நீர் போக்குவரத்து இலகுவாகக் காணப்பட்டது. ஆகாய விமானம் இல்லாத அக்காலத்தில் ஏனைய நாகரிகங்களுடனான தொடர்புகள் நீர்போக்குவரத்து மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன. ஆறுகள் கடலுடன் கலக்கும் இடமான ஆற்றுக் கழிமுகங்கள் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான துறைமுகங்களாகின. எனவே, நாகரிகங்களின் சிறப்பம்சங்களுள் ஒன்றான வணிகத் தொடர்புகள் அபிவிருத்தியடைந்தன.

மனிதனின் பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், நாடோடி வாழ்க்கை மேற்கொள்ளும் இடையனாக இருந்த காலத்தில் நதிக் கரைகளை அடைந்த அவன் அங்கு காணப்பட்ட மேற்கூறிய வசதி வாய்ப்புகள் காரணமாக நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு அங்கே நிரந்தரமாகக் குடியேறினான்.

நதிக்கரைகளில் காணப்படும் வசதி வாய்ப்புகளைக் கேள்வியுற்ற பலரும் அங்கு வந்து சேர்ந்தனர். எனவே சனத்தொகை துரிதமாக அதிகரித்தது. அதிகரித்த சனத்தொகைக்கேற்ப தேவைகளும் அதிகரித்தன. இத்தேவைகளை நிறைவு செய்ய முற்பட்ட போது மனிதனின் சிந்தனை மற்றும் ஆற்றல் மேலும் முன்னேற்றமடைந்தன.

வீடுகள், வேலைவாய்ப்பு, கடைகள், போக்குவரத்து, சுகாதார சேவைகள், பொழுதுபோக்கு வசதிகள் முதலியவற்றை விருத்தி செய்யவேண்டிய தேவையேற்பட்டது. மனிதனின் வருவாய் அதிகரித்தபோது வாழ்க்கை வசதிகள் அதிகரித்தன. எனவே தனது ஆடையணிகளை நவீனமாக வடிவமைப்பதில் அவன் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

காலப்போக்கில் மனிதன் கல்வியின் அவசியம் பற்றி உணர்ந்தான். மொழியை செம்மைப்படுத்தினான். இலக்கியத்திலும், கலைகளிலும் தனது கவனத்தைத் திருப்பினான். பழக்கவழக்கங்களைப் பண்பாடுடையதாக்கினான். விஞ்ஞானம், தொழினுட்பம், தத்துவம் முதலியவற்றிலும் கவனம் செலுத்தினான்.

பல்வேறுபட்ட இச்சமூகத் தேவைகளைத் தனியொரு மனிதனாலோ குடும்பத்தாலோ நிறைவு செய்வது கடினமாக இருந்தது. அதற்காக நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

படம் 1.1 இல் அவதானித்த நதிக்கரை நாகரிகங்களில் மேற்படி பல்கூட்டுப் பணிகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்பதை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## யூப்பிரதீஸ் - தைக்கிரீஸ் நதிக்கரை நாகரிகம்

யூப்பிரிஸ் - தைக்கிரிஸ் நதிக்கரை பிரதேசம் அன்று மொசப்பத்தேமியா என்று அழைக்கப்பட்டது. இது இன்று ஈராக் என குறிப்பிடப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளைப் பற்றிய செய்திகளில் ஈராக் பற்றி குறிப்பிடுவதை தொலைக்காட்சி மற்றும் ஏனைய ஊடகங்களில் அடிக்கடி அவதானித்திருப்பீர்கள். இன்று அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் குழப்பநிலையில் உள்ள இந்த நாடு 3000 வருடத்திற்கு முன்பு ''நாகரீகத்தின் தொட்டில்'' என்று அழைப்பட்டது.

இன்று ஈராக் என்று அழைக்கப்படும் மொசப்பத்தேமியாவைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## அமைவிடமும் பரம்பலும்

இந்நாகரிகம் இன்றைய ஈராக் நாட்டுக்குரிய பகுதியிலேயே பரவலடைந்ததாக முன்னர் அறிந்தோம். பாரசீகக் குடாவில் கடலுடன் கலக்கும் யூப்பிரதீஸ் - தைக்கிரீஸ் எனும் இரு நதிகளுக்கிடைப்பட்ட பிரதேசத்திலேயே மொசப்பத்தேமிய நாகரிகம் வளர்ச்சியடைந்தது. ''மொசப்தேமியா' எனும் கிரேக்கச் சொல்லின் பொருள் ''இரு நதிகளுக்கிடைப்பட்டது'' என்பதாகும்.

**செயற்பாடு 1.1**

மொசப்பத்தேமிய நாகரிகம் யூப்பிரதீஸ் -தைக்கிரீஸ் நதிகளுக்கிடையில் வளர்ச்சியடைந்தமைக்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.



*மொசப்பத்தேமிய நகரமொன்றின் இடிபாடு படம் 1.2*



*அசூர் கனிபால் மன்னனின் உயிருடன் இருக்கும் போது உருவாக்கப்பட்ட உருவசிலை படம் 1.3*

## ஆட்சி முறை

இங்கு ஊர், நிப்பூர், இரிடு, உருக், சிஷ் லாகாஸ் முதலிய நகரங்கள் காணப்பட்டன. நகரங்கள் மாநகரங்களாகவும், மாநகரங்கள் இராச்சியங்களாகவும் வளர்ச்சியடைந்தன. மொசபத்தேமிய அரசன் நாட்டின் தலைவனாவான். அவனுக்கு ஆட்சி செய்யும் உரிமையை கடவுளே வழங்கியிருந்ததாக நம்பப்பட்டது. சுமேரியாவின் செதுக்கல் வேலைப்பாடொன்றில் அமுராபி மன்னனுக்கு சமாஸ் எனும் சூரிய கடவுள் மோதிரமொன்றையும் கோலொன்றையும் அன்பளிப்புச் செய்யும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆட்சி புரிவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் கடவுளின் அதிகாரம் மன்னனுக்கு ஒப்படைக்கப்படுவதையே அச்செதுக்கல் கலை வெளிப்படுத்தியது.



*சமாஸ் எனும் கடவுளிடமிருந்த அமுராபி மன்னனுக்கு மோதிரமும் கோலும் வழங்கல் படம் 1.4*

சந்திரக் கடவுளின் முன்னிலையில் மன்னன் பூஜை செய்யும் காட்சியொன்றும் மற்றொரு செதுக்கலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் கடவுளுக்கும் மன்னனுக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பு பற்றிய நம்பிக்கை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நடாத்துவதற்கான வருமானம், வரி அறவிடுவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனவே மொசப்பத்தேமியாவில் முறையான விதத்தில் வரி அறவிடப்பட்டது. அத்துடன் அதனைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்றும் வரையப்பட்டிருந்தது.



*அமுரா அரசன் சூரியக் கடவுளிடமிருந்து நீதிக் கோவையைப் பெறுதல் படம் 1.5*

மேற்சொன்ன முறையில் கட்டமைக்கப்பட்டிருந்த அரச நிர்வாகம் ஓர் ஒழுங்கமைப்பில் காணப்பட்டது. இது நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கும் உதவியாக இருந்தது.

### செயற்பாடு 1.2

*மேலே கூறப்பட்ட சட்டக்கூற்று பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது அக்காலத்தில் நிலவிய ஆட்சிமுறை பற்றி என்ன கூறுவீர்கள்?*

ஆகேடிய அரசனான அமுராபி மன்னன் சிறந்த நிர்வாகியாகவும், போர் வீரனாகவும், நீதித்துறையில் பண்டிதனாகவும் காணப்பட்டான். அவனால் இயற்றப்பட்ட பல்வேறு துறைகளுக்குமான சட்டங்கள் 'அமுராபி சட்டங்கள்' என்று சொல்லப்படுகின்றது. அச்சட்டத்திலிருந்து ஒரு வாசகம் பின்வருமாறு.

''ஒருவன் மற்றொருவனின் கண்களைக் குருடாக்கினால் அவனுடைய கண்களும் (அரசனால்) குருடாக்கப்பட வேண்டும்''

## பொருளாதாரம்

விவசாயமும் விலங்கு வளர்ப்பும் வேளாண்மையின் அடிப்படை அம்சங்களாகக் காணப்பட்டன. உள்நாட்டு வியாபாரம், நாகரிகங்களுக்கு இடையிலான வியாபாரம் என்பன மூலம் பொருளாதாரம் மேலும் வளமடைந்தது. ஆறுகள் மூலம் அக்கரைக்குச் செல்லும் தோணிகளைச் சித்தரிக்கும் செதுக்கல்கள் அவர்களது நதிவழிப் பயணங்களுக்கு சாட்சியாக அமைந்துள்ளது.

நகரங்கள், மேட்டு நிலங்கள் என்பவற்றில் அமைக்கப்பட்டிருந்த கட்டடங்கள், தானியக் களஞ்சியங்கள் இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

முதன்முதலாக நாணயங்களைப் பயன்படுத்திய நாகரிகம் மொசப்பத்தேமியா என்பது உங்களுக்குத் தெரியுமா? பண்டமாற்று முறையைவிட அங்கு பணம் மூலமான கொடுக்கல், வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்பட்டன.

## சமய வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

மனித நாகரிகத்தின் ஆரம்பம் முதலே சமய நம்பிக்கைகள் நிலவி வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. மனிதனால் அறிய முடியாதவற்றையும், கட்டுப்படுத்த முடியாத சக்திகளையும் தனக்கு மேலுள்ள சக்தியின் செயல்கள் என்ற கருத்து மனிதனிடம் முக்கியத்துவம் பெற்றது.

மொசப்பத்தேமிய மக்களிடம் கடவுள் நம்பிக்கை காணப்பட்டதுடன் அவர்களுக்குப் பூஜை, புனஸ்காரங்கள் செய்தல் அவர்களின் வணக்க வழிபாட்டு முறைகளாகக் காணப்பட்டன.

மாடுக், இஆ, சின், சமாஸ் முதலியன அவர்களின் பிரபலமான தெய்வங்களாகும். சூரியக் கடவுளும் சந்திரக்கடவுளும் நீளமான தாடியுடைய அறிவாளிகளைப் போன்ற உருவத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. வானத்துக்கும் பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் கடலுக்கும் காற்றுக்கும் அதிபதிகளாக வெவ்வேறு தெய்வங்கள் காணப்பட்டதுடன் ''எஸ்தர்'' எனப்படும் பெண் தெய்வமும் வணக்க வழிபாட்டுக்குரியதாக விளங்கியது.

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தெய்வங்களும் காணப்பட்டன. மனிதனை மீட்கக் கூடிய சக்தி தெய்வங்களுக்கே உரியதென்று நம்பப்பட்டது. கடவுளுக்கும் மனிதருக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் பூசகர்களும் காணப்பட்டனர். சமய சம்பந்தமான விசாலமான கட்டடங்களும் அங்கு காணப்பட்டன. ஊர் என்னும் நகரில் அமைந்திருந்த ''சிகுறாத்'' எனும் பிரமாண்டமான கட்டடம் ஒரு கோயிலாகும் என்பது பலரது அபிப்பிராயமாகும். ''சிகுறாத்'' என்பது சமயத் தலங்களைக் குறிக்கும் சொல்லாகும்.

## எழுத்துக்கலை

பேச்சுக்கலை தோன்றி நீண்ட காலத்திற்குப் பின்னரே எழுத்துக்கலை தோற்றம் பெற்றது. எழுத்துக்கலையும் மொசப்பத்தேமிய நாகரிகத்திலேயே முதன் முதலாக தோற்றம் பெற்றதாக நம்பப்படுகின்றது.

ஆரம்பத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்டது ஈரக்களிமண் தட்டுக்களிலாகும். களிமண் தட்டுக்களில் ஆப்பு வடிவிலான எழுத்துக்கள் எழுதப்பட்டன. இவ்வெழுத்துக்கள் சித்திரங்களாக காணப்பட்டதுடன் ஒவ்வொரு உருவமும் பொருளுடையனவாக விளங்கின. நட்சத்திரம் கடவுளையும், பாதங்கள் பயணத்தையும் குறித்து நின்றன. இவ்வாறான 600 உருவ வடிவிலான எழுத்துக்கள் காணப்பட்டன.

சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னர் 'பப்பிரஸ் புல்' எழுதுவதற்காகப் பயன்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, களிமண் தட்டுக்களில் எழுதும் வழக்கம் இல்லாமற் போனது.

மொசப்பத்தேமியாவில் எழுதப்பட்ட விடயங்களுள் இன்று எஞ்சி இருப்பது அமுராபி அரசரால் எழுதப்பட்ட அமுராபி சட்டக்கோவையாகும். இது செப்பனிடப்பட்ட கருங்கல்லில் எழுதப்பட்டுள்ளது.

பபிலோனியா நகரில் நிப்பூர் தேவாலயத்தில் அதிகமான அளவு எழுதப்பட்ட களிமண் தட்டுக்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இதுவே உலகின் முதலாவது நூல் நிலையம் எனவும் கருதப்படுகின்றது.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

படம் 1.6 இல் காட்டப்பட்டுள்ளது மொசப்பத்தேமியா கல்வெட்டொன்றில் காணப்படும் நில அளவைப் படமாகும்.

இன்று நாம் 10 வரை பயன்படுத்தும் கணித முறையானது அங்கு 60 வரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இடப்பெறுமானத்தை அறிந்து கொள்வதற்காக அங்கு கணித முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கலண்டர் முறையொன்றும் இங்கு காணப்பட்டது. அது விவசாயத்திற்கு உகந்த காலத்தைத் தீர்மானிப்பதற்காகப் பயன்பட்டது.

கி.மு 3000ம் ஆண்டில் மொசப்பத்தேமியாவில் அதுவரையும் கைகளால் 'வனையப்பட்ட களிமண்' பாத்திரங்கள், வனைதற் சில்லு கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் வேகமாகவும், அலங்காரமாகவும் இலகுவாகவும் செய்யக்கூடியதாக இருந்தது.



நில அளவை
வரைபடம் படம் 1.6

முதன் முதல் உலக வரைபடம் மொசப்பெத்தேமியாவிலேயே வரையப்பட்டது. களிமண் தட்டுக்களில் வரையப்பட்ட இவ்வரைபடம் வரி அறவிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சில்லின் உபயோகமும் முதன் முதலில் மொசப்பத்தேமியாவிலேயே பயன்படுத்தப்பட்டது. கம்பு, அச்சு என்பன மூலம் இரண்டு சில்லுகளை இணைத்து உபயோகித்திருப்பதை சில்லின் மத்தியில் துவாரம் இருப்பதைக் கொண்டு அறிய முடிகின்றது. போர் நடவடிக்கைகளுக்காகவும், பாரம் இழுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்ட வண்டிகளைத் தயாரிப்பதில் சில்லுகள் உபயோகித்து இருப்பதை அறிய முடிகின்றது. இவ்வாறான இரட்டைச் சில்லு வண்டிகள் மொசப்பத்தேமியாவில் பாவனையில் இருந்துள்ளன. கட்டடக் கலைஞர் ஒருவரால் கல்லில் வரையப்பட்டிருந்த தேவாலயம் ஒன்றின் திட்டவரைபடம் உலகின் முதலாவது கட்டட வரைபடமாகும்.



வண்டியொன்றின் மாதிரி
படம் 1.7

## வைத்தியத்துறை

மொசப்பத்தேமிய வைத்தியத்துறையானது தெய்வம், பேய், ஆவி என்பவற்றின் நம்பிக்கையுடன் இணைந்ததாகவே காணப்பட்டது.

கனவுகளுக்குப் பலன் கூறும் பழக்கமும் இவர்களிடம் காணப்பட்டது. நோய்களை மாயசக்திகள் மூலம் குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கையும் நிலவியது. அதேபோன்று நோய் நிவாரணத்துக்கான மருந்துகள் 600 வகைக்கும் கூடுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மூலிகைச் செடிகள், மரங்கள், வேர்கள், கனிப்பொருட்கள் என்பவற்றின் மூலம் இம்மருந்துக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. தீக்காயங்களுக்கு மென்மையான களிம்புகள் பூசப்படும் வழக்கம் காணப்பட்டது. மனிதனுக்கு ஓய்வு அவசியம் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளமை இம்மக்களின் வைத்தியத்துறை அறிவினை சுட்டிக் காட்டுகிறது.

## கலாசாரம்

நாம் இங்கு கட்டக்கலை, சிற்பக்கலை, செதுக்கல்கலை என்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.


தொங்கு தோட்டத்தின் மாதிரித் தோற்றம்
படம் 1.8

### கட்டடக் கலை


புராதன உலகில் காணப்பட்ட உலக அதிசயங்கள் ஏழு பற்றி புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை யாவை என உங்களால் கூற முடியுமா? அருகில் உள்ள படத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது அதில் ஒரு அதிசயமாகும்.

இவ்வுலக அதிசயம் காணப்பட்டது மொசப்பத்தேமிய நாகரிகத்திற்குரிய பபிலோனியாவிலாகும். இது ஏழடுக்கு மாளிக்கைகான ஒரு பல்கூட்டுக் கட்டடத்தொகுதியாகும். இம்மாடிக் கட்டடம் தொங்கு தோட்டங்களைக் கொண்டதாக அமைந்திருந்தமையே அதன் அதிசயத்திற்குக் காரணமாகும்.

மொசப்பத்தேமியாவின் கட்டடக் கலைபற்றிக் கலந்துரையாடும்போது சிகுறாத் என்னும் கோயில் கட்டடம் பற்றி விசேடமாகப் பேசப்படுகிறது. இக்கட்டடம் பெரும்பாலும் செங்கற்களாலே கட்டப்பட்டிருந்ததுடன் முன்சுவர் மாத்திரம் மின்னும் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. இக்கட்டட அத்திவாரம் விசாலமானது. படிப்படியாக உயர்த்தப்பட்ட இக்கட்டடத்தின் உச்சி சிறிய கோயில் ஒன்றைப் போல நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

### சிற்பக்கலை

கௌடியா அரசனின் சிலை முற்றிய கருங்கல்லில் வடிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அதன் முகத்தின் உணர்ச்சி வெளிப்பாடு எவ்வளவு உயிரோட்டமாய் அமைந்துள்ளதென அவதானியுங்கள். இச்சிலையின் தலைப்பகுதிக்குக் கீழ் அவனது கம்பீரமான உடற்கட்டும் தத்துரூபமாக வடிவமைக்கப்பட்டிருந்ததை எம்மால் உணரக் கூடியதாக உள்ளது.


கௌடியா அரசனின் சிலை
படம் 1.9

## செதுக்கல்கலை

மிகவும் அற்புதமாகச் செதுக்கப்பட்டுள்ள கற்பலகைகளை காணமுடிகின்றது. அவை ஆண், பெண் உடலமைப்புகளை யதார்த்த பூர்வமாக சித்தரிக்கின்றன. இது அக்காலக் கலைஞர்களின் திறமையை வெளிக்காட்டுகின்றது.

**செயற்பாடு 1.3**


மொசப்பத்தேமிய நாகரிகம் சம்பந்தமான புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள் முதலியவற்றைச் சேகரித்து உங்கள் வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டி, அவைபற்றி சுருக்கமாக விளக்கம் எழுதுக.

# நைல் நதிக்கரை நாகரிகம்

நதிக்கரை நாகரிகங்களுள் அதிகூடிய காலம் நிலவிய நாகரிகம் நைல்நதிக் நாகரிகமாகும். கி.மு 3100 முதல் கி.மு 1070 வரையான காலப்பகுதியில் இந்நாகரிகம் நிலவியது. அக்காலகட்டத்தில் நைல்நதிக் கரைகளிலும் அதன் கழிமுகங்களிலும் வாழ்ந்த மக்களின் நிர்வாக, பொருளாதார, சமூக, கலாசார நிலைமைகள் பற்றி அறிந்துகொள்வதற்கு அங்கு போதியளவு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவ்வாதாரங்களைக் கொண்டு புதுமையான அந்த நாகரிகத்தைப்பற்றி அறிந்து கொள்வோம்.

## அமைவிடம்

நைல் நதி நாகரிகமானது ஆபிரிக்காக் கண்டத்தின் எகிப்து பிரதேசத்தில் நைல் நதியை அண்டி வளர்ச்சியடைந்த நாகரீகமாகும். உலகிலேயே மிகவும் நீளமான நதியான நைல், ஆப்பிரிக்காவின் விக்டோரியா ஏரியில் ஆரம்பித்து எகிப்துக் ஊடாகப் பாய்ந்து மத்தியதரைக் கடலில் கலக்கிறது.



நைல்நதி நாகரிகத்தில் விவசாய நடவடிக்கைகளைச் சித்தரிக்கும் சுவரோவியம் படம் 1.10

## பொருளாதாரம்

நைல் நதிப்படுக்கையில் காணப்பட்ட வளமான மண்ணில் கோதுமை, வாற்கோதுமை (பார்லி) மிலட் முதலிய தானியங்கள் செழிப்பாக விளைந்தன. தமது பிரதேச மக்களின் தேவைக்கு மேலதிகமாகவும் அவர்களால் தானியங்கள் உற்பத்தி செய்ய முடிந்தது. மொசப்பத்தேமியாவைப் போலவே நைல் நதி வாசிகளும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

வர்த்தக மத்திய நிலையம் என்ற வகையில் மொசப்பத்தேமியாவை விட நைல் நதி நாகரிகம் முக்கியத்துவம் பெறுகின்றது. நைல் நதி மத்திய தரைக்கடலிலே சங்கமமாகின்றது ஆதி காலந்தொட்டே மத்திய தரைக் கடலில் விரிவான வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> **செயற்பாடு 1.4**
>
> நைல் நதிக்கரையின் அமைவிடம் அங்கு ஒரு நாகரிகம் உருவாவதில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியுள்ளது, உமது விடையை ஒரு பந்திக்குள் எழுதுக.

எகிப்தின் கிழக்கு எல்லையில் செங்கடல் அமைந்துள்ளது. முற்கால வர்த்தகர்கள் இந்தியா, இலங்கை, சீனா முதலிய நாடுகளின் வர்த்தகப் பொருட்களை செங்கடல் ஊடாகவே ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றுள்ளனர். எகிப்தின் நைல் நதிக் கழிமுகத்தை அண்மித்த பிரதேசம் (தற்போது சுயஸ்கால்வாய் அமைந்துள்ள பகுதி) கிழக்கு, மேற்கு வர்த்தகத்தை தொடர்புபடுத்திய மத்திய நிலையமாகக் காணப்பட்டது.

எனவே செங்கடலின் ஆரம்பம் முதல் முடிவு வரை கடல்வழி வர்த்தகத்தை எகிப்தினால் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடிந்தது. இதனால் எகிப்துக்கு அதிக வரியும் கிடைத்தது.

## ஆட்சிமுறை

கி.மு. 3000 ஆம் ஆண்டளவிலும் இந்த நாகரிகத்தில் அரசர்கள் இருந்தமை தெரிய வருகின்றது. ஒரு கட்டத்தில் வடஎகிப்து, தென்எகிப்து என்று காணப்பட்ட இரண்டு பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. கி.மு. 2600 அளவில் நைல்நதிக் கரை முழுமையான ஆட்சிப்பரிபாலனத்தையுடைய அரசாகக் காணப்பட்டது.



*3 ஆம் துத்மொஸிஸ் அரசன்*
*படம் 1.11*

அருகில் காணப்படும் படத்தில் இருப்பது மூன்றாம் **துத்மொஸிஸ்** அரசனின் தோற்றமாகும்.

**ரமேசஸ்** எனும் அரசன் 20 ஆம் அரச வம்சத்துக்குரியவன். அவனே அரச வம்சத்தின் கடைசி முக்கிய மன்னன். அவனுடைய ஆட்சிக் காலத்தில் மொசப்பத்தேமியாவுடன் யுத்தமொன்று நடந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. மேலும் அவனுக்கு வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுடனும் மோத வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நாகரிக ஆட்சியதிகாரத்தின் உன்னத இடத்தில் அரசன் காணப்பட்டான். ஆட்சியதிகாரம் தெய்வத்திடமிருந்து அரசனுக்குக் கிடைத்திருப்பதாக நம்பப்பட்டது. அரசர்கள் **'பாரோ'** எனும் பெயரில் அழைக்கப்பட்டனர்.

லௌகீகத் தலைவன் என்பதைப் போலவே ஆன்மீகத் தலைவனும் அரசனாகவே விளங்கினான். அரசனின் கீழ் அமைச்சர்களும் உத்தியோகத்தர்களும் காணப்பட்டனர். சமய குருமார் அரசனுக்கு அடுத்த கட்டத்தில் முக்கியத்துவமான வர்களாக காணப்பட்டனர்.

நிர்வாகம் சமயம், பொருளாதாரம், பரிபாலனம் என்ற வகையில் ஆட்சிக் கடமைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. பொரும்பாலும் அரசாட்சி உரிமை தந்தையிடமிருந்து மகனுக்குரியதாகக் காணப்பட்டது. ஆண் பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் பெண்களும் ஆட்சிப்பீடம் ஏறியுள்ளனர்.

நைல்நதி நாகரீகத்தில் இரண்டு பிரதான சமய நம்பிக்கைகள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று 'ரே' எனும் சூரியக் கடவுளை வணங்குதல். மற்றையது மரணம் மற்றும் மறுபிறப்பின் அதிபதி 'ஒசிரிஸ்' எனும் தெய்வத்தை வணங்குவதுமாகும்.

நைல்நதி நாகரீக அரசர்களான பாராலோ உலகில் வாழும் தெய்வங்களாக மதிக்கப்பட்டனர். அரசன் உயிருடன் வாழும் போது ''ஒரஸ்'' கடவுளாகவும், இறந்த பின்னர் ''ஒசிரிஸ்'' கடவுளாகவும் நம்பினர்.ஒசிரிஸ் தெய்வம் மரணத்தின் தண்டனைக்கு அதிபதி என மக்கள் நம்பினர். பிற்பட்ட காலங்களில் அரசன் ''ரே'' தெய்வமாக மதிக்கப்பட்டான்

## சமய வணக்க வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

நைல்நதி வாசிகளின் சமய, வணக்க வழிபாடு மற்றும் நம்பிக்கைகள் பற்றி அறிய உதவும் எழுத்து மூலமான ஓர் ஆதாரம் 'மரணித்தவர்களின் புத்தகம்' எனப்படும் நூலாகும். இது பப்பிரஸ் புல்லினாலான கடதாசியில் எழுதப்பட்டுள்ளது. இவ்வுலகில் மனிதன் செய்யும் நன்மை தீமைகள் அடுத்த பிறவியில் பாதிப்புச் செலுத்தும் என்று இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



*மரணித்தவர்களின் புத்தகத்தில் பெறப்பட்டது*
*படம் 1.12*

தெய்வங்கள், பேய்கள் பற்றியும் அவற்றின் ஆற்றல்கள் அவற்றோடு தொடர்பு கொள்ளக் கூடிய முறைகள், ஈமச்சடங்கு சம்பிரதாயங்கள், மரணச் சடங்கில் ஓத வேண்டிய மந்திரங்கள் முதலியன இப்புத்தகத்தில் உள்ளடங்கியுள்ளன.

## மரணத்தின்பின் வாழ்வு

மரணத்தின் பின்னரும் மனிதனுக்கு வாழ்க்கையுண்டு என்ற நம்பிக்கை முதன் முதல் நைல்நதி நாகரிகவாசிகளிடமே காணப்பட்டது. அரச வம்சத்தவர்களுக்காகவும் தனிப்பட்டவர்களுக்காகவும் அமைக்கப்பட்ட கல்லறைகள் மூலம் மரணத்தின் பின்னரான வாழ்க்கை பற்றிய நம்பிக்கையை அறிந்து கொள்ளலாம். இங்கு காணப்படும் தொண்ணூறுக்கும் மேற்பட்ட பிரமிட்டுக்கள் அவர்களின் மரணத்திற்குப் பின்னர் வாழ்க்கையுண்டு என்ற நம்பிக்கையின் ஆதாரங்களாகும். பிரமிட்டுக்குள் வைக்கப்படும் சடலங்கள் மருந்துக்களிட்டு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. பிரமிட்டுக்களின் உட்புறச் சுவர்கள் மறுஉலக வாழ்வின் நம்பிக்கை கருதி அலங்கரிக்கப்பட்டிருந்தன.



*நரிமுக கடவுள் மரணச் சடங்கு செய்தல்*
*படம் 1.13*

இறந்துபோனவர்கள் வாழும் போது விரும்பிய பொருட்களை எல்லாம் சடலங்களுடன் பிரமிட்டுக்களுள் வைப்பதால் அவர்களை மகிழ்வடையச் செய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இதனால் அவர்கள் பாவித்த பொருட்கள், ஆபரணங்கள், உணவுவகைகள் என்பன சடலங்களுடன் வைக்கப்பட்டன. சூரியன் உதிக்கும்போது உடலிலிருந்து பிரியும் உயிரானது வானத்தில் பயணஞ் செய்துவிட்டு சூரியன் மறையும்போது தனது சரீரத்துடன் சேர்ந்துகொள்ளும் என்ற நம்பிக்கை அன்று நிலவியது. அனைத்து பிரமிட்டுக்களும் நைல்நதியின் மேற்குத் திசையில் அமைக்கப்பட்டதன் காரணம், சூரியன் மறையும்போது ஆத்மாவானது இலகுவாகப் பிரமிட்டினுள் நுழைந்து தனது தேகத்துடன் சேர்ந்து கொள்ளும் என்பதனாலேயாகும்.

## கலாசாரம்

கட்டட நிர்மாணமும் கலைகளும் கலாசாரத்தின் முக்கிய அம்சங்களாகும். எகிப்தில் காணப்பட்ட கலையம்சங்களின் புகைப்படங்கள் சிலவற்றை உன்னிப்பாகக் கவனியுங்கள். நீங்கள் ஏன் அவற்றைப் பார்வையிடுகிறீர்கள்? இரசனைக்காக அல்லது மகிழ்ச்சிக்காக என்று நீங்கள் பதில் கூறலாம்.

**செயற்பாடு 1.5**

*பிரமிட் ஒன்றை வரையுங்கள். பிரமிட் என்றால் என்னவென்று சிறு குறிப்பொன்று எழுதுக.*

எகிப்தின் கலையம்சங்கள் அதிகமாக தேவாலயங்கள், பிரமிட்டுக்கள், அரசமாளிகைகள் என்பவற்றினுள்ளேயே காணப்பட்டன. அவற்றை சாதாரண மக்கள் பார்த்து இரசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனாலும் இலங்கையின் கலைப்படைப்புகள் திறந்தவெளியரங்குளில் காணப்பட்டன. அவை பொதுமக்களுக்கான கலைப்படைப்புகளாகும்.

எகிப்திய நாகரீகத்தில் கட்டகலையின் அதிக சிறப்பு பெற்றதாகக் காணப்படுவது பிரமிட்டுக்களாகும். கி.மு 2700 ஆம் ஆண்டளவில் நாகரீகத்தின் முதல் கட்டத்தில் கு∴பு எனும்அரசனால் ''கீசா'' எனும் இடத்தில் கட்டப்பட்ட பிரமிட்டானது. இது உலகின் பிரமிக்கத்தக்க கட்டட நிர்மாணமாகக் கருதப்படுகிறது.



*கீசாவில் அமைந்துள்ள பிரமாண்டமான பிரமிட் படம் 1.14*

கி.மு. 2630 - 1530 கால கட்டத்தில் எகிப்தில் அமைக்கப்பட்ட பிரமிட்டுக்களின் எண்ணிக்கை தொன்னூறுக்கும் அதிகமாகும். இப்பிரமிட்டுக்கள் அரசர்களினதும் மகாராணிகளினதும் கல்லறைகளாகவே கட்டப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். அரசனோ அரசியோ இறந்த பின்னர் அச்சரீரம் மருந்திடப்பட்டு நீண்டகாலம் சிதைவுறாது இருக்கும்படி பாதுகாப்பாக வைக்கப்பட்டது. பிரமிட்டுக்களின் உட்சுவர் சித்திரங்களால், செதுக்கல்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பிரமிட் என்பது ஒரு தனியான அமைப்பல்ல. அது ஒரு கட்டடத் தொகுதியாகும். அதாவது ஒரு பிரமிட்டைச் சுற்றிவர பல பிரமிட்டுக்கள் காணப்படுவதுடன் உள்ளே பெரிய அறைகளும் சுவர்களும் மதில்களும், சிற்பங்களும், செதுக்கல்களும், சித்திரங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

பிரமிட்டுக்கள் உள்ளே கட்டப்பட்டு அதன் பின்னரே வெளிப்பகுதி படிப்படியாக கட்டப்பட்டதாக புதிதாக அறியப்பட்டுள்ளது. இவ்வாறு பாரிய செலவில் பல வருடங்களாக கட்டப்பட்ட பிரமிட்டுக்கள் ஒரேயொரு சந்தரப்பத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. அது என்ன சந்தர்ப்பம் என்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

## எழுத்துக்கலை



*மகாராணி ஒருவரின் கல்லறையில் காணப்படும் உருவ எழுத்துக்கள் படம் 1.15*

நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தில் காணப்படும் உருவவடிவிலான எழுத்துக்களைக் கொண்ட படமொன்றை வாசிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். 3000 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட இவ்வெழுத்துக்களை யாராலும் இதுவரை வாசிக்க முடியவில்லை. என்றாலும் 100 வருடங்களுக்கு முன்னர் பிரான்சிய அறிஞர் ஒருவர் இவ்வெழுத்துக்களை ஆராய்ந்து இவை மொசப்பத்தேமிய எழுத்துக்களுக்கு சமமானவை என்றும் கூறியுள்ளார். ஆயினும்

இவை சீன எழுத்துக்களுக்கு சமமானதாக இல்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

எழுத்துக்களுள் மிகவும் பழைமையானவை எகிப்திய எழுத்துக்களா? மொசப்பத்தேமிய எழுத்துக்களா? என்ற கருத்து வேறுபாடும் நிலவுகிறது. எனினும் இவ்விரு நாகரிகங்களுக்குமுரிய எழுத்துக்கள் 3000 ஆண்டுகால பழைமை வாய்ந்தவையாகும். ஆரம்பகால எகிப்தில் சுவர்கள் அல்லது பலகைகளே எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமான ஆவணங்கள் தங்கம் அல்லது வெள்ளி முலாம் பூசப்பட்டு பாதுகாக்கப்பட்டது. இவ்வெழுத்துக்கள் வலமிருந்து இடமாகவும் சில சந்தர்ப்பங்களில் மேலிருந்து கீழாகவும் கி.மு. 2600 இல் எழுதப்பட்டுள்ளன. இடைவெளிகளோ, சொற்பிரிப்பு முறைகளோ காணப்படவில்லை. இவ்வாறான 700 - 800 எழுத்துக்கள் எகிப்தில் உள்ளன.

**செயற்பாடு 1.6**

*படம் 1.15 இல் காணப்படும் உருவங்களுள் இனங்காணக் கூடியவற்றை அட்டவணைப் படுத்தி அவை கூறும் கருத்தை எழுதுக.*



*பப்பிரஸ் புல்*
*படம் 1.16*

மொசப்பத்தேமியாவிலும் எகிப்திலும் காணப்பட்ட 'பப்பிரஸ்' புல்லைப் பதனிட்டதன் மூலம் எழுதுவதற்கு உகந்த மென்மையான ஏடுகள் கிடைத்தன. பப்பிரஸ் புல் எழுதப் பயன்படுத்தப்பட்டமையானது எழுத்துக்கலையில் ஏற்பட்டதொரு பாரிய வளர்ச்சியாகும்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

இந்த நாகரிகத்திற்குரிய புத்தகங்களில் கணிதம் மற்றும் கணிதத் துறையின் நுணுக்கமான பகுதிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. கணிதச் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இக்காலக்கட்டத்தில் கணித எண்ணக்கருக்கள் தானியங்கள் முதலியவற்றை அளப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தானியக் களஞ்சியங்களின் பரப்பளவு, வரிக்கணிப்பீடு, கட்டடங்களுக்குத் தேவையான கற்களின் எண்ணிக்கை முதலியவற்றைத் தீர்மானிப்பதில் கணித எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று பண்டிகை நாட்கள், வெள்ளப்பெருக்கேற்படும் நாட்கள், ஓராண்டு காலம் என்பவற்றை அறிந்து கொள்ளவும் கணித முறைகள் பயன்படுத்தப்பட்டன. எகிப்தில் நாட்காட்டி தயாரிக்கும் போது ஓராண்டானது மாதங்களாக, தினங்களாக வகுக்கப்பட்டிருந்ததுடன் நேரமும் கணிக்கப்பட்டிருந்தது.

அவர்களின் கேத்திர கணிதப்பொறிமுறை அறிவே பிரமிட் எனும் பிரமிக்க வைக்கும் படைப்புக்களின் வெளிப்பாடாகும்.

கி.மு. 2630 - 2611 காலகட்டத்தில் ஆட்சி செய்த ஜோசர் மன்னனின் பிரமிட் 'இம்பொடெப்' எனும் பொறியியலாளரால் நிர்மாணிக்கப்பட்டது. உலகில் பெயர் குறித்துக் கூறப்பட்ட முதலாவது பொறியியலாளர் இவராவார்.

## வைத்தியத்துறை

எகிப்தின் வைத்தியமுறையானது மூடநம்பிக்கைக்களுடனே செயற்பட்டு வந்துள்ளது. நோய்களைக் குணப்படுத்துவதில் சாதாரண அறிவுக்கு எட்டாத முறைகளே பயன்படுத்தப்பட்டன. உடலில் உள்ள நோய்கள் பூதங்களை வசியப்படுத்தியுள்ள மாந்திரீகர்களால் இணங்காணப்பட்டது. தெய்வங்களின் அல்லது பேய்களின் ஆட்படுத்தலால் ஆவேசமடைந்த நிலையிலும் அவர்கள் நோய்களுக்கு சிகிச்சை அளிந்துள்ளனர்.



*எகிப்திய தொல்லியல் அறிஞர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடும் படம் 1.17*

**செயற்பாடு 1.7**

*எகிப்திய நாகரிகத்திற்குரிய படங்களைச் சேகரித்து ஒட்டுவதுடன் அவற்றுக்கு கவர்ச்சியான தலைப்பிடுங்கள்.*

கி.மு. 2600 களில் எகிப்தில் வாழ்ந்த பிரமிட் நிர்மாணிப்பாளரும் ஜோதிடக் கணிப்பாளருமான ஒரு வைத்தியர் உடலியல் விஞ்ஞானத்திலும், நோய்களைக் கண்டறிவதிலும் நிபுணத்துவமுடையவராகப் புகழடைந்திருந்தார். விளக்கெண்ணெய், பேரீச்சம்பழம், அத்தி முதலியனவும் புகழ் பெற்ற மருந்துகளாகப் பயன்படுத்தப்பட்டன.

நாம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளின்படியே நைல் நதி நாகரிகத்தைப் பற்றிக் கற்றோம். தொடர்ந்தும் அங்கு அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மேற்கூறிய தரவுகள் எதிர்காலத்தில் மாற்றமடையலாம் என்பதை நினைவில் கொள்க.

# இந்து நதிக்கரை நாகரிகம்

கி.மு 2500 - 1500 இடையில் இந்தியாவில் இந்து நதிக்கருகில் இந்து நதிக்கரை நாகரீகம் தோன்றியது. இதன் பிரதான நகரங்கள் மொஹஞ்சதோரோ மற்றும் ஹரப்பா ஆகும். இந்த நகரங்கள் ''புரம்'' என அழைக்கபட்டன.

இந்து நதிக்கரையில் எழுந்த நாகரீகமானது சற்று வளர்ச்சி கண்ட நாகரீகம் என்பதை பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதற்கு சாதகமான சான்றுகளாக இடிபாடுகளில்

- நிர்மானிக்கப்பட்ட வீதிகள்
- சுற்றுமதில்
- இரு புறமும் வடிகால் தொகுதி
- வீதி வெளிச்சம்
- திறம்பட வடிவமைக்கப்பட்ட நீர்பாசனத் திட்டம்.
- வீதி இருபுறமும் அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடங்கள்
- சகல வீட்டிலும் மலசல கூட வசதிகள். போன்றன கண்டு பிடிக்கப்பட்டன.

## அமைவிடம்

சிந்துநதி நாகரிகம் நிலவிய நிலப்பரப்பு இன்று பாகிஸ்தானுக்குரியதாகக் காணப்படுகின்றது. 1947 இல் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரியும் வரை அது இந்தியாவிற்குரியதாகவே காணப்பட்டது. மிகப்பரந்த பிரதேசத்தில் பரவிய மிகப் பழைய நாகரிகம் இந்து நதிக்கரை நாகரிகமாகும். இந்த நாகரிகம் சிந்து நதியிலிருந்து அதிக தூரம் வரை பரவியிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

**செயற்பாடு 1.8**

1. இந்துநதி நாகரிகம் பரவியிருந்த இடங்களை வரைபடத்தில் அவதானிக்கவும்
2. பின்னர் தேசப்பட (அட்லஸ்) புத்தகமொன்றின் உதவியுடன் அதன் எல்லைகளை இனங் கண்டு அவற்றைப் பெயரிடுக.

இனி நாம் இந்து நதி நாகரிகத்தின் ஒவ்வொரு துறையாகக் கற்போம். அப்போது மொசப்பத்தேமிய நாகரிகம் நைல்நதி நாகரிகம் என்பவற்றுடன் இந்த நாகரிகத்திலும் காணப்படும் ஒரேமாதிரியான பண்புகளை நீங்கள் அவதானிக்கலாம்.

## ஆட்சிமுறை

இந்துநதிக்கரை நாகரிகம் இரண்டு நகரங்களை மையமாகக் கொண்டு விளங்கியது. அவை மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்பனவாகும். இவ்விரு நகரங்களையும் விட சிறிய அளவிலான சன்ஹுதாரோ, லோத்தால், கலிபன்கள், அலம்கீர், ரூபார் முதலிய பிரதான நகரங்களும் இந்து நதிக் கரையிலே பரவலாக அமைந்திருந்தன.

மொசப்பத்தேமிய, நைல் நதி நாகரிகங்களின் ஆட்சிமுறையை அறிவதற்கு-தவிய எழுத்து மூலமான ஆதாரங்கள் இங்கு காணப்படாமை கவலைக்கிடமானது. மன்னர்களின் சிலைகளோ, செதுக்கல் கலைகளோ, சட்டப் புத்தகங்களோ இங்கு எஞ்சியிருக்கவில்லை என்றாலும் வரலாற்றாய்-வாளர்கள் கடுமையாக முயற்சி செய்து ஆதாரங்களைத் தேடி தரவுகளைத் தொகுத்து முடிவுகளுக்கு வந்துள்ளனர்.



மொஹஞ்சதாரோ
படம் 1.18

இரு பிரதான நகரங்களின் திட்டமும் ஒரே மாதிரியானவை. இரு நகரங்களிலும் உள்நகர் ஒன்று அமைந்திருந்தது. அது 10 -15 மீற்றர் உயரமான 200 x 400 மீற்றர் பரப்பளவிலான ஓர் உயர்ந்த மேடையாகும். பெரும்பாலும் இது ஆட்சிப் பீடத்தின் மத்திய நிலையமாக இருந்திருக்கலாம். இவ்விரு நகரங்களினதும் விசேட அம்சங்களில் மாற்றம் காணப்படவில்லை. மொஹஞ்சதாரோவில் ஒன்பது மாடிக் கட்டடம் இருந்தமைக்கான இடிபாடொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் ஒவ்வொரு மாடியும் ஒரே மாதிரியான கட்டமைப்பைக் கொண்டுள்ளன. இதனை அவதானிக்கும் போது நகரத்தில் சிறந்த நிர்வாகம் ஒன்று தொடர்ந்து செயற்பட்டமையை அறிய முடிவதுடன் அது கடுமையான சட்ட திட்டங்களுடைய ஆட்சியாக காணப்பட்டமையையும் அறிய முடிகிறது. அங்கு காணப்பட்ட எழுத்துக்களும் எவ்வித மாற்றங்களுக்குமிடமின்றி ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. எனவே, சிந்து நதிக்கரை நாகரிகத்தில் சுதந்திரமான ஒரு ஆட்சிமுறை அல்லாது கட்டுப்பாடுகளுடன் கூடிய மத்திய மயப்படுத்தப்பட்ட கட்டுக்கோப்பான அரசாட்சிமுறையொன்று காணப்பட்டுள்ளது என்பதை ஊகிக்க முடிகிறது.



நகரின் வடிகால் தொகுதி
படம் 1.19

பெரும்பாலும் இங்கு மன்னர்களின் ஆட்சி நிலவாமல் சமய குருமாரின் அதிகாரத்தை வெளிப்படுத்தும் ஆட்சி முறையொன்றே காணப்பட்டதாகவும் அறியமுடிகிறது. இம்முறையானது நைல்நதி, மொசப்பத்தேமிய நாகரிகங்களுக்கு சமமானதே என்றாலும் அவ்விரு நாகரிகங்களிலும் வாழ்ந்த வணிகர்களை விட இந்துநதி நாகரிக வணிகர்கள் செல்வம் மிக்கவர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் காணப்பட்டமை ஒரு வேறுபாடாகும்.

## பொருளாதார நிலை

ஏனைய நதிக்கரை நகரங்களைப் போலவே இந்துநதிக்கரை நாகரிகத்தின் பொருளாதாரமும் விவசாயம், வர்த்தகம் எனும் இரு விடயங்களிலேயே தங்கியி-ருந்தது.

இங்கு விவசாய நிலத்தில் கோதுமை, வாற்கோதுமை (பார்லி), சோளம் முதலிய தானியங்கள் பயிர் செய்யப்பட்டதுடன் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு மாடுகளைப் பயன்படுத்தியிருப்பதையும் அறிய முடிகின்றது. இயற்கையாகக் கிடைத்த ஆற்று நீரைத், தவிர நீர்ப்பாசனமுறைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டமைக்கான தடயங்கள் காணப்படவில்லை. ஆயினும் யூப்பிரதீஸ் தைக்கிரீஸ் மற்றும் நைல் நதிக்கரை நாகரிகங்களில் நீர்ப்பாசனமுறைகள் காணப்பட்டமை உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கலாம்.

நகரின் மேடான பகுதியில் அமைக்கப்பட்டிருந்த விசாலமான கட்டடம் தானியக்களஞ்சியம் என நம்பப்படுகின்றது. இது நாகரிகத்தின் பொருளாதார மேம்பாட்டைப் பறைசாற்றுகின்றது.

சிந்து நதி கழிமுகத்தில் காணப்படும் 'லோத்தால்' எனும் நகரம் வர்த்தகத் துறைமுகமாக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இங்கும் வெளிநாட்டு வர்த்தகம் இடம் பெற்றிருக்கலாம் என்பது வரலாற்றாய்வாளர்களின் ஊகமாகும். அது உண்மையானால் அந்த வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்ட வெளிநாடுகள் எவை எனச் சிந்தித்துப் பாருங்கள்.

## சமூக நடவடிக்கைகள்

நதிக்கரை நாகரிகங்கள் நகரப் பண்புகளை அதிகமாகக் கொண்டமைந்த இந்து நாகரிகத்தை சற்று நேரம் சிந்தித்துப் பாருங்கள். திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நகரங்கள், நேர்த்தியான வீதிகள், நீர் வழிந்தோடக்கூடிய வடிகால்கள், பாதையோரத்தில் மாடிவீடுகள் எல்லா வீடுகளுக்கும் கழிப்பறை வசதிகள், குளியல் தடாகங்கள், ஒரே திட்டப்படி அமைக்கப்பட்டிருந்த வீடுகள் என்ற அடிப்படையில் சிறந்த நகரப் பண்புகள் இந்து நதிக்கரை நாகரிக்கத்திலேயே காணப்பட்டுள்ளன.

இந்த சமூகவமைப்பில் ஆட்சியாளர்கள், சமயக் குருக்கள், வணிகர்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. ஆயினும் இவர்கள் வகுப்புவாரியாக ஒழுங்கமைந்து இருந்தார்களா? என்பதற்கான தரவுகள் இல்லை. நகரின் ஆடம்பர வீடுகளில் வாழ்ந்த வர்த்தக வகுப்பினர் வேறு நாகரிகங்களில் பெற்ற முக்கியத்துவத்தை விட இங்கு கூடிய முக்கியத்துவத்தை பெற்றிருப்பார்கள் என்ற முடிவுக்கு வரலாம்.

நகரின் பெரும்பான்மையான வீடுகள் மாடிமனைகளாகக் காணப்பட்டதுடன் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு கிணறு காணப்பட்டது. பொதுக் குளியல் தடாகங்களும் காணப்பட்டன. எல்லா வீடுகளுக்கும் மலசல கூடம் காணப்பட்டதுடன் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் வழிந்தோடுவதற்கான வடிகால்களும் அமைக்கப்பட்டிருந்தமையானது அம்மக்கள் சுகாதார நலனில் அக்கறையுடையவர்களாக இருந்தமைக்கான சான்றுகளாகும்.

## உணவுமுறை

இங்கு வாழ்ந்த மனிதன் கோதுமை, வாற்கோதுமை, சோளம், மிலட் முதலிய தானியங்களைப் பிரதான உணவாகக் கொண்டதுடன் தாம் வளர்த்த கால்நடைகளின் பால், மாமிசம் முதலியவற்றையும் உணவுக்காகப் பயன்படுத்தியிருக்கலாம்.

## பொழுதுபோக்குகள்

இங்கு காணப்பட்ட நகர இடிபாடுகளுக்கு மத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட தாயக்கட்டைகள், அங்கு வாழ்ந்த மனிதர்கள் ஓய்வாக இருந்த நேரத்தில் இன்பமாகப் பொழுதைப் போக்குவதற்கான விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருந்த மக்களின் சமூக அமைப்பைப் பற்றி இந்த தாயக்கட்டைகள் பறைசாற்றுகின்றன.

தோணிகள், வண்டிகளினது மாதிரிகளும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அவை சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களாகவும் இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. அவ்வாறாயின் தமது பிள்ளைகளையும் இன்பமான பொழுது போக்குகளில் ஈடுபடுத்தி சந்தோஷமாக வைத்திருந்த சமுதாயமாக இவர்களை நாம் காணலாம்.

## சமயவழிபாடுகளும் நம்பிக்கைகளும்

இந்த மக்களின் புகழ்வாய்ந்த வழிபாடாக விளங்கியது தாய்த் தெய்வ வழிபாடாகும். தாய்த் தேவதையின் களிமண் உருவங்கள் இடிபாடுகளுக்கு மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஓநாய் வணக்கவழிபாட்டு முறையும் காணப்பட்டது. இந்துமக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் கௌரவத்திற்குரிய கடவுளாகக் காணப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன.



*மதகுருவின்உருவச் சிலை*

பூஜை புனஸ்காரங்களை நிறைவேற்ற சமயக்குருமார்கள் இருந்ததாகவும் நம்பப்படுகின்றது. தோள்பட்டை மூடியதான ஆடை அணிந்து, தாடி வளர்த்து நெற்றிப்பட்டத்துடன் காணப்படும் உருவச்சிலை ஒரு மதக் குருவினுடையதாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. எஞ்சியிருக்கும் இவ்வுருவச் சிலையின் இலச்சினைகளே இம்முடிவுகளைத் தருவதாக அமைந்துள்ளன.



*இலட்சனை, படம் 1.21*



*தேவதைகளின் தாயாகக் கருதப்படும் டெரகொட்டாவின் படம் 1.22*

### செயற்பாடு 1.9

*படம் 1.21 ஐப் பாருங்கள். இவ்வுருவில் சித்தரிக்கப்படும் கருத்துக்களை முன்வைத்து இந்து நதிக்கரை நாகரிகத்தின் வரலாற்றுத் தரவுகளை விபரிக்கவும்.*

## கலாசாரம்

வீடமைப்புப் பற்றி இந்துநதி நாகரிகத்தில் காணப்பட்ட ஆற்றல்களும் திறமைகளும் அபாயகரமானவை. சிறிய வீடுகள், மாடிமனைகள், மண்டபங்கள் முதலிய எந்தவொரு கட்டடத்தையும் பலம்வாய்ந்த முறையில் அமைப்பதற்கான ஆற்றல் அம்மக்களிடம் காணப்பட்டது. ஆயினும் இக்கட்டடங்கள் அழகுப்படுத்துவதற்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி அறிந்து கொள்வதற்குரிய தரவுகள் இதுவரை கிடைக்கவில்லை.



*ஆண் உருவச்சிலை*
*(நெற்றிப் பட்டத்துடன் கூடிய தலை)*
*படம் 1.23*

சிற்பகலைக்கு உதாரணமாக அரைவாசி உருவங்களைக் கொண்ட மூன்று ஆண் உருவச் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆயினும் அவற்றில் கலைத்திறன் வெளிப்பாடுகள் காணப்படவில்லை. அதேபோன்று தேவதையின் உருவச்சிலை கூட கலையம்சம் பொருந்தியதாகக் காணப்படவில்லை.

இக்கால கட்டத்திற்குரிய ஓவியங்களோ, செதுக்கல்களோ இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. நிறங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் அவை சித்திரக் கலைக்குரிவை என்ற முடிவுக்கு வரமுடியவில்லை. ஆயினும் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இலச்சினையானது ஆட்சித்துறை, வர்த்தகத்துறையுடன் மட்டுமல்லாது உயர் கலையம்சத்துடனும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதில் காணப்படும் மாடு, யானை முதலிய மிருகங்கள் மிகவும் கலையம்சம் பொருந்தியதாக செதுக்கப்பட்டுள்ளன. யதார்த்தமாகவன்றி கலையழகு கொண்ட ஒரு படைப்பாகவே அவை அமைந்துள்ளன.


## எழுத்துக்கலை

மொசப்பத்தேமியாவிலும் நைல்நதி நாகரிகத்திலும் எழுத்துக்களில் ஒற்றுமை இருந்ததாக அறிந்தோம். ஆயினும் இந்து நதிக்கரை நாகரிக எழுத்துக்களுக்கும் ஏனைய நாகரிக எழுத்துக்களுக்கும் இடையில் ஒற்றுமை காணப்படவில்லை. எனவே இங்கு காணப்பட்ட எழுத்துக்களை இதுவரை வாசிக்கமுடியவில்லை. இந்து நதிக்கரை நாகரிகத்தில் எழுத்துக் கலையம்சமாக எஞ்சியிருப்பது இலச்சினைகளில் காணப்படும் எழுத்துக்கள் சிலவாகும். இந்த நாகரிகத்தைப் பற்றி அறிவதற்கான எவ்வித எழுத்து மூலமான ஆவணங்களும் இதுவரை கிடைக்கவில்லை. இங்கு காணப்பட்ட எழுத்துக்களை வாசிக்க பேராசிரியர் செனரத் பரணவிதான முயற்சியில் ஈடுபட்டபோதிலும் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை.

## விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு

இந்து நதி நாகரிகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்களான விளையாட்டு வண்டிகளில் சில்லுகள் பொருத்தப்பட்டிருந்தன. எனவே, இம்மக்கள் போக்குவரத்துக்காக சில்லுகளைப் பயன்படுத்தும் முறையை அறிந்திருந்தனர் என்ற முடிவுக்கு வரலாம்.

ஆபரணங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பமும், இவர்களிடம் காணப்பட்டது. உலோக வார்ப்புக் கைத்தொழில்களும் இடம் பெற்றமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் இலச்சினைகள் ஏனைய கலை அம்சங்களை விட உயர் தரமுடையனவாகக் காணப்படுகின்றன.


விளையாட்டு வண்டி
படம் 1.24

இந்நாகரிகத்தில் வாழ்ந்த கலைஞர்கள் கட்டடக் கலைகளில் உயர் தொழில்நுட்ப அறிவைக் கொண்டிருந்தாக அறியமுடிகின்றது. அதேபோன்று நகர நிர்மாணத்திலும் உயர்பொறிமுறை அறிவைப் பிரயோகத்துள்ளனர்.

மேலும் நகரின் எல்லையில் கைத்தொழிற் பேட்டையொன்றும் காணப்பட்டமைக்கான தடயங்களாக கைத்தொழிற்சாலைகளில் அகற்றப்பட்ட கழிவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


கைத்தொழிற் கழிவுப் பொருட்கள்
இடப்பட்ட ஓர் இடம் படம் 1.25

கல்பதித்த மாலைகள், கடலாமை ஓடுகளால் தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருட்கள், மினுக்கப்பட்ட பீங்கான் பொருட்கள், தங்க ஆபரணங்கள் முதலியன இங்கு தயாரிக்கப்பட்டமையை கைத்தொழில் கழிவுப் பொருட்கள் எடுத்துக் கூறுகின்றன.

மொஹஞ்சதாரோ நகரின் மீது கட்டியெழுப்பட்டுள்ள நவீன நாகரிகம் காரணமாக புராதன நாகரிகத் தடயங்கள் மண்ணுக்குள்ளேயே மறைந்துவிட்டன. புராதன நாகரிகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான தடை யாதெனில் அப்பிரதேசம் தனியார் சொத்தாக காணப்படுவதாகும்.

**செயற்பாடு 1.10**

*இந்து நதிக்கரை நாகரிகத்தில் காணப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப ஆக்கங்கள் பற்றி சிறுகுறிப்பெழுதுக.*

## ஹூவாங்கோ நதிக்கரை நாகரிகம்

5464 கி.மீ நீளமான ஹூவாங்கோ நதி சீனாவின் நீண்ட நதிகளிலே இரண்டாம் இடம் பெறுகின்றது. இந்நதி வடமத்திய சீனாவில் ஊற்றெடுத்து மிக நீண்டதூரம் கிழக்குத் திசையில் பாய்ந்து சென்று போ ஹை குடாவில் கடலுடன் கலக்கின்றது.

ஹூவாங்கோ என்ற சீனச் சொல்லின் அர்த்தம் துயரம் என்பதாகும். ஆண்டுதோறும் இந்நதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் அதன் இருமருங்கிலும் வாழ்ந்த மக்கள் துன்பமடைந்ததாலேயே இப்பெயர் நதிக்குச் சூட்டப்பட்டுள்ளது. மேலும் இந்நதி வளமான வண்டல் மண்ணைத் தன் இரு கரைகளிலும் படியவிடுவதால் 'மஞ்சள் நதி' எனவும் அழைக்கப்படுகின்றது.

### அமைவிடமும் காலமும்

ஹூவாங்கோ நதியின் கீழ்ப்பகுதியில் இன்றைய வடஹொனன் மாநிலத்திலேயே புராதன சீன நாகரிகம் நிலவியது. இந்த நாகரிகமும் நாம் ஏற்கனவே கற்ற யூப்பிரதீஸ் - தைக்கிரீஸ், நைல், இந்து நதிக்கரை நாகரிகங்கள் நிலவிய காலத்திலேயே நிலவியமை குறிப்பிடத்தக்கது. அதாவது கி.மு 1700 - 1100 இடைப்பட்ட ஷங்க் அரச வம்சம் ஆட்சியிலிருந்த காலகட்டமே அது.



*பாலைவனத்தின் ஊடாகப் பாயும்போது நதி கொண்டு வந்த மணல், நதிக்கரையில் அமைந்துள்ளது. படம் 1.26*

### பொருளாதாரக் கட்டமைப்பு

புராதன நாகரிகங்கள் மூன்றைப் பற்றி இதுவரை நீங்கள் கற்றுள்ளீர்கள். அவற்றுள் பொதுப் பண்புகள் காணப்பட்டதையும் அறிந்தீர்கள். ஹூவாங்கோ நதிக்கரை நாகரிகத்திலும் அதே பண்புகள் காணப்பட்டன. பொருளாதாரத் துறையில் காணப்பட்ட பொதுவான பண்புகள் எவை?

1. விவசாய நடவடிக்கைகள்
2. வர்த்தக நடவடிக்கைகள்

ஹூவாங்கோ நதிக்கரையில் கோதுமை, வாற்கோதுமை (பார்லி) முதலிய தானியங்கள் பயிரிடப்பட்டாலும் பிரதான தானியமாக நெல் பயிரிடப்பட்டது. விலங்கு வளர்ப்பின் கீழ், ஆடு, மாடு, செம்மறியாடு முதலியன வளர்க்கப்பட்டன.

ஏற்கனவே நாம் கற்ற நாகரிகங்களில் வரையறுக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் காணப்பட்டதாக அறிந்தோம். ஆயினும் அவற்றுக்கும் சீனாவுக்கும் இடையில் வர்த்தக தொடர்புகள் நிலவியமைக்கான ஆதாரம் எதுவுமில்லை.

## ஆட்சிமுறை

அரசியல் தலைவனாகவும் ஆன்மீகத் தலைவனாகவும் அரசனே விளங்கினான். அரசன் புராதன மரபின் கீழ் ஆட்சி செய்தான். சில வேளைகளில் அரசன் அண்டை அயலில் வாழ்ந்த கோத்திரக் குழுக்களுடன் மோதவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே ஆட்சியின் மத்திய நிலையம் அடிக்கடி இடம் பெயர்ந்தது. போர் வீரர்களைப் போரில் ஈடுபடுத்துவதிலும் தொழிலாளர்களை கோட்டை மதில்சுவர்களை அமைப்பதிலும் அரச குடும்பத்தினர் கல்லறைகளை அமைப்பதிலும் மன்னன் ஈடுபடுத்தினான்.

இறந்துபோன மூதாதையருக்கு பூஜை, புனஸ்காரங்களைச் செய்வதில் அரசன் கூடிய அக்கறை காட்டினான். இதன்மூலம் ஆட்சி கடமைகளில் அவர்கள் உதவி கிட்டுவதாக நம்பினான்.

## சமய வழிபாடும் நம்பிக்கையும்

மறுபிறப்பு பற்றி சீனாவில் நம்பிக்கை நிலவியது. இறந்துபோன தமது உறவினர் தங்களை அவதானித்துக் கொண்டிருப்பதாகவும், அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது அதிஷ்டத்தை கொண்டுவரும் என்ற நம்பிக்கையும் காணப்பட்டது. இறந்துபோனவர்களுக்காகக் கல்லறைகளும் கட்டப்பட்டன. அரசர்கள் தமது கல்லறைகளுக்காக அதிகமாகச் செலவு செய்தார்கள்.



*மரண சடங்குக்காக பயன்படுத்தப்பட்ட வெண்கலப் பாத்திரம் படம் 1.27*

நெருங்கிய குடும்ப உறவினர்களின் மரணச் சடங்குகளை மிகவும் கரிசனையுடன் மேற்கொண்டனர். இம்மரணச் சடங்குகளுக்காக உணவு வகைகளும் பானங்களும் அதிகமாகத் தேவைப்பட்டன. அவற்றை வைப்பதற்கும், அதிகமான பாத்திரங்கள் தேவைப்பட்டன. ஒரு மரணச் சடங்கின்போது 200க்கும் மேற்பட்ட பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலவேளைகளில் இப்பாத்திரங்களும் கல்லறைகளிலேயே புதைக்கப்பட்டன.


தெய்வங்களுக்கு மேலான மீயுயர் தெய்வங்களும் இருப்பதாக நம்பப்பட்டது. சூரியன், சந்திரன், மழை, வெயில் முதலியனவும் தெய்வ வடிவங்களாகக் கருதப்பட்டன.

## எழுத்துக்கலை


ஆமையோட்டில் எழுதப்பட்டதொரு ஆவணம்
படம் 1.28

ஆமை ஓடுகளிலும் விலங்குகளின் எலும்புகளிலும் சீனர்கள் எழுதி வைத்தனர். இவ்வெழுத்துக்கள் மொசப்பத்தேமிய எகிப்திய எழுத்துக்களைப் போல் வளர்ச்சியடைந்ததாக காணப்படவில்லை. ஒரு கருத்தை விளக்குவதற்கு ஒரு உருவ எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வெழுத்துக்களை வாசிப்பது சிரமமான காரியமாகும்.

## விஞ்ஞானமும் தொழினுட்பமும்


வர்ணம் தீட்டப்பட்ட மட்பாத்திரம்
படம் 1.29

வெண்கலத் தயாரிப்புகள் இந்த நாகரிகத்தில் பிரபலமானவை. வெண்கலப் பொருட்கள் அதிகமாக வைபவங்களின்போது பாவிக்கப்பட்டன. மரணச் சடங்குகளுக்கு அதிகளவில் வெண்கலப் பாத்திரங்கள் தேவைப்பட்டன. அவை மிகப் பெரிய, அதிக பாரமுடைய செதுக்கல் கலையம்சங்களுடன் கூடியனவாகும். இந்த வெண்கலக் கைத்தொழில் திட்டமிடப்பட்ட நுட்பமான முறைகளை உடையதாகக் காணப்பட்டது. வெண்கலச் சுரங்கங்களைக் குடைதல், அதனை சுத்திகரித்தல் கொண்டு செல்லுதல், பாத்திரங்களையும் பொருட்களையும் உற்பத்தி செய்தல் எனும் படிமுறைகளை அது உடையதாகக் காணப்பட்டது.

மட்பாண்டங்கள், பீங்கான்களைத் தயாரிப்பதில் சீனா ஹுவாங்கோ நாகரிகம் நிலவிய காலத்திலேயே பிரசித்தி பெற்று விளங்கியது. அங்கு வர்ணந் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## வைத்தியத்துறை

சீனாவில் வைத்தியத் துறையும் முன்னேற்றம் கண்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்ட 'மம்மி' எனப்படும் பாதுகாக்கப்பட்ட சடலமொன்றின் மண்டையோடு முறையாக வெட்டப்பட்டு பொருத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. இது சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றாக கருதப்படுகின்றது. இந்த மம்மியும் நைல் நதிக் கரையின் பிரமிட்டுக்களில் பாதுகாக்கப்பட்ட மம்மிகளைப் போல் சிதைவடையாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## செயற்பாடு 1.11

3000 ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவில் ஆட்சி செய்த "வுங்க்" அரச வமசத்தின் முதலமைச்சராக உங்களைக் கருதி அம்மன்னன் மரணித்த நிலையில் அம்மரண சடங்கிற்கான நிகழ்ச்சி ஒன்றைத் தயாரிக்கவும்.



சத்திர சிகிச்சைக்காக திறக்கப்பட்டு மீண்டும் மூடப்பட்ட மண்டையோட்டைக் கொண்ட மம்மி
படம் 1.30

## ஒப்படை

நான்கு நதிக்கரை நாகரிகங்களினது பெயரிலும் உங்கள் வகுப்பு மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவினரும் ஏனைய நாகரிகங்களை விடத் தமது நாகரிகமே உயர் பண்புகளைக் கொண்டிருந்தது என்பதற்கான ஆதாரங்களை முன்வைக்கவும். (உங்கள் பாட ஆசிரியரின் வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.)

## சுருக்கக் குறிப்பு

நீர்வளநாகரீகத்தின் தோற்றம் மனித வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. உலகில் தோன்றிய நாகரீகங்கள் அனைத்தும் நதிகளை அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றன. இவைகள் பெரும்பாலும் சமகாலத்தவையாக இருப்பதும் பல ஆசியாக் கண்டத்தில் தோற்றம் பெற்றதும் சிறப்பம்சங்களாகும். அத்தோடு அவைகளிடையே சமநிலை காணப்படுகின்றமை வியப்புக்குரியதாகும்.

மேலும் இந்நாகரீகங்கள் தோன்றி வளர்ச்சியுற்ற காலகட்டத்தில் உலகில் ஏனைய பல நாடுகளில் இடையர்யுகமும், கல்லாயுத யுகமும் நிலவியது. இன்றைக்கு 2000 - 4000ற்கும் இடைப்பட்ட யுகத்தில் நிலவிய இந்நாகரீகம் இத்துணை முன்னேற்றமடைந்து காணப்பட்டமை வியப்புக்குரியதாகும்.

பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த மனித நாகரீகத்திற்கு அடிப்படையாக அமைந்த சில விஞ்ஞான, தொழில் நுட்பக் கண்டு பிடிப்புக்கள் மேற்கூறப்பட்ட நாகரீகங்கள் நிலவிய மண்ணில் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 02 நாகரிகத்தின் பரம்பல்




இப்படத்தில் காட்டப்பட்டுள்ளபடி, கிரேக்கம் என்னும் பெயரால் குறிக்கப்படுவது, அயோனியன் கடலுக்கும் ஈஜியன் கடலுக்கும் இடையே கடலினுள் நீண்டிருக்கும் குடா நாடாகும். அதற்குத் தெற்கே கிரேக்கம் உட்பட ஏனைய தீவுக் கூட்டங்கள் அனைத்தும் இதனைச் சாரும்.

கிரேக்கம் மலைகளினாலான நாடொன்றொகும். இங்குள்ள ஒலிம்பிக் மலை ஏனைய மலைகளைவிட ரம்மியமான தோற்றத்தைக் கொண்டது. அத்தோடு பள்ளத்தாக்குகள், பல்லுருவக் கடற்கரைகளுடன் இதமான காலநிலையும் கொண்ட கிரேக்கம் பொருளாதார நலன்கள் பலவற்றைப் பெற்றுக் கொள்வதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

## ஆரம்பமும் பரம்பலும்

வரலாற்று மூலாதாரங்கள்

- பழங் கதைகள்
- ஹோமரின் 'இலியட்', 'ஒடிசி' எனும் காவியங்கள்
- ஹெசியட்டின் 'வேலையும் நாளும்' என்னும் நூல்
- தொல்பொருட்கள்

வரலாற்று மூலாதாரங்கள் குறிப்பிடும் விதத்தில் கிரேக்க வரலாறு கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகி உள்ளது. அதன் ஆரம்பக்குடிகள் மத்திய ஆசியாவின் ஸ்டெப்ஸ் புல்வெளிகளிலிருந்து வந்த ஆரிய இனத்தவர்கள் என்று நம்பப்படுகின்றது.

## நிர்வாக நடவடிக்கைகள்

ஆரம்பத்தில் குடியேறிய ஆரியர்கள் சிறு கிராமங்களாகத் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். காலக்கிரமத்தில் இக்கிராமங்கள் நகரங்களாக வளர்ச்சியடைந்தன. பின்னர் இவை நகர அரசுகளாக வளர்ச்சி அடைந்தன. கிரேக்க நாகரிகம் இந்நகரங்களை மத்திய நிலையங்களாகக் கொண்டே வளர்ச்சி பெற்றது.

*நகர அரசுகள் என்பது : நகரங்களை மத்தியாகக் கொண்டு நிர்வகிக்கப்பட்ட சிறிய சுதந்திர நிர்வாக முறையாகும்.*

## நகர அரசுகளின் விசேட இயல்புகள்

- சிறிய நிலப்பிரதேசத்தைக் கொண்டவை.
- நகரை மையமாகக் கொண்டு அமைந்தவை.
- குடிமக்கள், பெண்களும் பிள்ளைகளும், அடிமைகள், அந்நியர்கள் என நான்கு தொகுதியினரான மக்களைக் கொண்டிருந்தது.
- குடியுரிமை கிரேக்க ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.
- தலைநகர் 'அக்ரொபொலிஸ்' எனக் குறிப்பிடப்பட்டது. பொருட்களை விற்கவும் தமக்குத் தேவையானவற்றை வாங்கவும் இங்கு ஒன்று கூடினர்.
- ஒவ்வொரு நகர அரசுக்கும் அதிபதியாக ஆண் அல்லது பெண் தெய்வம் ஒன்றிருந்தது.
- அத்தெய்வத்திற்கு அக்ரோபொலிஸின் அதி உயர்ந்த இடத்தில் கோவில் ஒன்று கட்டப்பட்டது. உதாரணமாக எதென்ஸ் நகரத்தின் அதிபதி அதீனா தேவதைக்கு 'பாத்தீனன்' ஆலயம் கட்டப்பட்டிருந்தது.

## ஜனநாயகத்தின் தோற்றம்

இன்றைய உலகில் முக்கிய ஆட்சிமுறையான ஜனநாயகத்தின் பிறப்பிடமாக எதென்ஸ் நகரம் கருதப்படுகின்றது. பராயமடைந்த ஆண்கள் மட்டுமே இங்கு குடிமக்களாகக் கருதப்பட்டனர். நகர அரசுகள் மிகவும் சிறிய அலகுகளாகக் காணப்பட்டமையால் சுதந்திரக்குடிகள் சிறு தொகையினராகவே காணப்பட்டனர். ஆகையால் அதிகாரிகளைத் தெரிவு செய்வதும் அவர்களின் அபிப்பிராயத்திற்கு ஏற்பவே இடம்பெற்றது. அவ்வாறு குடிமக்களின் வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள், மக்களுக்குப் பதில் கூறும் கடமைப்பாடு உடையோராவார்.

எதென்ஸில் உருவான அக்குடியாட்சி 'நேரடி ஜனநாயக' முறையாகக் கருதப்படுகின்றது. இன்று மக்கள், வாக்குரிமையைப் பயன்படுத்தி பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்புவதற்குப் பதிலாக அன்று அதிகாரம் படைத்த அனைவரும் நேரடியாக நிர்வாக விடயங்களில் சம்பந்தப்பட்டனர்.

## விவசாய, வர்த்தக நடவடிக்கைகள்

கிரேக்கத்தின் பிரதான தொழில் விவசாயமாகும். அங்கு பயிரிடப்பட்ட பயிர்களுள் கோதுமையும், பார்லியும் முக்கிய இடம் பெற்றன. இவற்றோடு மத்தியத்தரைக் கடற்காலநிலை காரணமாக திராட்சையும் ஒலிவ்வும் விளைவிக்கப்பட்டன. விவசாய நடவடிக்கைகளுக்காகவும், பாலைப் பெற்றுக் கொள்வதற்காகவும், இறைச்சிக்கா வெள்ளாடுகளும் செம்மறிஆடுகளும் மாடுகளும் வளர்க்கப்பட்டன.

கிரேக்க நகர அரசுகளுள் வர்த்தக நடவடிக்கைகளில் எதென்ஸ் நகரமே முக்கியத்துவம் பெற்றது. அதற்கான முக்கிய காரணம், அங்கு காணப்பட்ட துறைமுகங்களேயாகும். அக்காலத்தில் வர்த்தகம் செய்வது தாழ்ந்த தொழிலாகவே கருதப்பட்டது. ஆகையால் அதில் அந்நியர்கள் ஈடுபட்டனர். எதென்ஸ் வணிகர்கள், மட்பாண்டங்கள், ஒலிவ் எண்ணெய், அழகு சாதனங்கள், வெள்ளியினாலான பொருட்கள் என்பவற்றை ஏற்றுமதி செய்தனர். இந்தியா, இலங்கை, சீனா போன்ற நாடுகளிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

கிரேக்கரான தொலமி உலகப் படத்தை வரைவதற்கான விபரங்களைப் பெற்றுக் கொண்டது வெளிநாட்டு வர்த்தகர்களிடம் இருந்தேயாகும். கிரேக்கர்கள் இலங்கையை 'தப்ரபேன்' எனும் பெயரால் அழைத்தனர்.

## சுதந்திரச் சிந்தனை

கிரேக்கர்கள் அரசியல் பொருளியில் துறைகளில் மட்டுமின்றி கல்வித்-துறையிலும் கூடிய அக்கறை செலுத்தியுள்ளனர் என அறிய முடிகின்றது. அதன் விளைவாக தத்துவ ஞானிகளும் விஞ்ஞானிகளும் அங்கு தோற்றம் பெற்றனர். உலகத்திற்கு கிரேக்கம் வழங்கிய பெருங்கொடையாக இவர்களைக் குறிப்பிடலாம்.

### சுதந்திர சிந்தனையாளர்கள்


**தத்துவஞானிகள்**
- சோக்ரடீஸ்
- பிளேட்டோ
- அரிஸ்டோட்டல்

**விஞ்ஞானிகள்**
- ஹிப்போகிரடிஸ்
- டிமோகிரடிஸ்
- யூக்கிளிட்
- ஆக்கிமிடஸ்
- பைதகரஸ்
- அரடோஸ்தீனீஸ்
- ஹெரக்லீட்ஸ்
- அரிஸ்டாகஸ்

### சோக்ரடீஸ்

வாழ்ந்த காலம் : கி.மு. 469 - 399


சிறப்புக்கள் : எந்தவொரு முடிவையுயோ கருத்தையுயோ ஏற்றுக் கொள்வதற்கு அதனை விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும் என்பது இவரது தத்துவமாகும். போதனையின் மூலமாகவன்றி, கேள்வி - பதில் மூலம் விடயங்களைப் புரிந்து கொள்ளும் கல்வி-முறை ஒன்றை கையாண்டார்.


படம் 2.2

## பிளேட்டோ

வாழ்ந்த காலம் : கி.மு. 429 - 347

சிறப்புக்கள் :



படம் 2.3

- ★ சோக்கிரடீஸின் சிறந்த மாணவராக விளங்கியமை
- ★ சோக்கிரடீஸின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டமை
- ★ முன்மாதிரியான அரசொன்றைப் பற்றிய கருத்துக்களை வழங்குவதற்காக குடியரசு (Republic) (குடியாட்சி) எனும் நூலை ஆக்கியமை.
- ★ 'அக்கடமி' எனும் கல்வி நிலையத்தை நடத்திச் சென்றமை

## அரிஸ்டோடில்

வாழ்ந்த காலம் : கி.மு. 384 - 322

சிறப்புக்கள் :



படம் 2.4

- ★ பிளேட்டோவின் முக்கிய மாணவர்.
- ★ நவீன அரசியல் விஞ்ஞானத்தின் பிதாவாகக் கருதப்படுபவர்.
- ★ பூமி கோள வடிவானது என்பதற்கான காரணங்களை எடுத்துக்காட்டியவர்.
- ★ இவர் ஒரு தத்துவஞானி மட்டுமல்ல. விஞ்ஞானியும் கல்வியியலாளருமாவார்.
- ★ இசை, தாவரவியல், விஞ்ஞானம் முதலிய பல்வேறு விடயங்களிலும் பரந்த அறிவு இவரிடம் காணப்பட்டதால் இவர் ஒரு மகா மேதையாகக் கருதப்பட்டார்.

## விஞ்ஞானிகள்

### ஹிப்போகிரடீஸ் (கி.மு. 460 - 377)

★ மேலைத்தேய வைத்தியத் துறையின் தந்தையாகக் கருத்தப்படுகின்றார்.

★ இன்றைய வைத்தியர்களும் இவரது வாசகங்களையே சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

★ கிரேக்க நாகரிகத்தில் கல்வியை வழங்கியது தனியார் பாடசாலைகளும் தனிப்பட்ட ஆசிரியர்களுமே. உதாரணமாக பிளேட்டோவின் 'அக்கடமி' என்ற நிலையமும் அரிஸ்டோடிலின் 'லைசியம்' என்ற நிலையமுமேயாகும்.

### ஆக்கிமிடிஸ் (கி.மு. 287 - 212)

★ இவர் கணித் துறையில் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்த மேதையாவார்.

★ நீரில் ஒரு பொருளை இட்டால் அப்பொருளின் நிறைக்குச் சமமான அளவு நீர் வெளியேற்றப்படும் என்ற மூலதத்துவத்தை கண்டறிந்தார்.

### செயற்பாடு

*இங்கு தரப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமான தரவுகளைச் சேகரித்து கிரேக்க தத்துவஞானிகள் பற்றிய சிறிய நூல் ஒன்றைத் தயாரிக்குக.*

## சமய நம்பிக்கை

உலகின் ஏனைய நாகரிகங்களைப் போன்றே இயற்கைப் படைப்புகளுக்குத் தெய்வ அந்தஸ்து வழங்கப்பட்டு காற்று, சந்திரன், சமுத்திரம் என்பன வணக்க வழிபாடுகளில் முக்கிய இடம் பெற்றன.

## கிரேக்கர் வணங்கிய ஏனைய தெய்வங்கள்

♦ **பூகோளத்தின் அதிபதி : சியுஸ்**

எல்லாக் கடவுள்களினதும் அதிபதியாக சியுஸைக் கருதினர். ஹொரானா எனும் பெண் தெய்வம் அவரது மனைவியாவாள். அதீனா மகளாவாள். பூகோளத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாக அவர்கள் கருதிய ஹர்கியூலிஸ் மகனாவார். ஒலிம்பிக் விளையாட்டினை ஆரம்பிக்கும்போது முதலிடம் சியுஸ் தெய்வத்திற்கே வழங்கப்பட்டது.

சூரியக் கடவுளாக அப்பலோ தெய்வமும், சமுத்திரக் கடவுளாக பொசைடன் தெய்வமும் முக்கியத்துவமும் பெற்றனர்.

♦ **வணக்கத்திற்குரிய பெண் தெய்வங்கள்**

அக்காலக் கிரேக்கர்கள் ஆண் தெய்வங்களை மட்டுமல்ல பெண் தெய்வங்களையும் வழிப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களால் வணங்கப்பட்ட அவ்வாறான இரு தெய்வங்களை ஹெரானாவையும் அதீனாவையும் குறிப்பிடலாம்.

I ஹோரானா : டைடேன் என்னும் பராக்கிரமசாலியின் மகளான இவள், சியுஸ் தெய்வத்தின் மனைவியுமாவார். எரஸ் தெய்வம், அவளின் மகனாவான். யுத்தத்தின் அதிபதியாக இவன் கருதப்படுகிறான். அத்தோடு பெண்தெய்வங்களுள் பொறாமை மிக்கவளாக இவள் கருதப்படுகிறாள்.

II அதீனா : சியுஸ் தெய்வத்தின் அதீத விருப்பத்திற்குரிய மகளே அதீனா. அவளின் சிறப்பான ஆயுதம் ஈட்டி (Thunder bolt) ஆகும். இவளுக்காக ஏதென்ஸில் ஆலயங்கள் பல நிர்மாணிக்கப்பட்டன. கீழே தரப்பட்டுள்ள படத்தில் ஏதென்ஸில் அமைந்திருந்த பாத்தீனன் ஆலயம் காணப்படுகின்றது. (படம் 2.5)



*பாத்தீனன் ஆலயம்*
*படம் 2.5*

அவர்கள் தமது கடவுளர்களுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டனர். ஒலிம்பஸ் மலை உச்சியில் தெய்வங்களின் வாழிடங்கள் இருப்பதாகக் கருதும் நம்பிக்கை அவர்கள் மத்தியில் காணப்பட்டது. கிரேக்க சமய விடயங்களில் முக்கியமான பண்பாகக் கருதத்தக்கது குருமார்கள் என்ற கூட்டத்தினர் காணப்படாமையாகும்.

அவர்களுடைய வழிபாடுகளில் பலியிடுதல் முக்கியமானதொன்றாகும். பிராணிகளைப் பலியிட்டு அவற்றின் மாமிசத்தை உண்பது கிரேக்கர்களின் பழக்கமாகும்.


## கலைகளும் கட்டடங்களும்

கட்டட நிர்மாணத்தில் உலக வரலாற்றில் கிரேக்கர்கள் முக்கிய இடமொன்றை வகிக்கின்றனர். நன்கு செப்பனிடப்பட்ட சுண்ணக்கற்களாலும், பளிங்குக்கற்களாலும் கட்டடங்கள் கட்டுவதில் மிகவும் புகழ் பெற்று இருந்தனர். 'பெரிக்கிளிஸின்' ஆட்சிக் காலம் கட்டட நிர்மாணத்தில் குறிப்பிடத்தக்க காலமாகும்.

நகரங்களில் பெரும்பாலான கட்டடங்கள் மாடி வீடுகளாக இருந்ததோடு, அவை எல்லா வசதிகளுடன் கூடியதாயும் காணப்பட்டன. தெய்வங்களுக்காக அழகான ஆலயங்களையும், பாதுகாப்பதற்கான கோட்டைகளையும் மிகவும் பலம் வாய்ந்ததாக நிர்மாணித்தனர்.

## சிற்பக்கலை

கிரேக்கர்கள் சிற்பங்களை வடிவமைப்பதில் வல்லமை மிக்கோராய் இருந்ததாக அறிய முடிகின்றது. மனித உடலை சிலையாக செதுக்குவதற்கு முன்னர், அவர்கள் இது தொடர்பாக நீண்ட நாட்களுக்கு அவதானிப்புகளை மேற்கொண்டுள்ளனர். சிலை ஒன்றை செதுக்கும் போது எலும்புகள், சதை இழையங்கள் மற்றும் உடலின் ஒவ்வொரு அங்கங்களிலும் கவனத்தைச் செலுத்தினர். 'பரிதிவட்டம் வீசுபவனின் சிலை' இவற்றுக்கான ஆதாரமாக குறிப்பிடத்தக்கதாகும்.



*பரிதி எறிபவனின் சிலை*
*படம் 2.6*

### செயற்பாடு

*கிரேக்கக் கலைஞர்களால் செதுக்கப்பட்ட ஏனைய சிலைகள் பற்றிய விடயங்களைச் சேகரித்து அப்படைப்புகள் தொடர்பாகவும், படைப்பாளிகளின் பெயர்களையும் குறித்து சிறு நூல் ஒன்றைத் தயாரிக்குக.*

## மக்கள் வாழ்க்கை

கிரேக்க சமுதாயத்தில் சிறிய அலகு குடும்பமாகும். மக்களில் பெரும்பாலானோரும் கிராமங்களிலேயே வசித்தனர். ஆடம்பரமான பொருட்களின் பாவனை குறைவானபடியால் கிரேக்கர்களிடையே பெருமளவில் சமத்துவம் நிலவியதை காணக்கூடியதாக இருந்தது.

## உணவு, உடை, வீடு

- ★ பெரும்பான்மையோரான விவசாயிகளின் வீடுகள் சிறியவையாகும்.
- ★ நகரங்களில் மாடி வீடுகள் காணப்பட்டன.
- ★ நடுவில் முற்றமும் அதைச் சூழ அறைகள், சமையலறை, களஞ்சிய அறை என்பன காணப்பட்டன.
- ★ ஆடைகள் எளிமையாகவும் இயல்பாகவும் காணப்பட்டன.
- ★ மாமிசம் சிற்றளவிலேயே உணவாகக் கொள்ளப்பட்டது. பெரும்பாலும் தெய்வ பூஜைகள் இடம்பெறும் வேளைகளில் நீர் கலக்கப்பட்ட வைன் ஜனரஞ்சகமான பானமாகக் காணப்பட்டது.
- ★ வெங்காயம், மரக்கறிகள், மீன், உணவுகள், பார்லிக்கஞ்சி என்பன பிரதான உணாகக் காணப்பட்டன.

## விளையாட்டு

- ★ கிரேக்க நாகரிகத்தில் விளையாட்டு முக்கிய இடத்தை வகித்தது.
- ★ அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக நின்று நிலவும் ஒலிம்பிக் விளையாட்டு விழா, அன்றைய கிரேக்க நாகரிகத்தின்போது மிகவும் கோலாகலமாக நடத்தப்பட்டது.
- ★ ஓடுதல், பாரந்தூக்குதல், பரிதிவட்டம் வீசுதல், நீந்துதல் போன்ற பல்வேறு விளையாட்டுக்களும், ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெற்றன.

## இலக்கியம்

இன்றுபோல் அன்றும் கவிதை, உரைநடை இலக்கியங்கள் காணப்பட்டன. கிரேக்க இலக்கியங்கள் முன்னணியில் நிகழ்ந்ததென்பதற்கு அநேக சான்றுகள் உள்ளன. ஹோமரின் இலியட் மற்றும் ஒடிசி ஆகிய இரண்டும் பிரசித்தி பெற்ற வீர காவியங்களாகும்.

## மகா காவியங்கள்

- ★ இலியட் : கிரேக்கர்கள் டிரோய் நகரத்திற்கு எதிராகப் புரிந்த போர் சம்பந்தப்பட்ட கதைகளால் ஆனது.
- ★ ஒடிஸி : டிரோய் சண்டைக்குச் சென்ற கிரேக்க இளவசரன் ஒருவன், போரின் பின்னர் எதிர்நோக்கிய கஷ்டங்களை விபரிக்கின்றது.

## உரைநடைகள்

கிரேக்க பாரஸீக யுத்தத்தைப் பின்னணியாக வைத்து நூல் ஒன்றை எழுதிய ஹெரடோட்டஸ் வரலாற்றின் பிதாவாகக் கருதப்படுகிறார். அவர் முக்கியமான உரைநடை எழுத்தாளராகவும் திகழ்ந்தார். தியுசிட்டீஸ"ம் அரிஸ்டோட்டலும் முக்கியமான உரைநடை எழுத்தாளர்களாவர்.

## நாடக எழுத்தாளர்கள்

ஈஸ்கீலஸ், சொபோக்ளிஸ், யுருபீடிஸ், எரிஸ்டோபெனிஸ் என்போர் நாடக எழுத்தாளர்களாகவும், தயாரிப்பாளர்களாகவும் புகழ்பெற்றிருந்தனர். இன்று பிரபல்யமாக விளங்கும் நகைச்சுவை நாடகங்கள், சாகச நாடகங்கள் என்பனவும் அக்காலத்திலும் காணப்பட்டன. ''செடர் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாடக வகைகளும் அன்று பிரபலமாக இருந்தன.

## மகா அலெக்சாந்தரின் எழுச்சியும் பேரரசின் பரம்பலும்

மெஸிடோனியாவின் பிலிப் மன்னனின் நோக்கமாக இருந்தது கிரேக்க மக்களின் ஆதரவைப் பெற்று, அக்காலத்தில் பேரரசொன்றாக உருவாக்கிக் கொண்டிருந்த பாரசீகத்தைத் தாக்குவதாகும். அவருடைய எண்ணம் பூர்த்தியடைய முன்னர் கொலைகாரன் ஒருவனால் மரணத்தைத் தழுவினார்.

அதன்பின் மன்னனான பிலிப்பின் மகனான அலெக்ஸாந்தருக்கு சிம்மாசனத்துடன் பெரும்படை ஒன்றும் கிடைக்கப் பெற்றது. அப்போது அவருடைய வயது இருபதாகும் என்றாலும் திறமைவாய்ந்த தளபதியான அவர் கிளர்ச்சி செய்த கிரேக்கர்களை அடக்கியதே முதலில் செய்த விடயமாகும்.

அதன் பின்னர் சின்னாசியா, ஆபிரிக்கா, மத்திய தரைக்கடலின் கிழக்குக் கடற்கரை, எகிப்து, பபிலோனியா, பாரஸீகம், வடமேற்கு இந்தியா ஆகிய பிரதேசங்களில் பெரும்பரப்பை வெற்றிக் கொண்டு தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார். அலெக்ஸாந்தரின் யுத்த நடவடிக்கைகளின் விளைவுகளாவன.

★ நைல்நதிக் கழிமுகத்தை அண்டி அலெக்ஸாந்திரியா நகரத்தை நிர்மாணித்தமை

★ கிரேக்கத்தை முதன்முறையாக ஐக்கியப்படுத்தியமை. கிரேக்கரின் கலைகளின் செல்வாக்கை வடமேற்கு இந்தியாவரை வியாபிக்கச் செய்தமை

★ ஆய்வுகளில் ஈடுபட்ட கிரேக்கர்களின் மனதில் புதிய தத்துவங்கள் தோற்றம் பெற்றமை.

★ கிரேக்க ஆதிக்கம் பல நாடுகளில் பரவியமை

### கிரேக்கர்களிடமிருந்து

- ★ ஜனநாயக ஆட்சிமுறை
- ★ நகர , கட்டட நிர்மாணங்கள்
- ★ கணிதமுறைகள்
- ★ வைத்திய விஞ்ஞானம்
- ★ வானசாஸ்திரம்
- ★ பூகோள படம்
- ★ ஒலிம்பிக் விளையாட்டு
- ★ மல்யுத்தம், பரிதி வீசுதல், ஈட்டி எறிதல், குதிரை ஓட்டம் ஆகிய விளையாட்டுக்கள்
- ★ உடற்பயிற்சி
- ★ நாடகக் கலையும், மகா காவியங்களும் கிடைக்கப்பெற்றன.

#### செயற்பாடு

நூலகப் புத்தகங்களிலிருந்து விடயங்களைச் சேகரித்து மகா அலெக்ஸாந்தர் பற்றி சுவர்ப் புத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுக.
நவீன உலகிற்குக் கிரேக்க நாகரிகம் மூலம் பெறப்பட்டவைகளைப் பட்டியல் படுத்துக.

#### பயிற்சி

01. கிரேக்கத்தில் இருந்த நகர அரசுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
02. கிரேக்க நாட்டில் குடிமக்களாகக் கருதப்பட்டோர் யாவர்?
03. ஜனநாயகம் ஆரம்பமாகிய நகர அரசு எது?
04. கிரேக்க தெய்வங்களின் மற்றும் தேவதைகளின் பெயர்களைத் தருக.
05. கிரேக்க இலக்கியத்தின் வீர காவியங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
06. கிரேக்கர்களிடையே பிரபல்யம் பெற்ற விளையாட்டுக்கள் யாவை?
07. உலகப் படத்தை முதலில் வரைந்தவர் யார்?
08. கிரேக்க தத்துவஞானிகள் இருவரது பெயர்களை தருக.
09. இலக்கிய பெருங் காவியங்கள் எழுதியவர்கள் இருவரின் பெயரைத் தருக.
10. புவி கோள வடிவினது எனக் கண்டறிந்தவர் யார்?

## உரோம்

### ஆரம்பமும் பரம்பலும்

உரோமானிய பழங்கதையின்படி உரோம் கட்டியெழுப்பப்பட்டது. ரொமியுலஸ் மற்றும் ரீமஸ் என்னும் இரட்டைச் சகோதரர்களில் ஒருவனான ரொமியுலஸால் ஆகும். அதனால் அது உரோம் என்னும் பெயரைப் பெற்றது. அது கி.மு 753 இல் உருவாக்கப்பட்டது.

இத்தாலி முழுவதும் பரவியிருந்த ஆரியக் குடிகள் என நம்பப்படும் இலத்தீனியர்களின் நிர்வாக மத்தியஸ்தானமாகவும் தலைநகராகவும் உரோம் பிரசித்தி பெற்றிருந்தது. ஆகையால் பிற்காலத்தில் இத்தாலியர்களை இலத்தீனியர்கள் என்றும் குறிப்பிடப்பட்டனர்.

உரோம் நகரம் மத்திய தரைக் கடலுக்குள் நீண்டிருக்கும் குடாநாட்டின் கடற்கரைக்கு அண்மையில் அமைந்திருக்கின்றது. அதன் எல்லைகளைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

வடக்கு எல்லை - அல்ப்ஸ் மலைத் தொடர்

தெற்கு எல்லை - மத்தியத் தரைக் கடல்

கிழக்கு எல்லை - எட்ரியாட்டிக் கடல்

மேற்கு எல்லை - மத்தியத் தரைக் கடல்

### ஆட்சி முறை

ஆரம்பத்தில் சமூக அமைப்பு குலம் கோத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. என்றாலும் உரோம் நகரம் உருவாக்கப்பட்டு குறுகிய காலத்தினுள் அதன் ஆட்சி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மன்னர் ஆட்சி முறைமை உருவாக்கப்பட்டு முந்நூறு ஆண்டுகள் கடந்த பின்னர் அரச குடும்பத்தினர் தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்கினர். அதனால் கவலையுற்ற உரோமனியர்கள் அவர்களை அடித்துவிரட்டி, திரும்பவும் எச்சந்தர்ப்பத்திலும் உரோமின் ஆட்சி அதிகாரத்தை மன்னர் ஒருவருக்கு வழங்குவதில்லை என்று தீர்மானித்து கி.மு 509 இல் குழு ஆட்சி முறை ஒன்றை செயற்படுத்தினர்.

### உரோம குழு ஆட்சி

குழு ஆட்சி முறையில் கூடிய அதிகாரம் 'கொன்ஸல்' என அழைக்கப்பட்ட அதிகாரிகள் இருவர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்களின் ஆட்சி அதிகாரம் ஓராண்டுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அக்கால கட்டத்தில் அவர்கள் படைத்தளபதியாகவும் நீதிபதியாகவும் செயற்பட வேண்டி இருந்தது.


'கொன்ஸல்கள்' மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். குழு ஆட்சி முறையில் செனட் சபைக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது. இச்சபையின் அங்கத்தவர்கள் மூத்த குடிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

## பேரரசு

உரோம் கட்டியெழுப்பப்பட்ட ஆரம்ப காலத்தின்போது அவர்களுக்கு அதைச் சூழ்ந்த பிரதேசம் மட்டுமே உரிமையாக இருந்தது, கி.பி. 270 அளவில் முழு இத்தாலிக் குடா நாட்டையும், ரோமர்கள் தமதாக்கிக் கொண்டனர். அதன் பிறகு அவர்கள் ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் வட ஆபிரிக்கப் பெரும் பிரதேசங்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றனர்.

## உரோமப் பேரரசர்கள்

### 01. ஜுலியஸ் சீஸர்



*ஜூலியஸ் சீஸர்*
*படம் 2.7*

★ கி.மு. 59 - 44 காலத்தில் ஆண்ட இவர் கீர்த்தி மிக்க மன்னராவார்.

★ பேரரசராகுவதற்கு முன்னர் கோல் என அழைக்கப்பட்ட இன்றைய பிரான்சின் ஆளுநராக விளங்கினார். உரோமானிய அரசை ரைன் நதிவரை விஸ்தரித்தார்.

★ ஜுலியஸ் சீஸரின் வெற்றிகளால் பொம்பை என்பவன் இவர் மீது பொறாமையுற்றான்.

★ இங்கிலாந்தை வெற்றி கொண்டதன் பின்னர் ரோமானியர்கள் இவருக்கு 'கொன்ஸல்' பதவியை வழங்கினார்.

★ பேரரசை நிர்வகிப்பதற்கு பொருத்தமான நிர்வாகமுறை ஒன்றை உருவாக்கியதோடு, செனட் சபையின் அங்கத்தவர் தொகையையும் அதிகரித்தார்.

**செயற்பாடு**

*ஜூலியஸ் சீஸரைப் பற்றிய பல்வேறு விடயங்களை ஒன்று சேர்த்து சஞ்சிகை ஒன்றிற்கு எழுதுங்கள்.*

### 02. ஒகஸ்டஸ் சீஸர்

உரோமப் பேரரசின் **பொற்காலம்** இவரது ஆட்சியின்போது உதயமானது. செனட் சபையின் விருப்புக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்ட அவர் மக்களின் உரிமைகள் மீளப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**வல்லமைமிக்க பேரரசரான இவரது சேவைகள் வருமாறு**

- ★ அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டமை
- ★ பொதுக் கட்டடங்கள், பாதைகள், பாலங்கள், நீர்ச்சில்லுகள், அரங்கங்கள் ஆகியவற்றை உருவாக்கியமை.
- ★ இவரது ஆக்கங்கள் 'கொலோசியம்' அரங்கம் 'கெரகெல்லா' நீச்சல் தடாகம் என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

## 03. நீரோ மன்னன்



நீரோ மன்னன்
படம் 2.8

- ★ கி.மு 37 டிசம்பர் மாதம் 15ல் பிறந்தார்.
- ★ கி.பி. 54-68 வரை இவன் ரோமப் பேரரசனாகத் திகழ்ந்தான்.
- ★ 17 வது வயதில் முதலாம் குளோடியஸ் பேரரசனின் மரணத்தின் பின் பதவியேற்றான்.
- ★ தனது தாய், மனைவி உட்பட பெருந்தொகையானோரைக் கொன்றான்.
- ★ உரோமை ஆண்ட மிக மோசமான அரசனாவான்.
- ★ இவன் இசைப்பிரியனாக திகழ்ந்தான்.
- ★ நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்த போது உரோம் தீப்பற்றி எரிந்தது.
- ★ உரோம் தீப்பற்றியதற்கு கிறிஸ்தவ பக்தர்கள் மீது குற்றஞ்சாட்டி மிருகத்தனமாக அவர்களைக் கொன்றழித்தான்.

## 04. கெரகல்லா பேரரசன்

- ★ கி.பி 188 - 217 உரோமை ஆண்ட பேரரசனின் உண்மையான பெயர் மார்கஸ் ஔரேலியஸ் அந்தோனியஸ் என்பதாகும்.
- ★ அவன் கெரகல்லா பெயரில் அழைக்கப்பட்டதற்கு காரணம் கோல் நாட்டில் கெரகல்லா என்ற பெயரை உடைய ஆடையை உரோமானியர்களுக்கு அறிமுகம் செய்தமையாலாகும்.
- ★ கி.பி 212 ஆண்டில் அவர் அனைத்து மக்களுக்கும் ரோமானியக் குடியுரிமையை வழங்கினார்.

### 05. மகா கொன்ஸ்டன்தைன் பேரரசன் (கி.பி 274 - 337)

★ இவர் கி.பி 306ல் பேரரசனாகப் பதவியேற்றார்.

★ கி.பி 306 - 337 வரை உரோமை ஆட்சி செய்தார்

★ கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றிய முதலாவது பேரரசராகத் திகழ்ந்தமை முக்கியத்துவத்துக்குரியதாகும்.

★ கி.பி. 330 ஆம் ஆண்டில் மீளவும் இரண்டு பகுதிகளாக பிரிந்திருந்த உரோமானியப் பேரரசை ஒன்றுபடுத்தினார்.

★ அதிலிருந்து 1453 ஆம் ஆண்டுவரை கிழக்கு ரோமப் பேரரசின் தலைநகராக அது திகழ்ந்தது.

### 06. ஜஸ்டீனியன் பேரரசன்

★ ஜஸ்டீனியன் பேரரசனே உலகின் முக்கியமான சட்டக்கோவையான ஜஸ்டீனியன் சட்டக்கோவையை அறிமுகப்படுத்திய மன்னனாவான்.

## சட்டமும் சட்டத்தின் ஆட்சியும்

புராதன உரோமானியர்களிடம் இருந்து நவீன உலகிற்கு கிடைத்த பெரும் பொக்கிஷமாக உரோமானியச் சட்டமுறை கருதத்தக்கது. கி.மு. 150 இல் ஆரம்பமான உரோமானியச் சட்டங்கள் செப்பேடுகளில் எழுதப்பட்டு வர்த்தக மத்திய நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## ரோமச் சட்டங்களின் இயல்புகள்

★ வழக்கை விசாரித்தல்.

★ சாட்சிகளை ஒப்புவித்தல்.

★ ஜூரி சபையின் மூலம் இறுதித் தீர்ப்பு வழங்கல்.

★ சந்தேக நபர் குற்றவாளியாகக் காணப்படும்வரை அவர் நிரபராதியாகக் கருதப்பட்டு தண்டனை வழங்குவதிலிருந்து தடுக்கப்படல்.

★ சட்டத்தின் முன் அனைத்து மக்களும் சமத்துவமாக மதிக்கப்பட்டமை.

டச்சுக்காரர் இலங்கையின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றி ஆட்சியை நிலை நிறுத்திய பின்னர் இலங்கையிலும் உரோமானிய டச்சு சட்டத்தை அறிமுகப்படுத்தினர். எனவே இது உரோமன் டச்சு சட்டம் என வழங்கப்படுகின்றது.

## சமயம்

உரோம் உருவான ஆரம்ப காலகட்டத்தில் அவர்களுக்கென்று முறையாக உருவாக்கப்பட்ட சமயம் ஒன்று இருக்கவில்லை. உலகில் காணப்பட்ட பழைய கலாசாரங்களைப் போன்று இவர்களும் வெயில், மழை, காற்று, இடி, மின்னல் போன்ற இயற்கையின் நிகழ்வுகளுக்கு இறைத்தன்மை அளித்து வணங்கி வரலாயினர். பிற்காலத்தில் தெய்வ அந்தஸ்துப் பெற்ற சில இயற்கைப் படைப்புகளுக்கு உருவமளித்து வணங்குதல் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது.

அவர்களது வழிபாடுகளில் முக்கிய இடம் பெற்றுக் கொண்ட தெய்வங்களாவன

- ★ ஜுப்பிட்டர் - வானத்தின் அதிபதி
- ★ மினர்வா - கைத்தொழில்களுக்கு அதிபதி / (தேவதை)
- ★ மார்ஸ் - யுத்தத்திற்கு அதிபதி
- ★ செரேஸ் - நல்ல விளைச்சலுக்கு அதிபதி (தேவதை)
- ★ வீனஸ் - காதலுக்கு அதிபதி
- ★ நெப்டியூன் - கடலுக்கு அதிபதி

உரோமானியப் பேரரசுக்கு பெருந்தொண்டாற்றிய பேரரசர்களும் கடவுளாகக் கருதப்படும் போக்கு மக்களிடையே பரவத் தொடங்கியது. இதன்படி உரோமானியர்கள் ஆன்மீக திருப்தியைப் பெற பல்வேறு தெய்வங்களை வணங்கினர் எனத் தெரிய வருகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் தோற்றம் பெற்ற கிறிஸ்தவம் அவர்களுக்கு புதிய சமயமாக அமைவதில் வெற்றி பெற்றது. கி.பி 3ம் நூற்றாண்டில் உரோம இராச்சியம் பெரும் பிரதேசங்களில் கிறிஸ்தவ மதம் பரவியது. உரோம பேரரசன் கிறிஸ்தவ மதத்தை அழிக்க செய்த பிரயத்தனைகள் வெற்றி பெறவில்லை. அதன் பின் உரோமப் பேரரசின் அரச மதமாக கிறிஸ்தவ மதம் கொண்டுவரப்பட்டது.

உரோம சாம்ராச்சியத்தில் கிறிஸ்தவ சமயம் பரவுதல் பற்றிய மேலதிக விபரங்களை ஐந்தாம் அத்தியாயத்தில் கற்கலாம்.

## வர்த்தகம்

கீழைத்தேய மேலைத்தேய வர்த்தகத்தில் உரோம் மத்திய நிலையமாய் அமைந்து பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. அவர்களின் பிரதான வர்த்தக நகரமாக அலெக்ஸாந்திரியா திகழ்ந்தது. இவ்வர்த்தக நகரை மையமாகக் கொண்டு மத்தியத் தரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளுடனும் இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடு களுடனும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இலங்கையின் அநுராதபுர காலத்தில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருந்த நாடுகளில் உரோம் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்கிறது. அவர்கள் ஆபரண உற்பத்திக்குத் தேவையான முத்து, மாணிக்கம், யானை என்பவற்றை இலங்கையில் இருந்தே தருவித்துக் கொண்டனர். பாதிகாபய அரசன் இலங்கை வர்த்தகத் தூதுக்குழுவை ரோமுக்கு அனுப்பி, செம்பவளங்களைப் பெற்று அவற்றைக் கொண்டு ரூவன்வெலிசாயவை அலங்கரித்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல உரோமானியப் பேரரசன் குளோடியசை சந்திக்க இன்னுமொரு தூதுக் குழுவினர் சென்றதாக பிளினியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ரோமானியர்கள் அவர்களுக்குத் தேவையான பட்டுப்புடைவை, வாசனைப் பொருட்கள், பீங்கான் பாத்திரங்கள், அழகுசாதனங்கள், மருந்துவகைகள் என்பவற்றை சீனாவில் இருந்து தருவித்துக் கொண்டனர்.

இவ்வாறு இந்தியா, சீனா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து பெற்றுக் கொண்ட வியாபாரப் பண்டங்களை ஐரோப்பாவில் விற்றுப் பெருஞ் செல்வதைச் சேகரித்துக் கொள்ள உரோமர்களால் முடியுமாய் இருந்தது.

வர்த்தக நடவடிக்கைகளில் உரோம நாணயம் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளுக்குரிய உரோம நாணயங்கள் பெருமளவில் மாந்தோட்டம், கற்பிட்டி, மாத்தறை, தெவிநுவர ஆகிய துறைமுகங்களிலிருந்து மட்டுமல்லாது அநுராதபுரம், சிகிரியா, மிஹிந்தலை போன்ற உள்நாட்டு நகரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1950 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது திஸ்ஸ மஹாராமையில் தெபர வாவியில் பெருமளவு உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

### செயற்பாடு

*1. உரோமானியர் இலங்கையுடன் வர்த்தகத்தை மேற்கொண்ட துறைமுகங்களை இலங்கைப் படமொன்றில் குறித்துக் காட்டுக.*

*2. உரோமப் பேரரசனக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற வர்த்தக தொடர்புகள் பற்றி பாடசாலை சஞ்சிகைக்கு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும்.*

## மக்கள் வாழ்க்கை

உரோமானியர்களிடையே குடும்பம் சமூகத்தின் முக்கிய அலகாகக் கருதப்பட்டது. தந்தையே குடும்பத் தலைவனாகத் திகழ்ந்தமையால் அனைவரும் அவரது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். பெற்றோருக்குப் பிள்ளைகள் கீழ்ப்படிந்து நடப்பது உரோம சமூகத்தில் முக்கியத்துவமான பண்பாகக் காணப்பட்டது. இத்தன்மை பண்பார்ந்த சமூகமொன்று உருவாவதற்கு அடிப்படை அம்சமாகக் காணப்பட்டது.

### உரோம சமூகத்தில் பெண்கள்

★ பெண்கள் சமூகத்தில் முக்கிய அங்கமாவர்.

★ தாயை மரியாதைக்குரியவளாகக் கருதினர்.

★ ஆண்களுடன் சம அந்தஸ்து பெண்களுக்கு வழங்கப்பட்டது.

★ குடுப்பத்திலும் சமூகத்திலும் பெண்களுக்கு கௌரவமான இடம் வழங்கப்பட்டது.

### கல்வி

உரோமானியர்கள் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கும் பெரும் ஆர்வம் காட்டினர். உரோமானியரின் கல்வி நடவடிக்கைகளில் எழுதுதல், வாசித்தல், விபரித்தல், என்பன முக்கியத்துவம் மிக்கதாய் இருந்தன. முக்கியமான பாடங்களாக தர்க்கவியல், கணிதம், விஞ்ஞானம், வைத்தியம் என்பன காணப்பட்டன.

### விஞ்ஞான அறிவு

உரோமானியர்கள் வைத்திய நடவடிக்கைகளுக்கு விசேட கவனத்தைச் செலுத்தினர். அதற்காக நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க தகுதி வாய்ந்த வைத்தியர்களை சேவைக்கு அமர்த்தினர். வெளிவாரியாக வைத்திய சிகிச்சை பெறுவதற்கு பல்வேறு இடங்களிலும் வைத்திய நிலையங்களை நிறுவினர். இந்தக் காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற வைத்தியர் கலன் ஆவார். அவர் கிரேக்க மருத்துவ விஞ்ஞானம் சம்பந்தமாக 500 இற்கும் மேற்பட்ட நூல்களை ஆக்கியுள்ளார்.

அலெக்ஸ்சாந்திரியாவின் வானியல் விஞ்ஞானியான சொசிகினஸ் என்பவரால் செய்யப்பட்ட ஜூலியஸ் நாட்காட்டியின் அறிமுகம் உரோமானியர்களின் விஞ்ஞான அறிவுக்கு இன்னொரு அத்தாட்சியாகும்.

**ஜூலியஸ் நாட்காட்டி என்பது :**

ஆண்டிற்கான நாட்களை 365.25 எனக் கணித்து நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நெட்டாண்டாகக் கொள்ளப்படுதல் ஆகும்.

### கட்டடக் கலை

பிரமாண்டமான கட்டடங்களை நிர்மாணிப்பதில் உரோமர்கள் முக்கியத்துவத்துகுரி யவர்களாவர். வில் வடிவில் வளைவுகள் கோளவடிவமான உச்சிகளுடன் கூடிய கட்டடங்களை நிர்மாணிப்பதில் இவர்கள் வல்லவராய்

இருந்தனர். சுகபோக வாழ்வில் நாட்டம் உடையவர்களாக அவர்கள் இருந்தமையால் கட்டட நிர்மாணத்திலும் அதன் பிரதிபலிப்புத் தென்பட்டது ஆகையால் கட்டடங்கள் கூட பிரமாண்டமானதாகக் காணப்பட்டன.

உரோம கட்டடக் கலையின் மறக்கமுடியாத நிர்மாணங்களாக பாதினன் கட்டடங்கள் தேவாலயம், கொலோசியம் விளையாட்டரங்கு, நிமிஸின் ஆலயம், ஸ்பிலிட் நகரில் பேரரசன் டயோக்ளிஸன் மாளிகை, வர்த்தக மத்திய நிலையமான பெஸிலிகா கட்டடம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.



கொலோசியம் விளையாட்டரங்கு
படம் 2.9

உரோமர்கள் முறையான பெருந்தெருக்களை அமைப்பதில் வல்லவர்களாய்க் காணப்பட்டனர். முழுப் பேரரசும் பெருந்தெருக்களால் தலைநகரத்துடன் இணைக்கப்பட்டிருந்தன.

## இலக்கியமும் கலைகளும்

உரோமானிய இலக்கியம், கிரேக்க இலக்கியத்தை முன்னோடியாகக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. இலக்கியத்தின் மொழி இலத்தீன் ஆக இருந்தது. இலத்தீனின் பொற்காலம் உதயமானது ஒகஸ்டஸ் பேரரசரின் காலத்திலாகும்.

உரோமர்களுக்கு சித்திரக் கலையில் அற்புதமான ஆற்றல் இருந்தது. விசேடமாக நிறப்பயன்பாட்டிலும், இருளையும் ஒளியையும் காட்டுவதில் அதிக கரிசனை செலுத்தியமைக்கு நேபிள்ஸ் அருங்காட்சியகத்தின் சித்திரங்கள் சான்று பகர்கின்றன. கிரேக்கர்களைப் போன்றே மட்பாண்டங்களை அழுகுபடுத்துவதற்காகவும் இவர்கள் சித்திரங்களை வரைந்துள்ளனர். அத்தோடு படைப்பின் இயல்பு துலங்கும் வண்ணம் அவர்கள் சிற்பங்களைப் படைப்பதிலும் திறமை பெற்றவர்களாக இருந்தனர். உதாரணமாக : ஒகஸ்டஸ் பேரரசனினது சிலையைக் குறிப்பிடலாம்.

## உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

* அரசுரிமை தொடர்பான தெளிவான கொள்கை ஒன்றில்லாமை.
* ஜேர்மனிய கோத்திரங்களைச் சார்ந்த மக்கள் மீது ஆக்கிரமிப்பு
* இராணுவத்திடம் காணப்பட்ட எல்லையற்ற அதிகாரமும் அவர்களின் ஒழுக்கச் சீர்கேடும்.
* பலவீனமான தலைமை.
* உள்நாட்டு யுத்தத்தால் தானிய உற்பத்தி குறைந்து போனமை.
* தகுதியற்றவர்களின் பேரரசின் நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டமை.
* கூடியளவு வரி வசூலிக்கும் கொள்கை.
* ஏழை - பணக்காரர் இடையே காணப்பட்ட பெரும் ஏற்றத்தாழ்வு.

## பயிற்சி

01. ரோமை அமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு புவியியல் காரணிகளைக் குறிப்பிடுக.

02. உரோமாபுரி நகரம் எந்த நதிக்கரையோரத்தில் அமைந்துள்ளது?

03. உரோமானிய குழு ஆட்சி பற்றி சுருக்கமான அறிமுகம் ஒன்றைச் செய்க.

04. நீர் விரும்பிய பேரரசர் ஒருவரைப் பற்றி கட்டுரை வரைக.

05. உரோமர்கள் எங்களிடமிருந்தும் நாம் உரோமர்களிடமிருந்தும் பெற்ற வியாபாரப் பொருட்களைத் தனித்தனியே பட்டியலிடுக.

06. இலங்கையில் உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களைப் புறவுருப் படமொன்றில் குறித்துக் காட்டுக.

07. உரோமப் பேரரசு வீழ்ச்சியுற செல்வாக்கு செலுத்திய பொருளாதாரக் காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக.

## இந்தியா

### மூலாதாரங்கள்

* வேதங்கள் (இருக்கு, யசுர், சாமம், அதர்வனம்)
* பிராமணங்கள்
* உபநிடதங்கள்
* புராணங்கள்
* மகாபாரதம், இராமயணம் போன்ற காவியங்கள்

பாரதம், ஜம்புத்தீபம் என அழைக்கப்பட்ட இந்தியாவில் சிந்து கங்கைச் சமவெளிகளில் ஆரியர்கள் குடியேறினார்கள். கி.மு 1500 ஆம் ஆண்டளவிலாகும். இவ்வாறு அவர்கள் குடியேறியபோது முதலில் கோத்திர அடிப்படையிலான அமைப்பைக் கொண்டிருந்தனர்.

**செயற்பாடு**

*இந்தியாவைக் குறிப்பதற்கான வேறு பெயர்களையும் அவை உருவாவதற்கான காரணங்களையும் பட்டியலிடுக.*

வேத காலத்தில் சிறிய கோத்திரங்கள் பிரதான கோத்திரங்கள் பலவாகப் பிரிவுற்றன. கோத்திரங்களுக்கிடையே அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மோதல்கள் ஆரம்பமாகின. இதன் பிரதிபலனாக அக்கால அரசியலில் 'பாரத' கோத்திரம் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டது. பாரத கோத்திரத்தின் முக்கிய இடங்களாக சரஸ்வதி, துருஸத்வதீ நதிக்கரைகள் அமைந்திருந்தன.

### பதினாறு பாரிய குடியிருப்புக்களின் தோற்றம்

இதற்கு முன்னர் நாம் கற்ற கோத்திர அரசியல் முறைக்குப் பதிலாக இக்கால கட்டத்தில் அரச ஆட்சி முறையை மையமாகக் கொண்ட பதினாறு குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றன.

| பதினாறு பாரிய குடியேற்றங்கள் | |
|---|---|
| குடியிருப்புகள் | தலைநகரங்கள் |
| 01. அங்கம் (வங்க தேசம்) | சம்பா |
| 02. மகதம் | ராஜகிருதம் |
| 03. காசி | வாரணாசி |
| 04. கோசலம் | செவெத் நகர் (சரஸ்வதி) |
| 05. வஜ்ஜி | வைசாலி |
| 06. மல்ல | குசிநகர் மற்றும் பாவா |
| 07. வேதி | யுக்திமதி (சுத்தமதி) |
| 08. வத்ஸய | கெள சாம்பி |
| 09. குரு | இந்திர பிரஸ்தா |
| 10. பாஞ்சாலம் | கம்பிலா (காம்பீலம்) |
| 11. மத்சய | விரட்டா (விராத்) |
| 12. சூரசேன | மதுரா |
| 13. அஸ்சாக (அசாக்கா) | பெட்டாலி (பாட்லியா) |
| 14. அவந்தி | உஜ்ஜினி |
| 15. காந்தாரம் | தட்சசீலம் |
| 16. காம்போஜம் | துவாரகா |

பௌத்த, சமண சமய நூல்களில் குறிப்பிடப்பட்டபடி பதினாறு பாரிய குடியிருப்புகளிலும் இரண்டுவிதமான ஆட்சி முறைகள் நிலவின.

* குழு ஆட்சி
* அரச ஆட்சி

**குழு ஆட்சி**

* சபை ஒன்றினால் நிர்வாகத்தை மேற்கொள்ளல்.
* முதியோர், இளையோர் ஒன்றுகூடி கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளல்.
* பிரதானியை வாக்களிப்பதன் மூலம் தெரிவு செய்தல்.
* மக்கள் கூடும் மண்டபங்களில் கூட்டத்தை நடத்துதல்.
* மூத்த குடிகளின் சொற்களுக்குக் கட்டுப்படல்.
* பிரதான அரசை சிறிய பகுதிகளாகப் பிரித்தல்.

குழு ஆட்சி லிவிஜ்வி ஆட்சியின் போது செயற்படுத்தப்பட்டது. அவர்கள் தமது நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்து கொண்டு செல்வதற்காக பிரதான அரசை, பல சிறு பிரிவுகளாக்கினர். சிறிய நிர்வாக அலகுகளின் அங்கத்தவர்கள் பிரதான நிர்வாக சபைக்குச் சமூகமளிக்க வேண்டியிருந்தது. ஜனநாயக இயல்புகளைக் கொண்ட சிரேஷ்ட குருமார்களின் சபையை உருவாக்கிக் கொள்வற்கும் லிச்சவி அரசின் நிர்வாக முறையை முன்மாதிரியாகக் கொண்டனர்.

**அரச ஆட்சி**

இராச்சியம் அரசன் ஒருவனால் ஆட்சி செய்யப்பட்டது.

## பேரரசுக்காலம்

பதினாறு பாரிய குடியிருப்புகளுள் மகதம், பாரிய பேரரசு ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் வல்லமையைப் பெற்றது. மகதம் ஏனைய குடியிருப்புக்களை விட பலமடைவதற்குப் பல காரணங்கள் பங்களித்தன. அவையாவன.

* இதன் தலைநகரான ராஜகிருதம் இயற்கைப் பாதுகாப்பைக் கொண்டிருந்தமை.
* கங்கை ஆற்றின் அருகே அமைந்திருந்தமையால் வர்த்தக நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக இருந்தமை.
* சோன் நதிப்பள்ளத்தாக்கில் தங்கம் போன்ற கனியங்கள் கிடைக்கப் பெற்றமை.
* நதிப் பள்ளத்தாக்கு விவசாயத்திற்குப் பொருத்தமான பிரதேசமாகக் காணப்பட்டமை.
* பிராமண, இந்து சமயங்களுக்கு மேலதிகமாக சமண சமயப் பெரியார்கள் தோன்றியமை.

## பிம்பிசார மன்னன்

மகதப் பேரரசைக் கட்டியெழுப்புவதில் ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் பிம்பிசார மன்னனே ஆவார். பதினைந்தாவது வயதில் பதவியேற்ற அவர் சமாதானமான, செயற்றிறன் மிக்க கொள்கை ஒன்றைக் கைக்கொண்டார். அதற்கான வழிமுறைகளாவன.

* ஏனைய குடியிருப்புகளுடன் நட்புறவை மேற்கொள்ளல், உதாரணமாக அவந்தி மன்னனுக்கு சிகிச்சையளிக்க தனது வைத்தியரான ஜீவக என்பவரை அனுப்பி வைத்தமை.
* விவாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமை. உதாரணமாக கோசலையில் பஸேனதி கொஸோல் மன்னனின் தங்கையை விவாகம் செய்து கொண்டமை.
* சட்டத்தை சரியாக அமுல் நடத்தியமை.
* கிராம நிர்வாகத்தை முறையாக நடத்திச் சென்றமை.
* முறையான பாதைத் தொகுதி ஒன்றை அமைத்தமை.
* வத்ஸக்கார போன்ற அரச அதிகாரிகளின் உதவியைப் பெற்றுக் கொண்டமை.

## அஜாசத் மன்னன்

அஜாசத் மன்னரும் பிம்பிசார மன்னரைப் போன்றே சிறந்த ஆட்சியாளனாவான். தந்தையின் மரணத்தின் பின் இழந்த காசி குடியிருப்பை மீளவும் அரசுடன் சேர்த்துக் கொண்டான். கங்கை நதியின் அருகே மாணிக்கச் சுரங்கம் ஒன்று தொடர்பாக லிச்ஜவியுடன் ஏற்பட்ட பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்தான். என்றாலும் தேவையானபோதில் முன்னேற்றகரமான யுத்த முறைகளைக் கையாண்டுள்ளதோடு, அங்கு நவீன யுத்த தாங்கிகளின் அமைப்பை வெகுவாக ஒத்த கல்லெறியும் இயந்திரங்களையும் பயன்படுத்தியுள்ளனர்.

பிம்பிரசார மற்றும் அஜாசத் என்னும் தந்தை - மகன் இருவரினதும் சிறந்த நிர்வாகத்தின் காரணமாக மகதம் பேரரசு ஒன்றாக விரிவடைந்தது.

## சமய சிந்தனைகளின் வளர்ச்சி

### இந்து சமயம்

இந்து சமயம் தொடர்பாக வேதங்களிலிருந்தும் பிராமணங்கள், உபநிடதங்கள் ஆகிய மூலாதாரங்களிலிருந்தும் விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதில் சொல்லப்படுவதிலிருந்து அவர்கள் இயற்கை அம்சங்களுக்குத் தெய்வீகத் தன்மையை வழங்கியுள்ளனர். தெய்வங்களைப் பின்வருமாறு வகுத்துள்ளனர்.

- ஆகாயத்தை அண்டி - மித்திரன், வருணன்
  (இடையுலக தெய்வம்)
- விண்வெளியை அண்டி - இந்திரன், வாயுதேவன்
  (விண்ணுலக தெய்வம்)
- புவியை அண்டி - அக்னி, சோமன்
  (மண்ணுலக தெய்வம்)

### சமண சமயம்

சமண சமயத்தின் ஸ்தாபகர் மஹாவீரர் எனும் நிகண்டநாத புத்த என்பவராவர். சமண சமயம் பிரதானமான இரு பிரவுகளாகக் காணப்பட்டது. அவையானவன.

- திகம்பர
- ஸ்வேதாம்பர

அதிக அகிம்சைக் கொள்கைகளைக் கடைபபிடிக்கும் சமன மதத்தினர். சுவாசித்தல், சிறு பிராணிகளை மரணத்திற்கு உட்படுத்தல் என்பவற்றினை எண்ணி தமது (படம்2.10)

வாயை மூடி மறைத்துக் கொள்வார்கள். இன்றைய இந்தியாவில் ரனக்பூரில் அமைந்துள்ள சமண ஆசிரமத்தை படத்தில் பார்த்து அவற்றின் சுற்றாடலைப் பற்றி விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.



சமண சமயத்தவரின் வாய்மூடி
படம் 2.10



ரனக்பூரில் உள்ள சமண ஆலயம்
படம் 2.11

## பௌத்த சமயம்

புத்தர் பெருமானின் தத்துவங்களின் அடிப்படையாக அமைந்தது. நல்ல மனிதர்களை சமூகத்திற்கு வழங்குவது, லும்பினியில் சல் நந்தவனத்தில் பிறந்த அவர் ஞானம் பெற்றதும் பின் காலமானதும் அரச விருட்ச நிழலிலே ஆகும். சமண போதகர்களைப் போன்றே புத்தபெருமானும் பலியிடல், யாகம், வேள்வி நடத்துதலை நிராகரித்தார். புத்த நிலையை அடைந்த பின்னர் நாடு நகர்களில் பிரயாணம் செய்த புத்த பெருமான் எல்லா உயிர்களினதும் நலனையே நாடினார். இடைநிலையான கொள்கையைக் கையாண்டு முழு உலகத்திற்கும் புத்தொளியைப் பாய்ச்சினார்.

> **செயற்பாடு**
>
> *சமண, புத்த சமயங்களிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை அட்டவணைப்படுத்துக.*

## இலக்கியமும் கலையும்

### வேதகாலம்

- ✶ இருக்கு வேதம் வாய்மொழி மூலம் வழங்கி வந்தது.
- ✶ அது எழுத்துருப் பெற்றது பிற்காலத்திலாகும்.
- ✶ இலக்கிய பாடல்களில் தகவல்களையும் பெற முடியும்.
- ✶ பாடல்களில் அதிகமானவை கடவுள்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

## பிற்பட்ட வேதகாலம்

* இந்த யுகத்திற்கு சாமம், யசுர், அதர்வன, வேதங்கள் உரியனவாகும்.

## வீரகாவியங்கள்

இராமாயணம் - இராமர், சீதை கதை

மகாபாரதம் - பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் நடந்த யுத்தம் பற்றி கதை

## சமூக அமைப்பு

இக்காலத்தில் பாரதத்தில் நான்கு குலங்கள் (வர்ணங்கள்) காணப்பட்டன.

* பிராமணர்
* சத்திரியர்
* வைசியர்
* சூத்திரர்

**செயற்பாடு**

*இராமாயணத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்து சிறுகதை ஒன்றை படைக்க.*

## பிராமணர்

* ஆட்சியாளர்களுக்கு அந்தந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் புரிபவர்கள்.
* சமய விடயங்களில் தலைமையை ஏற்று செயற்படுதல்.

## சத்திரியர்

* நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
* நாட்டுமக்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுதல்.
* யுத்த நடவடிக்கைகளை முன்னின்று நடத்துதல்.
* கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

## வைசியர்

* விவசாயம் செய்தல்.
* வர்த்தகம் செய்தல்.
* விலங்கு வளர்த்தல்.

## சூத்திரர்

* எல்லாக் குலத்தவர்களுக்கும் பணிவிடை செய்தல்.
* அழுக்குகளை அகற்றுதல்.

# பொருளாதாரம்

## விவசாயம்

* பிரதான வாழ்க்கைத் தொழிலாகும்.
* தானியங்கள் உரிய போகங்களில் விளைவிக்கப்பட்டன.
* தானியச் செய்கைக்குத் தேவையான நீரை மழையாலும் நீர்ப்பாசனத்தின் மூலமும் பெற்றுக் கொண்டனர்.
* விவசாய நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதற்கு பல்வேறு வகைப்பட்ட பூஜைகளை மேற்கொண்டனர்.
* விவசாய நடவடிக்கைகளுக்காகவும் உணவுத் தேவைகளுக்காகவும் மந்தை வளர்ப்பில் ஈடுபட்டனர்.

## வர்த்தகம்

* வர்த்தகத்திற்காக தள்ளுவண்டிகளைப் பயன்படுத்தினர்.
* இக்கால வர்த்தகத் தாபனங்கள் 'கில்ட்' எனும் பெயரால் குறிப்பிடப்பட்டன.
* எந்நேரமும் அரசர்களுக்கு உதவிய செட்டியார்கள் செல்வந்தர்களாக மதிக்கப்பட்டனர்.
* வர்த்தகத்தில் பண்டமாற்று இடம்பெற்றபோது பணமும் பாவிக்கப்பட்டிருக்கலாம்.

* வர்த்தக நடவடிக்கைகளுள் பெருமளவில் ஈடுபட்டவர்கள் வைசிய குலத்தர்கள் என்றாலும் பொருளாதார நலன்களைப் பெறுவதற்காக சூத்திரர் நீங்கலாக ஏனைய குலத்தவர்களும் வர்த்தகத்தை மேற்கொண்டிருந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

* வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தோரது வாழ்க்கை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

## கைத்தொழில்

இக்காலக் கைத்தொழில்களில் தச்சுத் தொழில் முக்கியமானதாக இருந்தது, வாகனங்களைச் செய்தல், விவசாய உபகரணங்களைச் செய்தல் என்பன தச்சர்களினால் மேற்கொள்ளப்பட்டன. வாகனச் சக்கரங்களை உற்பத்தி செய்பவர்கள் மிகவும் கெட்டித்தனமானவர்கள் எனக் கவிஞர் ஒருவர் தனது கவிதையில் குறிப்பிட்டுள்ளார். கேத்தல் போன்ற உலோகப் பொருட்களைச் செய்தல், தோலால் பல்வேறு பொருட்களைச் செய்தல், பாயிழைத்தல், புடைவை நெசவு செய்தல், மீன் பிடித்தல், தங்க நகைகளை உற்பத்தி செய்தல், பிராணிகளின் உரோமம், தோல் என்பவற்றால் ஆடைகளை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களும் அக்காலத்தில் பரவலாகக் காணப்பட்டன.

## கல்வி

நிலையான சமூகத்தில் அத்தியவசியமான ஓர் அங்கம் கல்வியாகும். அங்கு பெரும்பாலும் கல்வி சமயம் சார்ந்ததாய் இருந்தது. அக்காலத்தில் அறிவு பெரும்பாலும் வாய்ப்பாடம் மூலமே இடம்பெற்றது. கல்வியைக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு பிரமணர்களுக்கே வழங்கப்பட்டிருந்தது. குருகுலத்தில் தங்கியிருந்து கற்றல் அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பபட்ட ஒரு முறையாக இருந்தது திசாபாமொக்கிடம் கற்பதற்கு சத்திரிய குலப் பிள்ளைகளும் பெரும்பணக்காரப் பிள்ளைகளும் சென்றனர். கல்வி நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து குருதட்சணை வழங்கிய பின்னர் மீளவும் பெற்றோரிடம் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

### செயற்பாடு

*01. இந்தியாவில் நிலவிய சமயங்களில் நீர் விரும்பும் சமயமொன்றைத் தெரிவு செய்து, அது சம்பந்தமான சிறு நூல் ஒன்றை ஆக்குக.*

*02. அன்றைய பாரதத்தில் நிலவிய நான்கு குலங்களையும் குறிப்பிட்டு அது சம்பந்தமாக உமது அபிப்பிராயத்தைக் கொண்டே கட்டுரை ஒன்றை வரைக.*

## லிச்ஜவி ஆட்சிமுறையக் கூடாக...

* மூத்தோருக்கு கீழ்ப்படிதல்
* தலைமைத்துவத்தை மதித்தல்
* கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ளல்
* ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
* பொது நலப் பண்பு என்பன ஏற்பட்டன.

இத்தகைய உத்தம குணங்களை நாமும் பின்பற்றி வாழலாம்

### பயிற்சி

01. பதினாறு பெருங் குடியிருப்புகளில் ஐந்தின் பெயர்களைத் தருக.


02. பிம்பிசார மன்னன் திருமணத் தொடர்புகளை எம் மன்னனுடன் வைத்துக் கொண்டான்?

03. மகதப் பேரரசில் நிலவிய சமயங்கள் இரண்டும் எவை?

04. வேதங்கள் நான்கைப் பெயரிடுக.

05. இந்தியாவில் காணப்பட்ட கைத்தொழில்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

## ஆரம்பமும் பரம்பலும்



*அரேபிய பாலைவனம்*
*படம் 2.12*

இங்கு பாலைவனப் பிரதேசத்தின் படம் தரப்பட்டுள்ளது. பாலைவனங்களாலான இன்றைய மத்திய கிழக்கு வலயத்தைச் சேர்ந்த நாடுகளின் நாகரிகத்தின் ஆரம்பமும் பரம்பலும் பற்றி இப்பாடத்தின் மூலம் கற்றுக் கொள்வோம். அரேபியாவின் எல்லைகளைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

- வடகிழக்காக - ஓமான், பாரசீகக் குடா
- மேற்காக - செங்கடல்
- தென்கிழக்காக - அரபிக்கடல்
- வடமேற்காக - மத்தியத்தரைக்கடல்
- வடக்காக - துருக்கியும் ஆர்மீனியாவும்
- கிழக்காக - ஈராக்

## அரேபியாவின் பிரதான இயல்புகள்

- ✶ பாலைவனக் காலநிலை
- ✶ சாதாரண வெப்பநிலை 40°C - 50°C வரை.
- ✶ வருடாந்த மழைவீழ்ச்சி 100mm இற்கும் குறைவு.
- ✶ மணல் பரப்பால் மூடப்பட்ட நிலப்பகுதி.
- ✶ சில இடங்களில் பாலைவனச் சோலைகள் காணப்படுகின்றன.
- ✶ பண்டைக்காலம் முதல் மிக வளர்ச்சிக் கண்ட கலாசாரம் ஒன்று காணப்பட்டது.

## இஸ்லாத்தின் ஆரம்பமும் பரவலும்

இஸ்லாமிய சமயம் அரேபியாவுக்கு அறிமுகமானது கி.பி ஆறாம் நூற்றாண்டிலாகும். இஸ்லாமிய சமயத்தின் ஸ்தாபகர் முஹமது நபி ஆவார்.

இவர் கி.பி. 570 ஆண்டில் மக்கா நகரில் அவதரித்தார்.

காலப்போக்கில் அவரைத் தீர்க்கதரிசியாக கருதிய மக்கள் நபி என நாமம் சூட்டி அழைத்தனர். இளமைப் பிராயத்திலேயே அவர் பெற்றோரை இழந்தார். இதனால் முறையான கல்வியை அவரால் பெற்றுக் கொள்ள இயலவில்லை. இளம் வயதில் ஆடு மேய்ப்பவராகவும், வாலிப வயதில் வியாபாரக் குழுவினருடன் செல்பவராகவும் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இருப்பத்தைந்தாவது வயதில் சீமாட்டியான விதவை கதீஜாவை அவர் திருமணம் புரிந்துக் கொண்டார். வாலிப வயதில் இருந்தே மதச் சிந்தனையுடன் கூடிய வாழ்க்கையை அவர் வாழ்ந்தார். தியானத்தில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மக்கா நகருக்கு அருகில் இருந்த 'ஹிரா' குகையில் தியானத்தில் இருக்கும்போது அவருக்கு அல்லாஹ்வால் 'அல் குர்ஆன்' அருளப்பட்டது. அப்போது அவரின் வயது நாற்பதாகும்.

அதிலிருந்து அவர் அல்லாஹ்வின் அருள் மொழிகளை தமது நண்பர்களிடையே போதிக்கத் தொடங்கினார். அவர்கள் அவற்றை எழுதியும் மனனம் செய்தும் சேகரித்தும் வைக்கத் தொடங்கினர். தான் பிறந்த பூமியில் வெளிப்படையாக அவற்றைப் போதிக்கத் தொடங்கியவுடன், தனது முன்னைய நம்பிக்கைகளுக்கு மாற்றமாக இது இருந்தமையால் அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அவருடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தபோது அல்லாஹ்வின் கட்டளைப்படியே அவர் மக்காவைக் கைவிட்டு மதீனா நகருக்கு கி.பி 622 ஆம் ஆண்டில் சென்றடைந்தார். இது இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றபடியால் அதனை 'ஹிஜ்ராத்' எனக் குறிப்பிட்டனர். பிற்காலத்தில் இஸ்லாமிய வருடக் கணிப்பையும் அதிலிருந்தே ஆரம்பித்தனர்.

**இஸ்லாமிய போதனைகளாவன**

* ஏக தெய்வ வழிபாடும் உருவ வழிபாடுகளை நிராகரித்தலும்
* அனைவரையும் சகோதரத்துவத்துடன் நடத்தி ஒற்றுமையாக வாழ்தல்
* தம்மால் இயன்றவரை பிறருக்கு உதவுதல்
* பொய், புறம் பேசுதலை முற்றாகத் தவிர்த்தல்
* களவு புரிதலைக் கடுங் குற்றமாகக் கருதுதல்

நபிகளாரின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட புனித பூமியாக மக்கா உள்ளது. அதனால் இஸ்லாமியர்கள் தம் வாழ்க்கையில் ஒரு முறையேனும் மக்காவுக்கு செல்ல வேண்டும் என்பதே அவர்களின் எதிர்ப்பார்ப்பாகும்.

**நபிகளாரின் போதனைப்படி**

* தினமும் ஐந்துவேளை அல்லாஹ்வை தொழ வேண்டும்.
* வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாசலுக்குச் சென்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட வேண்டும்.
* பெண்கள் பள்ளிவாசலுக்குச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. என்றாலும் தமது வீடுகளிலோ, தொழில் புரியும் இடங்களிலோ ஐவேளைத் தொழுகையில் ஈடுபட வேண்டும்.
* வருடத்தில் ஒருமுறை ரம்ழான் மாதம் முழுவதும் உபவாசம் மேற்கொள்ள வேண்டும். அப்போது சூரியன் உதிப்பதற்கு முன்னிருந்து சூரியன் அஸ்தமிக்கும்வரை எதையும் உண்ணவோ பருகவோ கூடாது. இம்மாதம் முழுவதும் சமுகத்திற்கு நன்மை புரியும் காரியங்களில் ஈடுபட வேண்டும். அம்மாத முடிவுடன் ரமழான் நோன்புப் பெருநாள் கொண்டாடப்படும்.

* தம்மிடமுள்ள சொத்துக்களில் இரண்டரை வீதத்தை ஏழை எளிய மக்களுக்கு கட்டாயமாகத் தர்மம் செய்ய வேண்டும் (ஸக்காத்).
* வசதி உள்ளவர்கள் வாழ்க்கையில் ஒருமுறையாவது மக்காவிற்குச் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

### செயற்பாடு

*இஸ்லாமிய முக்கிய பெருநாட்களைப் பற்றி தகவல்களை சேகரித்து சுவர்பத்திரிகைக்கு கட்டுரை ஒன்றை வரைக.*

## மொழியும் இலக்கியமும்

இஸ்லாத்தின் பரம்பலுடன் அராபிய மொழியிலும் இலக்கியத்திலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. அவர்களுடைய அதி உன்னதமான வேத நூலான புனித குர்ஆன் அருளப்பட்டிருப்பதும் அரபுமொழியிலாகும். நபிகள் நாயகத்தின் போதனைகளைக் கொண்ட அல் ஹதீஸ் எனும் பல கிரந்தங்கள் அரபுமொழியில் தொகுக்கப்பட்டுள்ளன. சமய சம்பந்தமான பல்வேறு ஆக்கங்களால் அரபுமொழியும் அதன் இலக்கியங்களும் செழுமை பெற்றன.

அராபியர்கள் இஸ்லாத்தை தழுவிய பின்னர் மிகப் பெரிய பேரரசு ஒன்றைத் தோற்றுவித்தனர். தாம் வெற்றிக் கொண்ட மக்களிடம் இருந்தும் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொண்டு தமக்குத் தெரிந்தவற்றை அம்மக்களுக்குக் கற்றுக் கொடுத்தனர்.

அராபியர்கள் இரசனை கவிதைகளை எழுதுவதில் கூடிய விருப்பினைக் காட்டினர்.

உதாரணத்திற்கு

'ஆயிரத்தோர் இரவுகள்' எனும் கதையையும் உமர் கையாமின் 'ருபையாத்' காவியத்தையும் குறிப்பிடலாம்.

## வர்த்தகம்

ஆதி காலத்தில் இருந்தே அராபியர்கள் வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக புகழ்பெற்றிருந்தனர். தமது நாட்டில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான சூழல் காணப்படாமையால் அவர்கள் வர்த்தகத்தில் ஈடுபடத் தூண்டப்பட்டிருக்கலாம். பாலைவனத்தைப் பற்றிய பரந்த அறிவு. நட்சத்திரங்களைப் பற்றிய அவதானிப்பு என்பன வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பெருமளவில் துணையாய் இருந்தன. உலக நாடுகள் பலவற்றிலும் கிடைக்கப் பெற்றுள்ள அரபு நாணயங்கள் அவர்களின் வர்த்தகத்திற்கான அத்தாட்சியாய் திகழ்கின்றன.

- ★ அராபியர்கள் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகள், இந்தியா, இலங்கை, சீனா, ஆபிரிக்க நாடுகள் ஆகியனவாகும்.
- ★ இலங்கையிருந்து பெற்றுச் சென்ற பொருட்கள், முத்து, மாணிக்கம், யானைத் தந்தம். கறுவா, மிளகு என்பனவாகும்.

## விஞ்ஞான வைத்திய நடவடிக்கைகள்

அரேபியர் புவியியல், இரசாயனவியல், வானியல், கணிதம் ஆகிய விடயப் பரப்பில் பல்வேறு தகவல்களைப் பெற்றிருந்தனர். இந்தியாவில் குப்தர் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட தசம முறையிலான கணித எண்ணக்கருவை ஐரோப்பியர்களுக்கு அறிமுகப்படுத்தியது அராபியர்களே. இன்றைய உலகம் முழுவதிலும் வழங்கப்படுகின்ற 1, 2, 3 எனும் எண் கணித இலக்கங்கள் இந்து அராபிய இலக்கங்கள் என்றே வழங்கப்படுகின்றன. அவர்களால் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு விருத்தியுறச் செய்யப்பட்ட இன்னொரு விடயம் கேத்திர கணிதமாகும்.

அராபியர் வானியலிலும் கூடிய ஆர்வம் காட்டினர். இத்துறையில் பரந்துபட்ட ஆழமான அறிவை அவர்கள் கொண்டிருந்தனர். உரோமப் பேரரசு வீழ்ச்சி அடைந்ததன் பின்னர் எகிப்து, பலஸ்தீனம், மேற்கத்தைய நாடுகளை அராபியர் ஆக்கிரமித்த போது கண்டுபிடிக்கப்பட்ட தொலமி, அரிஸ்டோட்டில் போன்றோரின் பெறுமதியான கிரேக்க நூல்களை அராபியில் மொழி பெயர்த்தனர். அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுள் தொலமியின் 'அல்மாகெஸ்ட்' எனும் நூலும் ஒன்றாகும்.

## மருத்துவ விஞ்ஞானம்

- ★ பாரசீகத்தில் வைத்து, கிரேக்க மருத்துவ விஞ்ஞானம் சம்பந்தமான அறிவை அராபியர் பெற்றுக் கொண்டனர்.
- ★ கிரேக்க - ரோமானிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அராபிய விஞ்ஞான முறை கட்டியெழுப்பப்பட்டது.

★ அராபியாவில் வாழ்ந்த அல் - ராஸி 910 ஆம் ஆண்டில் அம்மை நோயை இனம் கண்டார்.

★ பல்வேறு நோய் நிவாரணிகளான இரசாயன மூலங்களையும் அவர்கள் உலகத்திற்கு அறியத் தந்தனர்.

## கைத்தொழில்

★ கலைப்பொருட்கள்
★ பீங்கான் பாண்டங்கள்
★ உலோக பாண்டங்கள்
★ தோலிலான உற்பத்திகள்

இப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை அமைத்திருந்தனர். கடதாசி உற்பத்தி பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். ஐரோப்பியர்களுக்கு கடதாசியின் உபயோகத்தைக் கற்றுக் கொடுத்தவர்களும் அராபியர்களே.

## கட்டட நிர்மாணம்

அராபிய கட்டட நிர்மாணக் கலையில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. சமயம் சார்ந்த கட்டடங்களிலேயாகும். கட்டடங்களின் தனிச் சிறப்பியல்பாக அமைந்தது கோள வடிவில் அமைந்த உச்சிகளாகும்.

பள்ளிவாசல்கள் விசாலமான கதவுகளும் கூரைப்பகுதி வளைவுகளுடன் கூடியதாக அமைக்கப்படும். அங்கு 'ஹௌழ்' எனப்படும் பொய்கை ஒன்று கட்டாயமாக அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறான கட்டடங்கள் டமஸ்கஸ், சமாரா கொடோவா போன்ற நகரங்களில் பரவலாகக் காணலாம். எமது நாட்டிலும் இவ்வாறான பள்ளிவாசல்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.



*மன்னர் அப்துல்லா பள்ளிவாசல், அம்மான், ஜோர்தான், படம் 2.13*

## மக்கள் வாழ்க்கை

அரேபியாவில் ஆரம்பத்தில் குடியேறியவர்கள் கோத்திரங்களாக நாடோடி வாழ்க்கையே வாழ்ந்தனர். பிற்காலத்தில் சிறுசிறு கிராமங்கள் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் அவை நகரங்களாக மாறின. நிர்மாணத்தின்போது பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி சுற்று மதில்களை அமைத்தனர்.

அரேபியர்களின் பிரதான உணவாக பால், பேரீச்சம்பழம், மாமிசம் என்பவை இருந்தன. ஆடைகளில் மிகவும் ஜனரஞ்சகமானது பருத்தித் துணியிலானவையாகும். நீண்ட 'ஜிப்பா' எனும் ஆடைகளை அணிந்து இடுப்பைச் சுற்றி பட்டி ஒன்றை அணிந்தனர். தலையை துணியால் மூடி, நெற்றியைச் சுற்றி கறுப்புப் பட்டி ஒன்றைக் கட்டியிருப்பர்.

### செயற்பாடு

1. *பொதிகளை சுமந்து கொண்டு பாலைவனத்தில் பிரயாணஞ் செய்யும் ஒட்டகமொன்றின் படத்தை வரைக.*
2. *கிரேக்க, உரோம், அராபிய நாகரிகங்களில் மக்கள் வாழ்க்கை இயல்புகளை அட்டவணை ஒன்றில் காட்டுக.*

**அராபியர்களிடமிருந்து நமக்கு ........**

★ கட்டட நிர்மாணக் கலை

★ பல்வேறு கைத்தொழில் நுட்பங்கள்

★ வானியல், இரசாயனவியல், கணிதவியல், புவியியல் போன்றவற்றில் விடய ரீதியானதும் பிரயோக ரீதியானதுமான அறிவு

★ இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கவியல்

★ 'ஆயிரத்தோர் இரவுகள்' என்னும் சிறார்களைக் கவரும் கதைகள் என்பன மரபுரிமையாகக் கிடைகப்பெற்றுள்ளன.

### செயற்பாடு

1 அராபியாவிற்குட்படுதம் நாடுகள் எவை?

2 தற்போது அராபிய நாடுகளில் உள்ள பிரதான கனிய வளம் எது?

3 கீழ்வரும் தலைப்பின் கீழ் சிறிய சுருக்க சுருக்கக் குறிப்பினை எழுதுக.

I புனித குரான்

II ரம்ழான் பண்டிகை

III மக்கா

7 அராபியரிடம் காணப்படும் கைத்தொழில்கள் எவை?

8 இவர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடுகளை வரைப்படத்தில் குறித்துக் காட்டுக.

# 03 தென்னிந்திய ஆக்கிரமிப்பும் அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்

## அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

ஆயிரத்து நாநூறு வருடங்களாக மிக நீண்ட காலம் இலங்கையில் தலைநகரமாக அநுராதபுரம் விளங்கியது. பண்டுகாபயனால் ஆரம்பிக்கப்பட்ட இவ்விராச்சியம் கி.பி பத்தாம் நூற்றாண்டளவில் மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய ஆக்கிரமிப்புக் காரணமாக வீழ்ச்சியுற்றது.

தென்னிந்திய படையெடுப்புக்கள் மட்டுமின்றி, அனுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு இன்னும் பல காரணிகள் துணைபுரிந்தன. அவையாவன:-

★ அரச ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ள காலத்திற்கு காலம் வரைவழைக்கப்பட்ட தென்னிந்திய படையினர் இலங்கையில் தங்கி விட்டதுடன், தென்னிந்திய ஆக்கிரமிப்பின் போது, சிங்கள மன்னர்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்து கொண்டமை.

★ அநுராதபுரத்தின் இறுதிக் கட்டத்தில் பலவீனமான அரசர்கள் ஆட்சிபீடம் ஏறியமை.

★ அடிக்கடி ஏற்பட்ட ஆக்கிரமிப்புக்களால் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்து போனமை.

★ ஆட்சிபீடம் ஏறிய அரசர்கள் அரசுரிமையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினார்களேயன்றி, பொருளாதார வளர்ச்சியில் சிரத்தை காட்டாமை.

★ ஐந்தாம் மஹிந்த மன்னன் காலத்தில் இடம்பெற்ற முதலாம் இராஜராஜ சோழனின் ஆக்கிரமிப்புக் காரணமாக அநுராதபுர இராச்சியம் முழுமையாக வீழ்ச்சியடைந்தது. சோழர்கள் அநுராதபுரத்தைக் கைவிட்டு பொலனறுவைக்கு தமது தலைநகரத்தை இடம் மாற்றியமை.

## சோழர் ஆதிக்கம் நிலைநாட்டப்படல்

கி,மு 993இல் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் தென்னிந்தியாவில் முதலாம் இராஜராஜனின் தலைமையில் சோழ ராச்சியம் எழுச்சியுற்றது. இம்மன்னன் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். இக்கால கட்டத்தில் உள்நாட்டுக் குழப்பங் காரணமாக ஐந்தாம் மஹிந்தன் அநுராதபுரத்தைக் கைவிட்டு றுஹுணு இராச்சியத்திற்கு தப்பி ஓடினான். இலங்கையின் வடபகுதியைத் தமதாக்கிய சோழர்கள் அதனை மும்முடிச் சோழ மண்டலம் எனும் பெயரில் தமது அரசின் பிராந்தியம் ஒன்றாக்கி ஆளத் தொடங்கினர்.

சீரழிந்து போயிருந்த அநுராதபுரத்தைக் கைவிட்டு பொலன்னறுவையைத் தமது தலைநகராகத் தெரிவு செய்த அவர்கள், அதற்கு ஜனநாதபுரம் (ஜனநாதமங்களம்) எனப் பெயரிட்டனர். நாட்டின் அரசியல் தலைமைபீடமாக 14 நூற்றாண்டுகளாகத் திகழ்ந்த அநுராதபுரம் இவ்வாறு கைவிடப்பட்டு பொலன்னறுவை தலைநகராக்கப்பட்டது.

## சோழர்களின் நிர்வாகம் செயற்பட்ட விதம்

★ சோழர்களின் நிர்வாகச் செயற்பாடுகள் பற்றி சூளவம்சத்தின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. சோழர்களினால் இலங்கை ஆழப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

★ பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழர்கள் இராணுவத் தன்மையான ஆட்சியை மேற்கொண்டனர்.

★ சோழப் பேரரசில் மண்டலம் என்பது ஒரு பரிபாலன பிரிவாகும். சோழப் பேரரசின் எட்டுப் பிரிவுகளில் இலங்கை ஒன்றாக, மும்முடிச் சோழ மண்டலம் எனும் பெயரில் நிர்வகிக்கப்பட்டது.

★ சோழப் பேரரசினால் நியமிக்கப்பட்ட தளபதி ஒருவரினால் இலங்கை நிர்வகிக்கப்பட்டது.

★ உயர் பதவிகளுக்கு சோழர்கள் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டனர்.

★ முறையாக வரி அறவீடு செய்யப்பட்டது.

★ சோழப் பேரரசின் தலைநகரான தஞ்சாவூரில் அமையப் பெற்றிருந்த கோயில் ஒன்றுக்கு இலங்கையின் சில கிராமங்களில் அறவிடப்பட்ட வரி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ இங்கு அறவிடப்பட்ட கப்பம், காணிக்கை முதலியன வருடாந்த வருமானமாக சோழப் பேரரசுக்கு அனுப்பப்பட்டது.

★ தாய் நாட்டின் தலையீடு இன்றி தமது விருப்பப்படி சோழ அதிகாரிகள் இலங்கையை நிர்வகித்தனர்.

### செயற்பாடு

*அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகிய விடயங்களை விபரித்து சுவர்பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று வரைக.*

## தென்னிந்திய அரசுகளும் அவற்றின் செல்வாக்கும்

இலங்கை அனுராதபுர யுகத்தின் வரலாற்றுத் தகவல்களை நோக்குகையில் தென்னிந்திய வரலாறு சம்பந்தமான விடயங்களைத் தெரிந்திருப்பது முக்கியத்துவத் திற்குரியதாகும். அக்காலக்கட்டத்தில் இலங்கை மீது தென்னிந்திய அரசுகள் பலவும் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. அவற்றுள் சேர, சோழ, பாண்டிய பல்லவ இராச்சியங்கள் முக்கியமானவையாகும்.




தென்னிந்திய அரசுகள் படம் 3.1

காலத்துக்குக் காலம் எழுச்சியுற்ற இவ்வரசுகள் அனுராதபுரக் காலத்தில் இலங்கையுடன் பல்வேறு தொடர்புகளை வைத்திருந்தன. இலங்கை இந்தியாவுக்கு அருகாமையில் இருந்தமையால் பல தொடர்புகள் உருவாக காரணமாகின. அவை இலங்கையுடன் கொண்டிருந்த அரசியல், பொருளாதார, கலாசார, சமய சமூக தொடர்புகளில் கொண்டிருந்த செல்வாக்கை ஆராய்ந்து பார்ப்பதே இவ்வத்தியாயத்தின் நோக்காகும்.

எமது நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்திய தென்னிந்திய அரசுகளாவன.

01. சேர அரசு

02. சோழ அரசு

03. பாண்டிய அரசு

04. பல்லவ அரசு

## சேர அரசு

தென்னிந்தியாவின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர அரசு இலங்கைக்கு அருகாமையில் அமைந்திருந்தது, சேர இராச்சியம், பாண்டிய, சோழ பேரரசுகளின் அளவுக்குப் பரந்துபட்டதாகக் காணப்படவில்லை. என்றாலும் இலங்கை அரசர்கள் சேர நாட்டுடன் பல்வேறுபட்ட தொடர்புகளைக் கொண்டிருந்ததாக வரலாற்று மூலாதாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

## பல்லவ அரசு

★ தென்னிந்தியாவின் சேர, சோழ, பாண்டிய இராச்சியங்களுக்கு வடக்காக பல்லவ இராச்சியம் அமைந்திருந்தது.

★ வடக்கே கிருஷ்ணா நதிக்கும் தெற்கே பாலாற்றுக்கும் இடைப்பட்ட பெரும் பிரதேசம் இதற்குட்பட்டிருந்தது.

★ தென்னிந்தியாவில் பல்லவர்களே முதன் முதலில் பேரரசு ஒன்றைத் தோற்றுவித்தனர்.

★ காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு அவர்கள் தமது பேரரசைக் கட்டியெழுப்பினர்.

★ இதன் முதல் மன்னனாக பப்பதேவ இருந்ததாக செப்பேடுகளின் மூலம் அறிய முடிகின்றது.

★ மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை பல்லவரின் ஆதிக்கம் நின்று நிலைப்பெற்றிருந்தது.

★ ஏழாம் நூற்றாண்டில் இவர்களின் ஆதிக்கம் எந்தளவு செல்வாக்குப் பெற்றிருந்ததென்பது மானவர்மன் மன்னன் இலங்கையில் ஆதிக்கத்தைப் பெற, பல்லவ மன்னின் உதவியைக் கோரிப் பெற்றதில் இருந்து தெரிய வருகின்றது.

## பாண்டிய அரசு

★ பாண்டிய இராச்சியம் தென்னிந்தியாவின் கிழக்குக் கரையோரமாக இருந்தமையால் இலங்கைக்கு வெகு சமீபமாக அமைந்திருந்தது.

★ மதுரை இதன் தலைநகரமாகும்.

★ ஆறாம் நூற்றாண்டின் பின்னரைப் பாதியில் இருந்து இவ்விராச்சியம் எழுச்சியுற ஆரம்பித்தது.

★ பேரரசரனான ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனின் காலத்தில் இவர்களின் ஆதிக்கம் தென்னிந்தியா முழுவதும் பரவியது.

★ இம்மன்னன் இலங்கையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளான்.

## சோழ அரசு

★ பாண்டியப் பேரரசை அடுத்து சோழர்கள் தென்னிந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டனர்.

★ பாண்டிய நாட்டுக்கு வடக்காக தென்னிந்தியாவின் கிழக்குக் கரையை அண்டி இவ்விராச்சியம் அமைந்திருந்தது.

★ ஆரம்பத்தில் பாண்டியருக்கும் பல்லவருக்கும் கீழ்ப்பட்டிருந்த சோழர்கள் காவேரி நதியின் அருகே இன்றைய தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு தமது ஆதிக்கத்தைப் பரப்பத் தொடங்கினர்.

★ ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதித்திய மன்னனின் காலத்தில் அரசியல் ரீதியான எழுச்சி ஆரம்பமானது.

★ முதலாம் பராந்தக மன்னனின் காலத்தில் சோழப் பேரரசு எழுச்சியுறத் தொடங்கியது.

★ பராந்தகனும் அவனைத்தொடர்ந்து இராஜராஜ சோழனும் அனைத்துப் பிரதேசங்களையும் தமதாக்கிக் கொண்டு இலங்கையையும் ஆக்கிரமித்து தமது பலத்தை நிலைநிறுத்தினர்.

**செயற்பாடு**

*இலங்கை மீது ஆதிக்கம் செலுத்த முயன்ற தென்னிந்திய அரசுக்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க.*

## தென்னிந்திய அரசுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளின் தன்மைகள்

இலங்கை தென்னிந்தியாவுக்கு அருகில் அமைந்திருந்ததன் விளைவாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே அங்குள்ள அரசுகளுடன் பல்வேறு தொடர்புகளைக் கொண்டிருந்தது. அவற்றை மூன்று தலைப்புகளுக்குட்படுத்தி நோக்கலாம். அவையாவன :

★ அரசியல் தொடர்புகள்

★ சமய, கலாசார தொடர்புகள்

★ பொருளாதார தொடர்புகள்

## அரசியல் தொடர்புகள்

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் நிலவிய அரசியல் தொடர்புகளைப் பல்வேறு தலைப்புக்களில் கலந்துரையாடலாம்.

★ அரச பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக சிங்கள அரசர்கள் தென்னிந்திய அரசர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.

தமது அரச ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் தமது பலத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இலங்கை அரசர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அருகாமையில் இருந்த தென்னிந்திய அரசர்களின் உதவியைக் கோரிப் பெற்றனர். இது முக்கியமானதொரு அரசியல் தொடர்பாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில வருமாறு:

★ இளநாக மன்னன் (கி.பி 33 - 43)இலம்பகர்ண வம்சத்தவர்களிடம் இருந்து தப்பி தென்னிந்தியாவுக்குச் சென்று படையுதவி பெற்று வந்து, இலம்பகர்ணர்களைத் தோற்கடித்து தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டமை.

★ அபயநாக மன்னன் (கி.பி 231 - 240) தென்னிந்தியாவில் இருந்து படையுதவி பெற்று வந்து தனது சகோதரரான வொஹாரிகதிஸ்ஸ மன்னனைப் பதவி கவிழ்த்து அரியாசனத்தைப் பெற்றுக் கொண்டமை.

★ காசியப்ப (கி.பி 473 - 491)மன்னனுக்குப் பயந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற முகலானன் இளவரசன் அங்கிருந்து படைகளைத் கூட்டிவந்து தனக்குரிய அரசை மீட்டுக் கொண்டமை.

★ அநுராதபுர காலத்தின் இறுதிப்பகுதியில் நாட்டின் சிம்மாசனத்தைப் பெற்றுக் கொள்ள அரச குடும்பங்களிடையே ஏற்பட்ட சச்சரவுகளின்போது தென்னிந்தியா-வுக்குச் சென்று படையுதவிகளைப் பெற்று வந்து தமது அதிகாரத்தை நிலை-நிறுத்திக் கொண்டவர்களுக்கு கீழ்வருவோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

1.முதலாம் தாடோபதிஸ்ஸ (கி.பி 639-650),

2. இரண்டாம் தாடோபதிஸ்ஸ (கி.பி 659-667)

- ★ மானவர்மன் மன்னன், (கி.பி 684-718) பல்லவ அரசர்களின் உதவியைப் பெற்றமை

## தென்னிந்திய அரசர்கள் இலங்கை அரசர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட உதவிகள்

இலங்கை மன்னர்கள் தமது அரசை நிலைநிறுத்த தென்னிந்திய மன்னர்களின் படை உதவியைப் பெற்றுவந்தது போல, தென்னிந்திய அரசர்களும் தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்ள எமது மன்னர்களின் உதவியைக் கோரிய சந்தர்ப்பங்களும் உள. அவ்வாறான சில சம்பவங்கள் வருமாறு

- ★ பாண்டிய மன்னான ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனின் மகன், (கி.பி 853-887) தனது தந்தைக்கு எதிராகப் படை உதவி கோரி இலங்கைக்கு வந்தபோது இரண்டாம் சேன மன்னன் குத்திக சேனாதிபதியின் தலைமையில் பாண்டிய நாட்டுக்குப் படையை அனுப்பி இரண்டாம் வரகுணவர்மனை சிம்மாசனத்தில் அமரச் செய்தமை.
- ★ ஐந்தாம் காசியப்ப மன்னன் காலத்தில் (கி.பி914-923) ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனின் பேரப்பிள்ளையான மானவர்மன் இரண்டாம் இராஜசிங்கன், முதலாம் பராந்தகன் எனும் சோழ அரசனுக்கு விரோதமாகப் படையுதவி கோரி இலங்கைக்கு வந்தான். மன்னன் சக்க தளபதியின் கீழ் பாண்டி நாட்டுக்குப் படை அனுப்பியமை.
- ★ சோழருடன் நடந்த போரில் தோல்வியுற்ற மாறவர்மன் எனும் பாண்டிய மன்னன், தனது அரச ஆபரணங்களுடன் இலங்கைக்கு வந்து நான்காம் தப்புல மன்னனிடம் (கி.பி 924-935) உதவி கோரினான். படையுதவி கிடைக்காமையால் தமது அரச அணிகலன்களை இங்கே வைத்துவிட்டு சேர நாட்டுக்குச் சென்றான்.
- ★ பல்லவ மன்னனான நரசிங்ஹவர்மன் சாளுக்கியர்களுடன் நடத்திய போருக்கு, இலங்கை இளவரசனான மானவர்மனின் படையுதவியைப் பெற்றமை.

> **செயற்பாடு**
>
> *அநுராதபுர காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து படையுதவி பெற்ற மன்னர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.*

### கைதிகளைக் கூட்டிவந்தமை

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே நிலவிய அரசியல் தொடர்புகள் பற்றி ஆராய்ந்து பார்க்கையில் ஆக்கிரமிப்பாளர்களின்போது கைது செய்யப்பட்டவர்களைத் தத்தமது நாடுகளுக்குக் கூட்டிச் செல்வது தொடர்பாக வரலாற்றில் தகவல்கள் உள்ளன. அதற்கான உதாரணங்களாவன :

- ★ வங்க நாஸிக மன்னன் (கி.பி111-114) காலத்தில் கரிகால சோழ மன்னன் இலங்கை மீது படையெடுத்து பன்னீராயிரம் சிங்களக் கைதிகளைக் கூட்டிச் சென்றமை.

★ வங்க நாஸிக திஸ்ஸ மன்னனின் மகனான கஜபாகு (கி.பி 114-136) அதற்குப் பழி தீர்க்கும் வண்ணம் சேர மன்னனான செங்குட்டுவன் என்பவனின் உதவியுடன் சோழ தேசத்தை ஆக்கிரமித்து பன்னீராயிரம் கைதிகளை மீட்டு சோழக் கைதிகள் பன்னீராயிரம் பேரைக் கூட்டி வந்தமை.

## திருமணத் தொடர்புகள்

அநுதாபுர காலத்தில் இலங்கை மன்னர்கள் பலரும் தென்னிந்திய அரசிளங் குமரிகளைத் திருமணம் செய்ததாக தகவல்கள் உள்ளன.

அரசர்களுள் சிலர் தமக்குப் புரிந்த உதவிகளுக்குப் பிரதி உபகாரமாகவும் இவ்வாறான திருமணங்களைப் புரிந்துள்ளனர். இன்னும் சில அரசர்களோ தமது ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் அந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதற்கான சில சம்பவங்கள் வருமாறு :

★ இலம்பகர்ணர்களைத் தோற்கடிக்க உதவி பெற்ற இளநாக மன்னன் தனது மகனான சந்தமுகசிவ இளவரசனுக்கு தமிழ்தேவி எனும் தென்னிந்திய இளவரசியை மணம் புரிந்து வைத்தமை

★ நான்காம் மஹிந்த மன்னன் கலிங்க இளவரசியை மணம் புரிந்தமை.

## சமய கலாசாரத் தொடர்புகள்


அநுராதபுர காலத்தின் முற்பாதியில் வட இந்தியாவுடன் சமய, கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டன. பிற்பாதியில் தென்னிந்தியாவுடனான தொடர்புகள் செல்வாக்குப் பெற்றன. சமய சம்பந்தமாகப் பார்க்குமிடத்து தென்னிந்தியாவுடனான பௌத்த சமயத் தொடர்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கு ஆதாரமான சில விடயங்கள் வருமாறு :

★ இந்தியாவின் அமராவதி, நாகர்ஜுன எனும் பௌத்த மத்திய நிலையங்களுடன் இலங்கை பிக்குகள் தொடர்புகள் வைத்திருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.


★ அநுராதபுர காலத்தின் மத்திய தென்னிந்தியாவில் மஹாயான பௌத்தம் பரவி இருந்தது. இங்கிருந்தே இலங்கையிலும் இப்பிரிவு பரவ ஆரம்பித்தது. 718 ஆம் ஆண்டில் தென் இந்தியாவில் இருந்து வஜ்ரபோதி எனும் மஹாயான மத ஞானி இலங்கைக்கு வந்து அபயகிரி விஹாரையில் தங்கிச் சென்றது தக்க சான்றாகும்.

★ அநுராதபுரத்தில் இப்போதைக்கு எஞ்சியிருக்கும் கலைப்படைப்புகளில் பல்லவ, அமராவதி கலை மரபுகளின் அம்சங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

இலங்கை தென்னிந்தியத் தொடர்புகளுக்கு கீழ்காட்டப்பட்டுள்ள ஆக்கங்கள் தக்க சான்றுகளாகும்.



தொலுவில சிலை படம் 3.2



அவுக்கணச் சிலை படம் 3.3

## அமராவதி மரபிலான படைப்புக்கள்

இவற்றுடன் இந்து மதமும் தென்னிந்திய செல்வாக்கின் மூலமே இலங்கைக்கு அறிமுகமானது. மாந்தோட்டம், திருகோணமலை போன்ற இடங்களில் சிவன் கோவில்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

மேலும் அநுராதபுரத்தின் இறுதிக் காலத்தில் இந்து வழிபாட்டிடங்களின் சிதைவுகள் பலவும் தலைநகரத்தின் வடக்குப் பகுதியில் கிடைக்கப் பெற்றதிலிருந்து இந்து சமயம் பரவலாகப் பரவியிருந்தமையை அறிந்து கொள்ள முடிகின்றது. கஜபாகு மன்னன் சோழ நாட்டை ஆக்கிரமிப்பதற்கு சேர நாட்டின் உதவியைப் பெற்றான். கஜபாகு மன்னனின் காலத்திலேயே கண்ணகி (பத்தினித் தெய்வம்) வழிபாடு இலங்கையில் அறிமுகமானதாக இராஜவலிய நூல் கூறுகின்றது.



பத்தினித் தெய்வத்தின் இன்றைய படம் 3.5

### செயற்பாடு

*01. தென்னிந்தியக் கலை மரபினைப் பின்பற்றிப் படைக்கப்பட்ட ஆக்கங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.*

*02. இலங்கையில் செல்வாக்குச் செலுத்திய பல்லவ செல்வாக்குத் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க. (நூலகத்தைப் பயன்படுத்துக.)*

## பொருளாதாரத் தொடர்புகள்.

பழங்காலந் தொட்டு இலங்கை பல்வேறு நாடுகளுடன் பொருளாதார ரீதியில் வியாபாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேற்கு - கிழக்கு நாடுகளுடன் இலங்கை கொண்டிருந்த வியாபாரத் தொடர்புகளால் பண்டங்களைக் கைமாற்றும் ஒரு மத்திய நிலையமாகப் புகழ் பெற்றிருந்தது. தென் இந்தியத் துறைமுகங்களுடன் இலங்கைத் துறைமுகங்கள் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன என்பதற்கான ஆதாரங்களும் உள.

★ இதன்படி இலங்கையின் மகாதித்த இந்தியாவின் காவிரிப்பூம்பட்டினம், தாமிரலிப்தி ஆகிய துறைமுகங்கள் நிரந்தரமான போக்குவரத்துத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. இலங்கையின் வாசனைத் திரவியங்கள், முத்து, மாணிக்கம், போன்ற பொருட்கள் தென்னிந்தியாவின் ஊடாக ரோமாபுரி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

★ விஜயனைத் திருமணம் புரிய வந்த மதுரை இளவரசியுடன் பதினெட்டு குலங்களைச் சேர்ந்த ஆயிரம் கலைஞர்கள் இங்கு வந்ததாக மூலாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. இவர்களோடு வியாபாரிகளும் இடம் பெற்றிருந்ததாகவும் வியாபாரத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளதென்ற முடிவுக்கு நாம் வரக்கூடியதாகவுள்ளது.

★ வங்க நாசிக திஸ்ஸ மன்னனின் காலத்தில் சோழ மன்னன் கரிகாலன் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பின்போது பன்னீராயிரம் கைதிகளைக் கூட்டிச் சென்றான். அவர்களைப் பயன்படுத்தி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க காவேரி நதிக்குக் குறுக்காக அணை ஒன்றாகக் கட்டுவித்தான்.

★ அநுராதபுரத்தின் பின்னரைப் பகுதியில் சோழர்களின் செல்வாக்கு தென்னிந்தியாவில் ஓங்கத் தொடங்கியது. இக்காலத்தில் வங்காள விரிகுடாவைச் சார்ந்த முழுப் பிரதேசங்களிலும் சோழர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை வியாப்பிக்கச் செய்தனர். அப்போது இலங்கையின் வட பிரதேசத்தையும் தமது

ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொண்டு இலங்கையைத் தமது பேரரசின் ஒரு பகுதியாகக் கருதி பொருளாதார நலன்களை அனுபவித்தனர்.

## செயற்பாடு

இலங்கை - தென்னிந்திய தொடர்புகளை ஆதாரமாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| விவாகத் தொடர்புகள் | இந்திய அரசர்கள் இலங்கையிடமிருந்து பெற்ற உதவிகளும் சந்தர்ப்பங்களும். | ஆக்கிரமிப்பு | கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பங்கள் | இலங்கையின் அரசர்கள் தென்னிந்திய அரசர்களிடமிருந்து பெற்ற உதவிகளும் சந்தர்ப்பங்களும் |
|---|---|---|---|---|
| | | | | |

## தென்னிந்திய படையெடுப்புகள்

### இலங்கை தென்னிந்திய படையெடுப்புக்குட்பட்டதான காரணங்களாவன

அநுராதபுரத்தின் ஆரம்ப காலத்தில் இருந்து முடிவுவரை இலங்கை தென்னிந்திய ஆக்கிரமிப்புகள் பலவற்றுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததாக வரலாற்று மூலாதாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. இவ்வாறான ஆக்கிரமிப்பிற்கான காரணங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

★ இலங்கை தென்னிந்தியாவிற்கு வெகு அருகாமையில் அமைந்திருந்தமை.

★ காலத்துக்குக் காலம் எழுச்சியுற்ற தென்னிந்தியப் பேரரசுக்கள் வட இந்தியாவை நோக்கி நகர்வதைவிட வெகு அருகில் உள்ள இலங்கை மீது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது இலகுவாகக் காணப்பட்டமை.

★ இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை.

★ முன்னர் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை அரசர்கள் உள்நாட்டு சச்சரவுகளின்போது உதவிக்காகக் கூட்டி வந்த இந்தியக் கூலிப்படையினர் இங்கேயே தங்கியிருந்து, பின்னர் இந்திய ஆக்கிரமிப்புக்கள் நேரும்போது அப்படையினருக்குப் பக்க-பலமாக விளங்கியமை.

★ இலங்கையின் செல்வங்களைக் கொள்ளையிடுவதில் இந்திய அரசர்களின் ஆர்வம்.

★ அநுராதபுர காலத்தின் பிற்பகுதியில் தோன்றிய அரசர்களின் பலவீனம்.

★ அநுராதபுர காலத்தின் இறுதிப் பகுதியில் சோழர்களின் எதிரிகளுடன் நெருக்க-மான தொடர்புகளை இலங்கை மன்னர்கள் பேணியமையால் சோழர்கள் கடுங்கோபம் கொண்டிருந்தமை.

#### செயற்பாடு

*இலங்கை தென்னிந்திய ஆக்கிரமிப்புகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமைக்கான காரணங்களைத் தருக.*

## இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய ஆக்கிரமிப்புக்களின் தன்மைகள்

அநுராதபுர காலத்தின் ஆரம்பம்தொட்டு, இறுதிவரை இலங்கை மீது தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் பல தொடுக்கப்பட்டன. அவ்வாக்கிரமிப்புகளின் தன்மைக்கேற்ப அவற்றுக்கான காரணங்களைக் கீழ்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

01. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசைக் கைப்பற்றல்.

02. பொருளாதார நன்மைகளை அனுபவித்தல்.

03. அரச மேலாதிக்கத்தை செலுத்துதல்.

### 01. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசைக் கைப்பற்றல்

ஆரம்பகாலத்தில் இலங்கை மீது படையெடுத்தோர் ஆக்கிரமிப்பு நோக்குடன் அதனை மேற்கொள்ளவில்லை. வர்த்தகம் செய்வதற்காக வந்த தென்னிந்தியர்கள் இலங்கையில் காணப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். பலவீனமான அரசர்கள் இருந்தமையாலும், அவர்கள் நாட்டின் பாதுகாப்பை விட சமய விடயங்களில் அதிக நாட்டம் கொண்டிருந்தமையாலும் நாட்டின் பாதுகாப்பு பலவீனமுற்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவர்கள் ஆட்சி பீடத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

★ சேன - குத்திக எனும் குதிரை வியாபாரிகள் இருவர் சூரதிஸ்ஸ மன்னனைக் கொன்றுவிட்டு நாட்டைக் கைப்பற்றி இருபத்திரெண்டு வருடங்களாக ஆண்டமை.

★ அசேல மன்னனைக் கொன்றுவிட்டு சோழ இளவரசரான எல்லாளன் ஆட்சியைப் பிடித்து நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆண்டமை.

★ வலகம்பா மன்னன் காலத்தில் பூலஹத்த உட்பட ஏழு தமிழர்கள் ஆக்கிரமிப்பை மேற்கொண்டமை. இவர்களுள் இரு தலைவர்கள் அரசி சோமா தேவியையும், புனித பாத்திரத்தையும் பெற்றுக் கொண்டு தென்னிந்தியாவுக்குச் சென்றுவிட்டனர். மற்றையோரான பூலஹத்த, பாஹிய, பணயமார, பிளயமார, தாதிக என்போர் ஒருவர் ஒருவரைக் கொன்றொழித்துக் கொண்டு பதினான்கு ஆண்டுகள் இலங்கையை ஆண்டமை.

★ வங்க நாசிக திஸ்ஸ மன்னரின் காலத்தில் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட கரிகாலசோழன் சிங்களவர் பன்னீராயிரம் பேரைக் கைதிகளாகக் கூட்டிச் சென்றமை.

★ மித்த சேன மன்னன் காலத்தில் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட பண்டு, பாரிந்த, புத்த பாரிந்த, திரிதர, தாதித, பீதிய எனும் தமிழ் தலைவர்கள் அறுவர் அதிகாரத்தைக் கைப்பற்றி இருபத்தேழு ஆண்டுகள் நாட்டை ஆண்டமை.

## 02. பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்

செல்வத்தைக் கொள்ளையிட்டுச் செல்லும் நோக்கிலும் சில சந்தர்ப்பங்களில் ஆக்கிரமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை.

★ முதலாம் சேன மன்னரது காலத்தில் பாண்டியப் பேரரசன் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் இலங்கையை ஆக்கிரமித்து பெருந்தொகையான செல்வத்தைச் சூறையாடிச் சென்றமை.

★ அநுராதபுர காலத்தின் இறுதிப்பகுதியில் முதலாம் இராஜராஜன் எனும் சோழ வேந்தன் தனது அதிகாரத்தை தென்பகுதியில் விரிவுபடுத்தும் நோக்கில் பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்கும் ஆக்கிரமிப்புச் செய்தமையை உதாரணமாக கூறலாம்.

## 03. அரச மேலாதிக்கத்திற்காக

தென்னிந்தியாவில் பேரரசுக்களைத் தோற்றுவித்த பாண்டியர்கள், சோழர்கள் இலங்கை அரசர்கள் பலவீனப்படும் சந்தர்ப்பங்களில் தமது அரசியல் ஆதிக்கத்தைப் பரப்பும் நோக்குடன் படையெடுப்புக்களை மேற்கொண்டு இலங்கையைக் கைப்பற்றிக் கொண்டமை.

### செயற்பாடு

1. *அநுராதபுர காலத்தில் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியப் படையெடுப்புகள்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுக.*
2. *இலங்கையில் சோழர்களது நிர்வாகம் பற்றிய தகவல் அடங்கிய சிறுபுத்தகம் தயாரிக்குக.*

மாறவர்மன் என்னும் பாண்டிய அரசன், படையுதவி கோரி நான்காம் தப்புல மன்னனிடம் வந்த போதிலும் அவ்வுதவி கிட்டாமல் போனது. அப்போது மானவர்ம மன்னன் தனது முடியையும் ஆபரணங்களை-யும் தப்புல மன்னனிடம் பாதுகாப்புக்காக ஒப்படைத்து விட்டு சேர நாட்டிற்குச் சென்றுவிட்டான். நான்காம் உதய மன்னனின் ஆட்சிக் காலத்தில், சோழ மன்னனான முதலாம் பராந்தகன் மானவர்மனால் ஒப்படைக்கப்பட்ட பொருட்களைக் கோரினான். மன்னனோ அதை மறுத்து விட்டான். இதன் காரணமாக சோழ மன்னன் இலங்கை மீது படையெடுக்கவே நான்காம் உதய மன்னன் உருஹுணைக்குத் தப்பி ஓடினான். சோழர்கள் அநுராதபுரத்தைக் கொள்ளையிட்டு மீண்டு சென்றனர்.

- ★ நான்காம் மஹிந்தனின் காலத்தில் தென் இந்தியாவின் வட பிரதேசத்தில் பலமடைந்த அரசாக விளங்கிய இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் இலங்கை மீது படையெடுத்தான். நான்காம் மஹிந்தனின் தளபதி இதனை முறியடித்தான்.

- ★ ஐந்தாம் மகிந்த மன்னன் காலத்தில் சோழப்பேரரசனான முதலாம் இராஜராஜன் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்தான். இலங்கை அரசன் உருகுனைக்குத் தப்பியோடினான். இதற்கிடையில் முதலாவது இராஜராஜனின் படை இலங்கையின் வடப்பகுதியைக் கைப்பற்றி தனது இராச்சியத்தின் ஒரு பகுதியாக இணைத்துக் கொண்டான்.

## இலங்கை தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்புகள்

- ★ ஆதிகாலந் தொட்டே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்லுறவு நிலவியது.

- ★ தத்தமது தேவைகளின் போது, ஒரு நாடு இன்னொரு நாட்டிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டது.

- ★ தென் இந்திய உதவியுடன் இலங்கை கலை, கலாசாரத் துறைகளில் முன்னேற்றமடைந்தது.

# 04 பொலன்னறுவை இராசதானி

இந்த அத்தியாயத்தில் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பிரதானமான அரசர்கள், அரசிகள் நாட்டின் அரசியல் பொருளாதார சமய கலாசாரத் துறைகளுக்கு ஆற்றிய சேவைகளைக் கற்பதோடு அவ்விராசதானி வீழ்ச்சியடைவதற்கு ஏதுவான காரணிகளையும் அறிந்து கொள்வீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.




**பொலன்னறுவையின் அமைவிடம்**
**படம் 4.1**

## பொலன்னறுவை முக்கியத்துவம் பெற்றமைக்கான காரணங்கள்

- ★ அநுராதபுரம் இலங்கையின் தலைநகராக இருந்த காலத்தில் பொலன்னறுவைப் பிரதேசத்தில் தோபாவாவி, கிரித்தலைவாவி, மின்னேரியாவாவி முதலிய குளங்கள் அமைக்கப்பட்டிருந்தமை.
- ★ பொலன்னறுவைப் பிரதேசம் மிகவும் வளமான மண்ணைக் கொண்ட விவசாயப் பிரதேசமாகக் காணப்பட்டமை.
- ★ புராதன இலங்கையின் இராசரட்டையும் உருஹுணு ரட்டையும் இணைக்கும் பிரதான வீதி பொலநறுவை ஊடாக அமைந்திருந்தமை.
- ★ உருகுனை பிரதேசம் கலகக்காரர்களின் மற்றும் ஆடசியாளர்களின் கோட்டையாக இருந்தது. மகாவலி கங்கையூடாக உருகுனைப் பிரதேசத்திற்கு நிரவகிப்பது மிகவும் இலகுவாக இருந்தது.
- ★ 3ம் அக்ரபோதி, 4ம் அக்ரபோதி, 2ஆம் சேன முதலிய அரசர்கள் தமது ஓய்வு காலத்தைக் கழிப்பதற்கான மாளிகைகளை பொலன்னறுவையில் அமைத்து இருந்தமை. இதன்படி பொலன்னறுவை பிரதான உபநகராக இருந்தது.
- ★ ஸ்ரீ மாற வல்லபன் எனும் பாண்டிய மன்னன் அநுராதபுரத்தை ஆக்கிரமித்தபோது முதலாம் சேன மன்னன் பாதுகாப்பிற்காக பொலன்னறுவைக்குச் சென்றமை.
- ★ அநுராதபுர அரசர்களின் போர்ப் பாசறைகள் இங்கு அமைந்திருந்தமையால் பொலன்னறுவை 'பாசறை நகர்' எனவும் அழைக்கப்பட்டது.
- ★ கோகர்ண துறைமுகம் அருகில் அமைந்திருந்தமையால் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஊடாக பொருளாதார ரீதியான பயன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை. அது போல வெளிநாட்டுப் படையெடுப்புகள் நாட்டிற்குள் வருமுன்பு துறைமுகத்தில் வைத்தே தோற்கடிக்க கூடியதாகவும் இருந்தது.
- ★ பொலன்னறுவை சோழர் ஆட்சியின்போது தலைநகராக தெரிவு செய்யப்பட்டமை.
- ★ மகாவலிகங்கைக் கரையோரத்தில் பொலன்னறுவை அமைந்திருந்த காரணத்தால் நீர்ப்பாசனம், விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்த பிரதேசமாகக் காணப்-பட்டமை.

## பொலன்னறுவையின் ஏனைய பெயர்கள்

- ★ ஜனநாத மங்களம் (ஜனதாபுரம்)
- ★ புலஸ்தி நகரம்
- ★ பாசறை நகர்
- ★ விஜயராஜபுர

## பொலன்னறுவை ஆட்சியாளர்களும் அவர்களது பணிகளும்

### முதலாம் விஜயபாகு (1055 - 1110)

### இளமைக்காலம்

- ★ பொலன்னறுவையை ஆண்ட சோழர்களை விரட்டி அங்கு இராசதானியை உருவாக்கிய முதலாவது அரசன் விஜயபாகு ஆவான்.
- ★ அநுராதபுர அரச வம்சத்தைச் சேர்ந்த இளவரசர் மொகல்லான, லோகிதா தேவி தம்பதிகளின் சிரேஸ்ட மகனாவான். இவர்களது வாழிடம் உருஹுணு இராச்சியம் என்று சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ இவனது இளமைக்காலப் பெயர் கீர்த்தி இவனுக்கு சித்ரா, ரக்பித, மிஹிந்து எனும் மூன்று சகோதரர்கள் இருந்தனர்.
- ★ இவ்விளவரசன் சிறந்த வீரன், புத்திசாலி, தர்மவான் ஆவான். பிற்காலத்தில் 'இலங்கை முழுவதையும் மட்டுமல்ல, இந்தியாவையும் ஆளக்கூடிய வல்லமையுடையவன்' என்று 'கணக' எனும் சோதிடன் கூறியதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ பிற்காலத்தில் இவன் பெற்றோருக்குத் தெரியாமல் மலை நாட்டுக் காடுகளில் மறைந்து வாழ்ந்து படைதிரட்டினான். அதற்கு புத்தராஜ அல்லது புதல்னா என்பவன் உதவிகள் புரிந்தான். இவ்வாறு இவர்கள் படைகளைத் திரட்டியது சிவனொளி பாத மலையடிவாரக் கிராமமான 'ஹுணுவல' கிராமத்திலாகும்.
- ★ இக்காலகட்டத்தில் இவனுக்கு லோக அல்லது லோகேஸ்வர எனும் எதிரி ஒருவன் இருந்தான். அவனைப் போரிட்டுத் தோற்கடித்தபோதும், அவன் மீண்டும் போர் தொடுக்கவே 'ரெமுனுகல' என்னுமிடத்தில் வைத்து அவனைக் கொலை செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ பிறகு இளவரசன் கீர்த்திக்கு 'ஏப்பா' பதவி கிட்டியது.
- ★ இவனுக்கு கேசதாது காசியப்ப எனும் இன்னுமொரு பிரபலமான எதிரி கதிர்காமத்தில் இருந்ததாகவும் இளவரசன் அவனைத் தோற்கடித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் தளபதியான புதல்னாவும் தேவமல்லவும் உதவியதாக பனாகடுவ கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ 1055 இல் இவன் விஜயபாகு எனும் பெயருடன் ருஹுணு இராச்சியத்திற்கு அரசனானான்.

| | | |
|---|---|---|
| தாய் | - | லோகிதா தேவி |
| தந்தை | - | மொகல்லான |
| உதவி புரிந்தவன் | - | புதல்னா எனும் புத்தராஜ |
| ருஹுணு எதிரிகள் | - | லோகேஸ்வர, கேசதாது காசியப்ப |

### பயிற்சி

01. பொலன்னறுவை தலைநகராக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை?

02. உருஹுணு தேசத்தை கீர்த்தி இளவரசனுக்கு ஐக்கியப்படுத்தும் முயற்சியின்போது எதிரிகளாக செயற்பட்டோர் யாவர்?

03. 1 ஆம் விஜயபாகு எத்தனையாம் ஆண்டு உருஹுணு இராச்சியத்திற்கு அரசனானான்?

04. இம்மன்னனின் சிறுபிராய வாழ்க்கையிலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் 3 எழுதுக.

### செயற்பாடு

*1 ஆம் விஜயபாகு மன்னனின் வாழ்க்கையில் இருந்து நீர் பெற்றுக் கொள்ளும் படிப்பினைகளைப் பட்டியற்படுத்துக.*

## விஜயபாகு இராஜரட்டையை வெற்றி கொள்ளல்

★ விஜயபாகு உருஹுணுரட்டைக்கு மன்னனானதிலிருந்து சோழரை இந்நாட்டிலி-ருந்து விரட்டியடிப்பதையே தனது தலையாய நோக்கமாகக் கொண்டு செயற்பட்டான்.

★ அவ்விலட்சியத்தை அடைவதற்கு முன்னர் மன்னன் முகம் கொடுக்க நேர்ந்த போர்கள் வருமாறு :-

01. விஜயபாகுவின் எழுச்சியைக் கண்டு அஞ்சிய சோழர் உருஹுணு இராச்சியத்தின் மீது போர் தொடுத்தபோது மன்னன் பின்வாங்கவே கதிர்காம நகரைக் கொள்ளையிட்டு மீண்டனர். எனினும் அப்பிரதேசத்தை அவர்களால் வெற்றி கொள்ள இயலவில்லை.

02. கி.பி 1065 இல் சோழர்களுக்கெதிராக இடம்பெற்ற பல கலவரங்களுக்கு விஜயபாகுவே காரணம் எனக் கருதிய அவர்கள் பெரும் படையுடன் உருஹுணு இராச்சியத்தை ஆக்கிரமித்தனர். அப்போது ரவிதேவ, சலயன எனும் இரு தளபதிகளும் சோழருடன் சேர்ந்து கொண்டமையால் விஜயபாகு உருஹுணுவின் பாதுகாப்புமிக்க கோட்டையான பலுட்டிய கிரிக்கு தப்பிச் சென்றான். பின் சரியான சந்தர்ப்பத்தில் சோழரைத் தாக்கி அவர்களது தளபதியைக் கொன்றதுடன் நில்லாது பொலநறுவையையும் கைப்பற்றிக் கொண்டான்.

03. தமது படையினரின் தோல்வியைக் கண்டு கோபமடைந்த சோழப் பேரரசன் மீண்டும் சோழ நாட்டிலிருந்து படையெடுத்து வந்தான். அநுராதபுரத்திற்கு அருகில் நடைபெற்ற இப்போரில் சிங்களப் படையினர் படுதோல்வி அடைந்தனர். எனவே விஜயபாகு மன்னன் பொலன்னறுவையைக் கைவிட்டு கேகாலை மாவட்டத்தில் இருந்த 'வாகிரிகல' எனும் இடத்திலிருந்து மீண்டும் படை திரட்டினர்.

அநுராதபுரத்தருகில் சிங்களப்படை தோல்வியடையவே மன்னன் 'வாகிரிகல' எனும் இடத்திற்குத் தப்பியோடியதாக 1067 இல் எழுதப்பட்ட 'திருக்முக்கூடல்' எனும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இக்காலகட்டத்தில் விஜயபாகுவிற்கு எதிராக உருஹுணு இராச்சியத்திலும் கிளர்ச்சியொன்று நடந்தது.

★ அந்தக் கிளர்ச்சியை அடக்கிய மன்னன் பொலன்னறுவையை ஆக்கிரமிப்பதற்கு திட்டமிட்டு படையைத் திரட்டினான்.

★ இப்படையெடுப்பிற்கு மன்னனே தலைமை தாங்கினான். இரண்டு பக்கங்களிலும் தாக்குதலை நடத்தியவாறு படையணிகள் இறுதியில் ஓரிடத்தில் சந்திப்பதே மன்னனின் திட்டமாகும்.

★ மேற்குத் திசையால் சென்ற படை அநுராதபுரத்திற்கும், இந்தியாவில் இருந்து வரும் படைகளை முறியடிப்பதற்காக மகாதித்த துறைமுகத்திற்கு செல்லும் நோக்கில் தக்கிண தேசம் ஊடாக நகர்ந்தது.


★ கிழக்குத் திசையில் சென்ற படை பொலன்னறுவையைக் கைப்பற்றும் நோக்கில் வட மேற்காகத் திரும்பிச் சென்றது.

★ மேற்குத் திசையில் சென்ற படை அநுராதபுரத்தையும், கிழக்குத் திசையால் சென்ற படை பொலநறுவையையும் அடைந்த பின்னர் மன்னன் தலைமை தாங்கிய மூன்றாவது படை மத்திய பாதையூடாகச் சென்று பொலன்னளறுவையை ஆக்கிரமித்தது.

★ மிகவும் வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட இப்படையெடுப்பின் முடிவில் 1070 ஆம் ஆண்டு மூதாதையரின் தலைநகரமான அநுராதபுரத்தை அடைந்த மன்னன் அங்கு முழு இலங்கைக்குமான மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். என்றாலும் அவன் பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்.

★ சிறுபிராயம் முதல் உயர்ந்த இலட்சியத்துடன் பல சிரமங்களுக்கு மத்தியில் திட்டமிட்டுப் படையெடுப்புக்களை மேற்கொண்ட விஜயபாகு மன்னன் உள்நாட்டு எதிரிகளை முறியடித்து வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தாய் நாட்டை மீட்டெடுத்தான்.

★ விஜயபாகு மன்னன் திறமைமிக்க தளபதியாக, போர்வீரனாக அறிவாளியாகத் திகழ்ந்து நாட்டை மீட்ட வீரனாவான்.




விஜயபாகு மன்னனின் பொலன்னறுவை மீதான படையெடுப்பு வியூகம் படம் 4.2

## பயிற்சி

திறமை மிக்க படைத்தளபதி ஒருவனிடம் காணப்பட வேண்டிய பண்புகள் எவை என எழுதுக.

## செயற்பாடு

"நாட்டையும் சமாதானத்தையும் பாதுகாப்பது நமது கடமையாகும்" எனும் தலைப்பில் ஒரு கட்டுரை அல்லது கவிதை எழுதுக.

## முதலாம் விஜயபாகு மன்னனின் சேவைகள்

### அரசியல் ரீதியான சேவைகள்

★ சோழருக்கு எதிராகப் படையெடுக்கும் முன்னர் உருஹுணு இராச்சியத்தில் தனது ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்டமை.

★ மலைநாட்டையும் உள்நாட்டு எதிரிகளிடமிருந்து மீட்டு தென் பகுதியுடன் இணைத்து கதிர்காமத்தை நிர்வாக மத்திய நிலையமாக மாற்றியமைத்தமை.

★ சோழப் பேரரசின் கீழ் அடிமைப்பட்டிருந்த இராசரட்டையை மீட்டு முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தமை. (கி.பி 1017-1070)

★ இலங்கையில் முதன் முறையாக கடற்காவல் அரண்களை (மகாதித்தவில்) ஆரம்பித்து வெளிநாட்டுப் படையெடுப்பைத் தடுத்தமை.

★ ஐக்கியமும் செழிப்பும் மிக்கதோர் இராச்சியத்துக்கான பின்னணியை உருவாக்கியமை.

### பொருளாதார ரீதியான சேவைகள்

★ சோழர் ஆட்சிக் காலத்தில் தூர்ந்து போன குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றைப் புனரமைப்புச் செய்தல்.

உ-ம் மஹாகல்கடவல, மஹகணதராவ, நாச்சதுவ முதலிய குளங்கள்.

★ பொலன்னறுவைப் பகுதியில் அமைந்திருந்த பாரிய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்திய எலஹரக் கால்வாயின் உடைந்த பகுதிகள் புனரமைக்கப்பட்டன. கந்தளாய், மின்னேரியா, கவுடுலு குளப்பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மீண்டும் கட்டியெழுப்பியமை.

★ ஊவா மாகாணத்தில் 'புதுகுண வாவியை' அமைத்தமை.

### சமய கலாசார ரீதியான சேவைகள்

★ நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிதைவடைந்து காணப்பட்ட விகாரைகளை புனர் நிர்மாணம் செய்தமை.

உ-ம்:- அநுராதபுரத்தில் மகாவிகாரை, அபயகிரிய, ஜேதவனராம, தென்பகுதியில்- திஸ்ஸ மகாராம, சந்தகிரி விகாரை, தெவிநுவர விகாரை, மகியங்கன விகாரை.

★ பர்மா (ராமஞ்ஞ) தேசத்தில் (மியன்மார்) பௌத்த பிக்குகளை வரவழைத்து 'உபசம்பதா' வைபவத்தை நடாத்தி பிக்கு சாசனத்தை உயிர்ப்பித்தான்.



சிவனொளி பாத மலை
படம் 4.3

★ பொலன்னறுவையில் 3 மாடிகளைக் கொண்ட தலதா மாளிகையை அமைத்து, புனித தந்ததாதுவிற்கான விழாவை நடாத்தினான்.

★ மன்னன் ஏழை மக்களுக்கு மூன்று தடவைக்கு துலாபார தானம் செய்தான். சிவனொளிபாத யாத்திரிகர்களின் நன்மை கருதி பாதையை செப்பனிட்டு தங்குமடங்களையும் ஏற்படுத்தினான்.

★ சிவனொளிபாத பரிபாலனத்திற்காக கீலிமலை எனும் கிராமத்தை ஒதுக்கினான்

*மன்னனின் இச்சேவைகள் பற்றி அம்பகமுவ கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

★ கல்விமானும், கவிஞனுமான மன்னன் பிரிவெனாக்கள் பலவற்றை அபிவிருத்தி செய்தான்.

★ வெளிநாட்டிலிருந்து வந்த கல்விமான்களைக் கொண்டு இலக்கியத்துறையை மேம்பாடுறச் செய்தான்.

## மன்னனின் வெளிநாட்டுக் கொள்கைகள்

★ இந்தியாவில் சோழர்களின் எதிரி இராச்சியங்களுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டமை.

★ வெளிநாட்டுறவுகளுக்குள் திருமணத் தொடர்புகள் முக்கியம் பெறுகின்றன.

01. முதலாம் விஜயபாகு மன்னன் கலிங்க இளவரசி திரிலோக சுந்தரியை இரண்டாந் தாரமாக திருமணம் புரிந்தான்.

02. தனது தங்கையான மித்தா இளவரசியை பாண்டிய நாட்டு இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுத்தான்.

*செனரத் பரண விதான அவர்களின் கருத்துப்படி எமது நாட்டின் அதி சிறந்த ஆட்சியாளன் முதலாம் விஜயபாகு மன்னனாவான்.*

## முதலாம் விஜயபாகு மன்னனின் சிறப்பு

★ முதலாம் விஜயபாகு மன்னன் 53 ஆண்டுகளாக சோழராட்சியில் கீழ் இருந்த நாட்டை விடுவித்து மீண்டும் சுதந்திர இனமொன்றைக் கட்டியெழுப்ப அத்திவாரமிட்டான்.

★ சோழராட்சியில் வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சிறந்த தலைநகரமொன்றை அமைத்தான்.

★ புத்தசமயத்தினதும் பிக்குசாசனத்தினதும் இலக்கியத்தினதும் முன்னேற்றத்தின் பொருட்டு செயற்பட்டான்.

★ வெளிநாடுகளிலிருந்து வந்த கல்விமான்களை இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட ஊக்குவித்தான்.

## பயிற்சிகள்

01. விஜயபாகு மன்னனின் அரசியல், பொருளாதார, சமய, கலாசார துறைகளுக்கான சேவைகள் இவ்விரண்டு எழுதுக.

02. விஜயபாகு வெளிநாட்டுத் தொடர்புகள் வைத்திருந்த இரு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

03. இலங்கைப் புற உருவப் படத்தில் மகாகம, அநுராதபுரம், பொலன்னறுவை உரோகண தேசம், மல்வத்து ஓயா, மகாவலிகங்கை, கோகண்ண மற்றும் மாந்தோட்டை என்பவற்றைக் குறித்துப் பெயரிடுக.

04. பின்வரும் பந்தியின் இடைவெளிகளை நிரப்புக.

மொகலான லோகிதா தம்பதிகளின் மூத்த புதல்வன் .................. ஆவான். இவ்விளவரசன் உருஹுணுரட்டையின் மன்னனாவதற்கான எதிர்பார்ப்புடன் ........... பகுதியில் படை திரட்டினான். அங்கு அவனுக்கு .................., ................. எனும் எதிரிகள் இருவர் காணப்பட்டனர். அதே போன்று இளவரசனுக்கு ................. எனும் நெருங்கிய நண்பனும் இருந்தான். எதிரிகளை வென்று 1055 ஆம் ஆண்டு ..................... இராச்சியத்தின் அரசனானான். பின்னர் ....................... ஆட்சியின் கீழிருந்த இராச்சியத்தை மீட்டெடுத்து ................. யைத் தலைநகராகக் கொண்டு முழு நாட்டையும் ஆட்சி செய்தான்.

### செயற்பாடு


*1 ஆம் விஜயபாகு சிறந்த ஆட்சியாளன் எனும் தலைப்பில் சுவர்ப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை வரையவும்.*

## பராக்கிரமபாகு மன்னன் (1153 - 1186)


முதலாம் விஜயபாகு இலங்கையை ஒன்றுபடுத்தி ஆட்சி செய்தான் அவனின் பின் வந்த பலவீனமான ஆட்சியாளர்கள் காரணமாக மீண்டும் பல பிரிவுகளாக பிரிந்து சென்றது. மீண்டும் நாட்டை ஒன்றுபடுத்தி ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த மன்னன் முதலாம் பராக்கிரமபாகு ஆவான்.

இம்மன்னன் ஈட்டிய உள்நாட்டு, வெளிநாட்டு வெற்றிகள் மற்றும் பொருளாதார, சமய, கலாசாரத் துறைகளில் ஆற்றிய சேவைகள் காரணமாக 'மகா பராக்கிரமபாகு' என அழைக்கப்பட்டான்.

## இளமைக்காலம்


பொத்குன் விகாரைக்குமுன்னுள்ள சிலை, படம் 4.4

- ★ மானாபரண மன்னனுக்கும் இரத்னாவலி அரசிக்கும் மகனாக தக்கிண தேசத்தின் கேகாலைப் பகுதியில் 'தெடிகம' எனும் கிராமத்தில் பிறந்தான்.
- ★ இளவரசனது சிறு பிராயத்திலேயே தந்தை காலமானார்.
- ★ இரத்னாவலி அரசி இளவரசனுடன் உருஹுணுவில் இருந்த ஸ்ரீ வல்லப எனும் மானாபரணவின் சகோதரனிடம் பாதுகாப்புக் கருதிச் சென்றாள்.
- ★ மானாபரண மன்னனின் மறைவின் பின்னர் அவனது மூத்தசகோதரனான கீர்த்தி ஸ்ரீ மேக என்பவன் தக்கிண தேசத்தின் அரசனானான். அவன் பராக்கிரமபாகு இளவரசனுக்கு கலைகளைப் பயிற்றுவித்து பாதுகாத்து வந்தான்.
- ★ தனது சிறிய தந்தையின் போர்ப் பயிற்சி, அரச நிர்வாகம் முதலிய கலைகளை பராக்கிரமபாகு இளவரசன் கற்றுள்ளான்.



பொலன்னறுவை இராசதானி காலப்பகுதியில் இலங்கையின் நிர்வாகப் பிரிவுகளின் படம் 4.5

### பராக்கிரமபாகுவின்

| | |
|---|---|
| தாய் | :- இரத்னாவலி |
| தந்தை | :- மானாபரண |
| பிறப்பு | :- தக்கிண தேசம் |
| வளர்ப்பு | :- கீர்த்திஸ்ரீமேக (சிறிய தந்தை) |

### பயிற்சி

01. இலங்கைப் புறவுருப் படமொன்றில் உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தையும், கேகாலை, அநுராதபுரம், பொலநறுவை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைக் குறித்து நிறந்தீட்டுக.
02. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் தாய், தந்தை சிறிய தந்தை ஆகியோரின் பெயர்களைத் தருக.

## முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் இலங்கையை ஒன்றுபடுத்தும் முயற்சி

★ இம்மன்னனின் இளமைப் பருவத்தில் இலங்கையானது இராசரட்டை, தக்கிண தேசம், தொலஸ்தஹஸ்ரட்ட, அட்டதஹஸ்ரட்ட என்று பிரிந்து காணப்பட்டது.

★ தனது சிறிய தந்தையான கீர்த்தி சிறிமேகனின் மறைவின் பின்னர் தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக முதலாம் பராக்கிரமபாகு அரசியலில் அடியெடுத்து வைத்தான்.

**செயற்பாடுகள்**

பராக்கிரமபாகு மன்னனின் படத்தை வரைந்து அதனை உமது வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டவும்

★ தக்கிண தேசத்தில் தனது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டி 'பராக்கிரமபுர' (பண்டுவஸ்நுவர) எனும் தலைநகரிலிருந்து ஆட்சி செய்தான்.

★ இராசரட்டைக்கு அரசனாவதே மன்னனின் இலட்சியமாக இருந்தமையால் அதற்கான சில நடவடிக்கைகளை பராக்கிரமபாகு மேற்கொண்டான்.

01. இராசரட்டையின் ஆட்சியாளனான இரண்டாம் கஜபாகு மன்னனுடன் நட்புறவு கொண்டு அங்குள்ள விபரங்களை அறிந்து கொண்டான்.

02. இரண்டாம் கஜபாகு மன்னனுடன் யுத்தம் புரிந்த பராக்கிரமபாகு அவனை வெற்றி கொண்டான். என்றாலும் பௌத்த பிக்குகள் அங்கு தலையிட்டு வயோதிபத்திலிருந்த கஜபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் பராக்கிரமபாகு மன்னனுக்கு ஆட்சி உரித்துடையது என்ற உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டு வைத்தனர். (அவ் உடன்படிக்கை சங்கமுவ கல்வெட்டில் காணப்படுகின்றது.)

★ இதன்படி 1153 ஆம் ஆண்டு இராசரட்டையின் ஆட்சியை 1ஆம் பராக்கிரமபாகு என்ற பெயரில் இராசரட்டையின் மன்னனானான்.

★ மன்னனின் அடுத்த நடவடிக்கை உருஹுணு இராச்சியத்தைக் கைப்பற்றுவதாகும். இச்சந்தர்ப்பத்தில் உருஹுணு ஆட்சியாளனான இரண்டாம் மானாபரண மன்னன் பராக்கிரமபாகுவுக்கு எதிராகப் படையெடுத்தான். அது தோல்வியில் முடிந்தது. எனவே அம் மன்னனின் தாயான சுகலா தேவி பராக்கிரமபாகுவுக்கு எதிராகப் படையெடுத்தாள். இப்படையெடுப்பை உதுன்தொர உருவெல என்ற முறியடித்து மன்னன் சுகலாதேவி வசமிருந்த புத்த பெருமானின் புனித தந்தம் மற்றும் பாத்திரத்தையும் தன் வசமாக்கிக் கொண்டான். இலங்கை ஆட்சி உரிமையின் சின்னமாக விளங்கிய புனித தந்ததாதுவை பராக்கிரமபாகு பெற்றுக் கொண்டமையால் முழு நாட்டுக்குமான மாமன்னனாக முடிசூட்டிக் கொண்டான்.

## முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இலங்கையின் மன்னனாக வளர்ச்சிப் பெற்ற படிமுறைகள்

01. தக்கிண தேசத்து அரசனாதல்

02. இராசரட்டையின் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்

03. உருஹுணு தேசத்தை தனது ஆட்சியின் கீழ் கொண்டுவருதல்

04. முழு இலங்கைக்கும் அரசனாதல்.

### பயிற்சி

01. பராக்கிரமபாகு மன்னனின் சிறுபராயத்தில் காணப்பட்ட நிர்வாகப் பிரிவுகளை இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுங்கள்.

02. பராக்கிரமபாகு மன்னனின் நெருங்கிய உறவினர்களின் பெயர்களை அட்டவணைப்படுத்தி, உறவுமுறைகளையும் குறிப்பிடுக.

## பராக்கிரமபாகு மன்னனின் பொருளாதார சேவைகள்

★ நாட்டின் விவசாயத்துறை அபிவிருத்திக்காக நீர்ப்பாசனத் துறையை மேம்படுத்தல்.

★ தக்கிண தேசத்தின் பொருளாதாரத்தைச் செழிப்படையச் செய்வதற்காக தெதுறு ஓயாவில் மூன்று இடங்களில் அணைகளைக் கட்டி விவசாயத்திற்கான நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டமை.

★ பாராக்கிரம (பண்டுவஸ்நுவர) அருகில் காணப்பட்ட பண்டா வாவியை விரிவுபடுத்தியமை.

★ சதுப்பு நிலங்களில் வாய்க்கால் அமைத்து நீரை அகற்றி மண்ணிட்டு நிரப்பி விவசாய நிலங்களாக மாற்றியமைத்தமை. உதாரணம் பஸ்யோதுன்ரட்ட

★ உருஹுணு இராச்சியத்திலும், இராசரட்டையிலும் குளங்களையும், அணைகளையும் அமைத்தலும், புனரமைத்தலும்.

★ பொலன்னறுவை அரசனான பின் தோப்பா வாவி, தும்புளு வாவி, எரபது வாவி, கொக்கா வாவி முதலிய குளங்களை இணைத்து மிக விசாலமான பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தமை.மகாவலியின் கிளையாறான அம்பன் கங்கைக்குக் குறுக்காக அங்கமடில்ல எனுமிடத்தில் அணைகட்டி ஆகாய கங்கை எனும் கால்வாய் மூலம் பராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் வழங்கியமை.

★ இதை விட பராக்கிரமபாகு மன்னனால் மின்னேரியா வாவி, கிரித்தள வாவி, கலா வாவி, கவுடுலு வாவி ஆகிய பல குளங்கள் புனரமைக்கப்பட்டன.

★ பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.



பராக்கிரமபாகு சமுத்திரம்
படம் 4.6

**1ம் பராக்கிரமபாகுவின் கூற்றுக்கள்**

'வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்'

'என்னுடைய இராசதானியில் எந்தவோர் இடத்திலும் விவசாயத்திற்குப் பயன்படாத சிறு நிலமேனும் இருக்கக் கூடாது.'
(சூளவம்சம்)

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் இலங்கை, 'கிழக்கின் தானியக் களஞ்சியம்' என்று வர்ணிக்கப்பட்டதிலிருந்து எமது நாடு உணவுற்பத்தியில் தன்னிறைவடைந்திருந்தமை தெளிவாகின்றது.

## சமய கலாசார சேவைகள்

★ பிளவுபட்டிருந்த பௌத்த பிக்குகளை ஒன்றுபடுத்தியமை.

★ இதற்காக திம்புலாகல காசியப்ப தேரரின் வழிகாட்டலின்படி 'பொலன்னறுவ கதிகாவத்த' எனும் பிக்குகளின் ஒழுக்க விதிக் கோவை பொலன்னறுவை கல்விகாரைக்கருகில் உள்ள குன்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

★ பல விகாரைகளையும் கட்டுவித்தான்.
உ-ம் : உத்தராம விகாரை, லங்காதிலக சிலைமனை, கிரிவிகாரை, பளு விகாரை, கொடவெஹர தெமிழ மகாசாய. ஆலாஹன பிரிவென கல்வி நிலையம் என்பன இம்மன்னனால் அமைக்கப்பட்டவையாகும்.

★ புனித தந்த தாதுவிற்கான 'தலதா பெரஹர' எனும் சமய கலாசார விழாவை நடத்தியமை.



பராக்கிரம பாகுவின் அரசமாளிகை
படம் 4.8



தாமரைத் தடாகம்
படம் 4.7

★ 'சத்மஹல் பிரசாதய' எனும் ஏழடுக்கு அரச மாளிகையும் லங்காதிலக சிலைமனையும் மன்னனின் கட்டடக் கலைக்கு சான்று பகர்கின்றன.

## பராக்கிரமபாகுவின் வெளிநாட்டு உறவுகள்

★ இம்மன்னன் வெளிநாட்டு உறவுகளின் விசேட அம்சம் வெற்றிகரமான படையெடுப்புகளாகும்.

## 01. பர்மா மீதான படையெடுப்பு

பர்மிய மன்னனான அலங்வுசிங் இலங்கையிலிருந்து சென்ற வர்த்தகக் குழுவைத் துன்புறுத்தியமைக்காகவும் பர்மா ஊடாக கம்பூச்சியாவிற்குப் பயணம் செய்த இலங்கை இளவரசியை சிறைப் பிடித்தமைக்காகவும் 1164 ஆம் ஆண்டு மன்னன் பர்மா மீது படையெடுத்தான். இப்படையெடுப்பை வெற்றிகரமாக முடித்த தளபதிக்கு கிராமங்களை மன்னன் பரிசளித்ததாக தெவனகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 02. பாண்டிய நாட்டுக்கு படை உதவி

1169 இல் பராக்கிரம பாண்டிய மன்னனின் ஆட்சியின்போது குலசேகர பாண்டியன் என்பவன் படையெடுத்து பட்டத்து ராணியையும், பிள்ளைகளையும் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியவேளை பராக்கிரம பாண்டிய மன்னனிடம் உதவி கோரவே, லங்காபுர எனும் தளபதியின் கீழ் ஒரு படையை அனுப்பி வைத்தான். அவர்கள் குலசேகர பாண்டியனைத் தோற்கடித்து பராக்கிரம பாண்டியனுக்கு ஆட்சியைப் பெற்றுக் கொடுத்த பின்னர் இராமேஸ்வரத்தில் 'பராக்கிரமபுரம்' எனும் பெயரில் ஒரு கோட்டையை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது.

★ இலங்கைக்கு ஏற்பட்ட அவமானத்தைக் களைவதற்கு பர்மா மீது படையெடுப்பு
★ உதவி கோரி பாண்டிய மன்னனுக்கான படையுதவி
★ தென்னிந்தியாவின் இராமேஸ்வரத்தில் பராக்கிரமபுரம் எனும் கோட்டையை அமைத்தல்.
★ மகாபராக்கிரமபாகு மன்னன் பாண்டிய தேசத்தின் மீது படையெடுக்க ஆயத்தம் செய்த போது ஊறாத்தோட்ட (ஊர்காவற்றுறை) துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்தலைத் தடுத்ததாக இந்தியாவில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது

### பயிற்சி

01. பராக்கிரமபாகு மன்னன் மேற்கொண்ட அரசியல், பொருளாதார, சமய சேவைகளை அட்டவணைப்படுத்துக.
02. பராக்கிரமபாகு மன்னனின் நீர்பாசனத் துறைக்கான சேவைகளைப் பட்டியலிடுக.
03. இம்மன்னனின் காலத்தில் காணப்பட்ட வாஸ்து சாஸ்த்திர அம்சங்களைக் குறிப்பிடுக.
05. பராக்கிரமபாகு மன்னனின் வாழ்க்கையிலிருந்து உங்கள் வாழ்வை மேம்படுத்துவதற்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய பண்புகள் எவை?

## நிஸங்கமல்ல மன்னன் (1187 - 1196)

முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சியின் பின்னர் நாட்டில் மீண்டும் அரசியல் குழப்ப நிலை தோன்றியது. அவ்வாறானதொரு காலகட்டத்தில் நிஸங்க மல்லன் மன்னன் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு எடுத்த முயற்சியானது இவனது ஆட்சியின் முக்கிய அம்சமாகும். இவன் மகா பராக்கிரமபாகுவின் பின் பொலன்னறுவையை ஆண்ட சிறந்த மன்னனாக கருதப் படுகின்றான்.

★ நிஸங்கமல்ல மன்னன் கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன்.

★ இம்மன்னன் இலங்கையில் ஒரு புதிய அரசவம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான்.

★ கலிங்க நாட்டின் சிங்க புரத்தின் ஸ்ரீ ஜயகோப மன்னனினதும் பார்வதி தேவியினதும் மகனாகப் பிறந்தான்.

### பயிற்சி

**வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.**

நிஸங்கமல்ல மன்னன் ...................... வம்சத்தைச் சேர்ந்த ...................... மன்னனினதும் பார்வதிதேவியினதும் மகனாவான். இலங்கைக்கு வந்து ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொண்ட ............... இளவரசனாவான்.

(பாண்டிய, கலிங்க, ஜயகோப, மித்தா, வெளிநாட்டு)

## நிஸங்கமல்ல மன்னனின் சேவைகள்

இம் மன்னனின் கல்வெட்டுக்கள் மூலம் அவனைப் பற்றிக் கூடுதலான தகவல்களைப் பெறக் கூடியதாகவுள்ளது. கல்பொத்தக் கல்வெட்டு இதில் முக்கியமானது. பொலன்னறுவை, தம்புளை, பண்டுவஸ்நுவர, தெவிநுவர, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் நிஸங்கமல்லனின் காலக் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை அவனது ஆட்சி நாடு முழுவதும் பரவியிருந்தமையை உறுதிப்படுத்துகின்றது.



கல்பொத்த கல்வெட்டு படம் 4.9

## அரசியல் ரீதியான சேவைகள்

★ சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அறிவுபூர்வமாகச் செயற்பட்டு தனது பரம்பரைக்கு அரச உரிமையைப் பெற்றுக் கொடுத்தமை.

★ ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுப் படையெடுப்புக்களோ உள்நாட்டுக் கலவரங்களோ ஏற்படாமையால் மன்னனால் அதிகம் சாதிக்க முடிந்தது.

★ அபிவிருத்தியுடன் கூடிய அரச நிர்வாகத்தை மேற்கொண்டமை (பிரதான வீதிகள் கற்களை நட்டு நகரங்களுக்கிடையிலான தூரத்தைக் கணித்தல்)

★ அடிக்கடி குழப்பங்கள் ஏற்படுகின்ற உருஹுணு இராச்சியத்திற்கு மன்னன் விஜயம் செய்தல், மன்னனுக்கு சார்பானவர்களின் தேவையை நிறைவு செய்தல், அவர்களின் நலன்புரி விடயங்களைக் கவனித்தல் என்பன மூலம் மக்களின் அரச விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டமை.

★ இம்மன்னன் உருஹுணு, மாயா, பிஹிட்டி எனும் மூன்று பிரதேசங்களிலும் கல்வெட்டுக்களைப் பொறித்திருப்பதன் மூலம் முழு நாட்டையும் ஆட்சி செய்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

★ பௌத்தர் அல்லாத வேறு எவருக்கும் இலங்கை அரசுக்கோ சிம்மாசனத்துக்கோ உரிமை கோரமுடியாது எனும் கருத்து மூலம் அரசின் சிங்கள, பௌத்த பாரம்பரியத்தை நிலைநாட்டியுள்ளான்.

## பொருளாதார ரீதியான சேவைகள்

★ இம்மன்னன் பல குளங்களை அமைத்தாக அவனின் கல்வெட்டுக்களில் குறிப்பிட்ட போதிலும் இனங்காணப்பட்டவை ஒரு சிலவே. பாரிய குளங்கள் அமைப்பதை விட சிறுகுளங்கள் பலவற்றைப் புனரமைப்புச் செய்துள்ளான்.

★ பொதுமக்களின் வரிச் சுமையைக் குறைத்தான். சில வரிகளுக்கு 5 வருடகால வரிவிலக்களித்தான்.

★ ஏழை எளியவர்களுக்கு தானங்கள் வழங்கியமை (துலாபாரதானம்) இம்மன்னனின் முக்கிய பண்பாகும்.

★ இதுவரை காலமும் நிலவிவந்த தானியங்களை தானம் செய்யும் வழக்கத்திற்கு மாறாக, புடைவைத் துணிகளையும் உணவுப் பொருட்களையும் பணத்தையும் தானமாகக் கொடுத்ததாக 'கட்டுஹல்கே' கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

## சமய கலாசார ரீதியான சேவைகள்

★ பௌத்த சமய வளர்ச்சிக்குப் பாரிய பணியாற்றினான்.

★ ரன்கொத் விகாரை, ஹட்டதாகே. நிஸங்கலதா மண்டபம், அரச மண்டபம் என்பன அவர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்துறையின் சான்றாகும்.

★ பௌத்த பிக்குகள், பிராமணர்கள், அங்கவீனர்கள், நோயாளிகள் முதலியோருக்கு நிலம், உணவு, உடை, மாடு என்பனவற்றைத் தானம் செய்தமை. (கட்டுஹல்கே கல்வெட்டு)

★ தம்புளை விகாரையை புனரமைத்ததுடன் அங்கிருந்த 73 புத்தர் சிலைகளுக்கு தங்க முலாம் பூசியதாக தம்புளை கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

★ சிவனொளிபாத மலை, ருவன்வெலிசாய, களனி விகாரை, மகாகம விகாரை மஹியங்கன விகாரை முதலிய தலங்களுக்கு தனது பரிவாரங்களுடன் யாத்திரை மேற்கொண்ட மன்னன் இப்புனித தலங்களுக்கு உதவியும் வழங்கினான்.

## வெளிநாட்டுக் கொள்கை

★ பாண்டிய சோழப் பேரரசுகளிடம் கப்பம் பெறுகின்ற மன்னனாகக் செயற்பட்டமை.

★ ஒரு யுத்தத்தின்போது பாண்டிய நாட்டுக்குப் படையுதவி வழங்கிய சிங்களப் படையினர் பாண்டிய மன்னனை வெற்றியடையச் செய்ததுடன் இராமேஸ்வரத்தில் கோயில் ஒன்று அமைத்தமை.

★ கர்நாடகம், வங்கம், ஒரிசா, ஆந்திரா, குஜராத், பர்மா, கம்பூச்சியா முதலிய இராச்சியங்களுடன் நட்புறவுடன் செயற்பட்டமை.

★ விஜயநகர், சாளுக்கிய, குஜராத் அரச குடும்பங்களுடன் திருமணத் தொடர்பு வைத்திருந்தமை.

★ அரசியல் உறுதியை நிலைநாட்டியமை.


★ நாட்டில் அமைதியை ஏற்படுத்தியமை.

★ தானதர்மங்களை செய்தமை.

★ பொருளாதார நிலைமைகளைச் சீர்ப்படுத்தியமை.

★ பௌத்த சமயத்துக்குத் தொண்டாற்றியமை.

★ மக்களின் பொது நல மேம்பாட்டில் கவனம் செலுத்தியமை.



ரன்கொத் விகாரை
படம் 4.11



நிஸங்கலதா ராஜ மண்டபம் படம் 4.10

### பயிற்சி

01. நிஸங்கமல்ல மன்னன் பற்றிய தகவல் களைத் தரும் வரலாற்று மூலாதாரங்கள் இரண்டின் பெயர் தருக.
02. இம்மன்னனின் அரசியல், பொருளாதார, சமய, கலாசார சேவைகளை அட்டவணைப்படுத்துக.
03. முதலாம் விஜயபாகு, 1ஆம் பராக்கிரம பாகு, நிஸங்கமல்லன் ஆகிய அரசர்களிடம் காணப்பட்ட ஆட்சி சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
04. நிஸங்கமல்ல மன்னன் தன்னை நிலைபடுத்திக் கொள்வதற்கு பிரயோகித்த வழிமுறைகளைத் தேடியறிந்து அவற்றை உமது வாழ்க்கையிலும் உரிய இடங்களில் பயன்படுத்துக.

## 02. பொலன்னறுவை இராசதானியில் ஆட்சி செய்த அரசிகள்

இலங்கையில் அதிகமான அரசிகள் சிம்மாசனம் ஏறியது பொலன்னறுவை காலத்தி லாகும். நிஸங்கமல்ல மன்னனின் ஆட்சிக் காலத்தின் பின்னர் 3 தடவைகள் நாட்டில் அரசியல் குழப்ப நிலைமை தோன்றியது. சிம்மாசனத்திற்குரிய போட்டியே இக்குழப்ப நிலைக்குரிய காரணமாகும். இவ்வாறான காலகட்டத்தில் முதலாம் பாராக்கிரமபாகு மன்னனின் மனைவியாகிய லீலாவதி சிம்மாசனம் ஏறினாள்.

### லீலாவதி ராணி

- ★ பாண்டிய வம்சத்தை சேர்ந்த ஜகதிபாலாவின் மகள்.
- ★ முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவியாவாள்.
- ★ கணவனின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட சிம்மாசன உரிமையைப் போராட்டத்தின் போது அரச உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அரசியலுக்கு வந்தாள்.

★ இவ்வரசி இடையிடையே மூன்று தடவைகள் பொலன்னறுவையின் ஆட்சிபீடம் ஏறினாள்.

01. 1197 - 1200 கி.பி
02. 1209 - 1210 கி.பி
03. 1211 - 1212 கி.பி

## ஆட்சிக் காலத்தில்

★ கீர்த்தி எனும் தளபதியின் உதவி கிடைத்தது.
★ சோழப் படையெடுப்புகள் மூன்றுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.
★ தடைகளுக்கு மத்தியிலும் புத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காகவும் கலை மற்றும் இலக்கிய படைப்புகளுக்காகவும் உழைத்தாள்.
★ நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளது.
★ 'முவதேவிதா வத சசந்தாவத' எனும் படைப்பிலக்கியம் வெளிவருவதற்கு அனுசரணை வழங்ககினாள்.

## கல்யாணவதி ராணி (1202 - 1209)

★ கலிங்க வம்ச இளவரசியாவாள் நிஸங்கமல்ல மன்னனின் பட்டத்து ராணியாவாள்.
★ 6 வருடங்கள் அரசியாக ஆட்சிபுரிந்தாள்.
★ பொலன்னறுவை இராச்சியத்தில் நிஸங்கமல்ல மன்னனின் ஆட்சியின் பின்னர் தோன்றிய சிம்மாசன உரிமைப் போராட்டத்தின்போது சஹாஸமல்ல மன்னனை ஆட்சியிலிருந்து நீக்கிய அயஸ்மன்ன எனும் தளபதி லீலாவதியை சிம்மாசனம் ஏற்றினான்.
★ இவ்வரசி பௌத்த சமயத்தின் மேம்பாட்டிற்காக உழைத்தாள். நாட்டில் அரசியல் உறுதி இல்லாத போதும் தென்பகுதியில் வெலிகம எனும் இடத்தில் 'ராஜகுலவத்தன' எனும் பிரிவெனாவை அமைத்து அதற்கு நிலபுலன் களையும் வழங்கினாள்.

## சுகலாதேவி ராணி

★ உருஹுணு இராச்சிய அரசனான ஸ்ரீ வல்லப மன்னனின் மனைவியாவாள்.
★ இவ்வரசி முதலாம் விஜயபாகு மன்னனின் பரம்பரை என்ற வகையில் பொலன்னறுவை சிம்மாசனத்திற்கு உரிமை கோரிப் போராடினாள்.
★ இவள் இரண்டாம் மானாபரன மன்னனின் தாயாவாள்.
★ புத்த பெருமானின் புனித தந்தம் தன்வசம் இருப்பதால் இலங்கையின் ஆட்சியுரிமை தனது மகன் இரண்டாம் மானாபரணவுக்கே உரியது என்று பறைசாற்றினாள்.
★ இவ்வரசியைத்தான் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தனது ஆட்சிக் காலத்தில் தோற்கடித்து புனித தந்த தாதுவைக் கைப்பற்றினான். என்பது குறிப்பிடத்தக்கது.

## மித்தா இளவரசி

- ★ அநுராதபுர அரச பரம்பரையைச் சேர்ந்தவள்.
- ★ மொகலான - லோகிதா தேவி தம்பதியின் மகளாவாள்.
- ★ முதலாம் விஜயபாகு மன்னனின் தங்கையாவாள்.
- ★ மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாக சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ★ இத்திருமண உறவு காரணமாக விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவுடன் சுமுகமான உறவு நிலவியமை குறிப்பிடத்தக்கது.
- ★ இவ்வரசியின் புதல்வர்கள் மானபரண, கீர்த்தி ஸ்ரீ மேக, ஸ்ரீ வல்லப எனும் மூவராவார். இவர்கள் உருஹுணு இராச்சிய ஆட்சியைப் பெற்று சிற்றரசர்களாக இருந்தனர்.
- ★ அக்கால கட்டத்தில் இச்சகோதரர் மூவரும் உருஹுணு, தக்கிண தேசம், அட்டதஹட்ட, தொலதஹரட்ட என்று தென்பகுதியைப் பிரித்து ஆட்சி செய்தனர்.
- ★ பொலன்னறுவை யுகத்தின் பொற்காலத்திற்குரிய மன்னனான முதலாம் பராக்கிரமபாகு மன்னன் அரசியின் பேரன் ஆவான்.

பொலன்னறுவை யுகத்தில் பெண்கள் ஆட்சியுரிமை பெறுவதற்கு படைத் தளபதிகள் உதவிபுரிந்தமை விசேட அம்சமாகும்.

### பயிற்சி

பின்வரும் அட்டவணையில் C நிரலில் உள்ள சரியான விடையைத் தெரிவு செய்து B நிரலில் எழுதவும்.

| A | B | C |
|---|---|---|
| 01. சுகலாதேவி | | 01. நிஸங்கமல்லனின் மனைவி |
| 02. லீலாவதி ராணி | | 02. பராக்கிரமபாகு மன்னனின் மனைவி |
| 03. கல்யாணவதி ராணி | | 03. ஸ்ரீ வல்லப மன்னனின் தாய் |

### செயற்பாடுகள்

"பெண்களின் தலைமைத்துவம், அர்ப்பணிப்பு என்பன நாட்டு நலனுக்குத் தேவையானது" எனும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதவும்.

## கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

★ கலிங்க தேசத்திலிருந்து ஆக்கிரமிப்பாளனாக வந்தவன் மாகன்.

★ கி.பி 1197 ஆம் ஆண்டின் பின்னர் பொலன்னறுவை இராசதானியில் ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டத்தின் காரணமாக ஆட்சி பலவீனமடைந்திருந்தமை ஆக்கிரமிப்பாளர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

★ கி.பி 1212 ஆம் ஆண்டு ஆட்சியைப் பெற்ற பராக்கிரம பாண்டிய மன்னனின் கண்களைக் குருடாக்கிய மாகன் ஆட்சியைக் கைப்பற்றினான்.

★ கி.பி. 1215 ஆம் ஆண்டு மாகன் 24000 பேர் கொண்ட படையுடன் இலங்கைக்கு வந்தான்.

★ இலங்கையின் இராசரட்டையை ஆக்கிரமித்த மாகன் அங்கிருந்த சொத்துக்களை சூறையாடி தனது படையினருக்குப் பங்கிட்டு கொடுத்தான்.

★ விகாரைகள், பிரிவெனாக்கள், பன்சலைகள் முதலியவற்றை இடித்து விட்டு அங்கிருந்த சொத்துக்களையும் அவன் கொள்ளையிட்டான்.

★ சாதாரண குடிமக்களின் வீடுகளை உடைத்து தரைமட்டமாக்கினான். பயிர் நிலங்களைத் தீயிட்டுக் கொளுத்தினான். நீர்பாசனக் குளங்கள், வாய்க்கால்களை உடைத்தான்.

★ மாகனின் கொடூர நடவடிக்கைகளால் பௌத்த பிக்குகளும் பொதுமக்களும் தென்மேற்குத் திசை நோக்கியும் மலைநாட்டை நோக்கியும் இடம்பெயர்ந்தனர்.

மாகன் கொடூர குணமுடைய சட்டத்தையும் நீதியையும் மதிக்காத, செல்வங்களைக் கொள்ளையடிக்கும் ஒரு மோசமான ஆக்கிரமிப்பாளன்.

## பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குரிய காரணிகள்

### உடனடிக் காரணம்

★ மாகனின் கொடூரமான படையெடுப்புக் காரணமாக பிரபுக்கள், பொதுமக்கள், பிக்குகள் எனும் மனிதவளமும், விகாரை, குளம், அணை, வாய்க்கால், நூல்நிலையம் கலாசாரம் முதலிய வளங்களும் அழிக்கப்பட்டமை.

★ இராசரட்டை நாகரீகத்தின் கலை, கலாசாரம் தொழினுட்பம் என்பன இல்லாது அழிக்கப்பட்டமையில் பொலன்னறுவையை திரும்பவும் கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்பட்டது.

## நீண்ட கால காரணிகள்

★ உள்நாட்டு அரசியல் குழப்ப நிலை காரணமாக ஆட்சி நிர்வாகம் பலமிழந்து இருந்தமை

★ இலங்கை அரசியல் தலைவர்களிடம் காணப்பட்ட ஒன்றுமையின்மை.

★ நாட்டுத் தலைவர்களின் தூர நோக்கற்ற செயற்பாடு.

★ எதிர்காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குப் பொருத்தமான ஒருவர் காணப்பட்டமை.

மீண்டும் பொலன்னறுவையைக் கட்டியெழுப்ப முடியாத நிலைக்கு அவ்விராச்சியம் சீரழிந்து போனது.

## மாகனின் ஆட்சிப் பண்புகள்

★ திட்டமிடப்பட்ட ஒரு ஆக்கிரமிப்பாகக் காணப்பட்டமை.

★ இலங்கையின் அரசியல், பொருளாதார கட்டமைப்பு பாரிய மாற்றத்துக்குள்ளானமை.

★ பௌத்த எதிர்ப்புக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டமை

01. பௌத்த சமயத் தலங்கள் அழிக்கப்படல்
02. பிக்குகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படல்
03. பௌத்த நூல்கள் மற்றும் நூல்நிலையங்கள் எரிக்கப்பட்டமை.

★ அரச பிரதானிகளை இம்சைப்படுத்தல்; அவர்களின் சொத்துக்களைச் சூறையாடி பிரபுக்களை ஏழ்மை நிலைக்குத் தள்ளுதல்.

★ சாதாரண மக்களைத் துன்புறுத்தல். (சித்திரவதை செய்தல், பிள்ளைகளைக் கொல்லுதல், மரபுவழிவந்த குலமுறைகளை சீரழித்தல்)

★ யுத்த சூழ்நிலையிலே ஆட்சி நடாத்தப்படல்.

★ உள்நாட்டிலும், கரையோரத்திலும் கோட்டை கொத்தளங்களை அமைத்து ஆட்சி புரிதல்.

உ-ம் : பொலநறுவை, கவுடுல்ல, பதவியா, கந்தளாய், மன்னார், ஊர்காவற்றுறை கோட்டைகள்.

## பொலன்னறுவை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகள்

★ பாண்டிய கலிங்க, வம்சங்களுக்கு இடையில் ஏற்பட்ட அதிகாரப் போராட்டம்.

★ பொலன்னறுவையின் திறமையற்ற அரசர்கள்.

★ கலிங்க மாகனின் படையெடுப்பினால் ஏற்பட்ட அழிவு

★ இராசரட்டையின் நீர்ப்பாசனத்துறை நிர்மூலமாக்கப்பட்டமை.

★ ஆட்கொல்லித் தொற்றுநோய்கள் பரவியமை.

★ மக்கள் இராசரட்டையை விட்டு உறுகுணு, மலையரட்டை என்பவற்றுக்குச் சென்றமை.

## பொலன்னறுவை இராச்சியத்தின் விசேட பண்புகள்

1. முதலாம் விஜயபாகு போன்ற சிறந்த வீரமிக்க மன்னனாலேயே வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து இலங்கையை காப்பாற்ற முடிந்தது.
2. வீரமிக்க கெட்டித்தனமுள்ள மகாபராக்கிரமபாகு மன்னன் அரசியல் ரீதியில் மட்டுமன்றி பொருளாதார மற்றும் சமய ரீதியில் மிக உயர் மக்களை உருவாக்கியமை.
3. சமூகத்தில் பெண்களின் நிலையை உயர்த்தியமை.
4. அநுராதபுரக் காலத்தை விட தேசிய கலாசாரத்தில் இந்து மத்தினரின் செல்வாக்கு அதிகமாக காணப்பட்டது.
5. அநுராதபுரத்தின் சந்திர வட்டக்கல்லில் காணப்பட்ட எருதின் உருவம் பொலன்னறுவைக் காலத்தில் நீக்கப்பட்டது.



பொலன்னறுவைச் சந்திரவட்டக்கல்
படம் 4.13



சிவன் கோவில்
படம் 4.12

6. பொலன்னறுவையில் இல 1 இல 2 என்ற இரு சிவாலயங்கள் உள்ளன. இவை இரண்டும் வாஸ்த்து சாஸ்த்திர முறைப்படி நிர்மானிக்கப்பட்டுள்ளதோடு இல 1 சிவாலயத்தில் உள்ள வெண்கல நடராஜர் சிலை ஒரு சிறந்த படைப்பாக உள்ளது.

7. பொலன்னறுவை இராசதானியின் முற்பட்ட காலங்களில் உயர்கலை படைப்புக்கள் பல உருவாகியுள்ளன.

8. நிஸ்ஸங்கமல்லனின் அரச மாளிகை மற்றும் நிஸ்ஸங்க - லதா மண்டபம் என்பன பிரதானமானவை.

9. ஏழடுக்கு மாளிகை (சத்மஹல் பிரசாதய) பிரதான கட்டடமாகும். இது தூபி வடிவில் கட்டப்பட்டுள்ளது. சகல மாடிகளிலும் உள்ள தூண்கள் அரை வட்ட வடிவில் குடையப்பெற்ற சுவர்களில் தேவர்களின் உருவங்கள் உள்ளன.

10. பொலன்னறுவை கால நிர்வாகிகள் நகர நிர்வாகிப்பில் கூடுதல் கவனம் செலுத்தினர்.மகாபராக்கிரமபாகு மன்னனின் மாளிகை மற்றும் அதன் சுற்றுப்புற நகர் மிகவும் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

11. நீர் தொழினுட்ப விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பெரும் வாவிகள் மற்றும் பூங்காக்களிலுள்ள பொய்கைகள் அலங்காரம் செய்யப்பட்டன. இதற்கு பராக்கிரம சமுத்திரம் மற்றும் தாமரைப் பொய்கை என்பன உதாரணங்கக் கூறலாம்.

12. பொலன்னறுவைக் காலத்திற்குறிய ஓவியங்களை லங்கா திலக்க சிலை, வீடு மற்றும் கல் விகாரை எனும் இடங்களில் காணலாம்.

13. ஹாலபன பரிவேன கட்டடத்தில் வைத்தியசாலையின் கட்டட இடிபாடுகள் காணப்படுகின்றன.மருத்துவ ஓடம் மற்றும் வைத்திய உபகணங்கள் இங்கு காணப்படுகின்றன.

14. பலவகைப்பட்ட மக்கட் பிரிவினருக்கிடையில் அந்நியோன்ய நம்பிக்கையுடனான பொது தேசிய கலாசாரமொன்று இக்காலத்தில் கட்டியெழுப்பப்பட்டதைக் காணலாம்.

### பயிற்சி

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1215 ஆம் ஆண்டு இந்தியாவின் ........................................... தேசத்திலிருந்து ....................................... என்பவன், இலங்கையின் தலைநகரான ......................... மீது படையெடுத்தான். இவனது ஆக்கிரமிப்பினால் ............................................. இராச்சியத்தில் நிலவி வந்த இலங்கையின் .................................... நாகரிகம் முற்றாக அழிக்கப்பட்டது.

# 05 மத்தியகால ஐரோப்பா

மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வுகளான கிறிஸ்தவ சமயத்தின் பரவல், நிலமானிய முறை, சிலுவை யுத்தம் என்பன ஐரோப்பிய பண்பாட்டில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தின என்பதனை இந்த அத்தியாயத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

ஐரோப்பிய வரலாற்றை இலகுவாக கற்பதற்கு வரலாறு மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன

1. புராதன காலம்
2. மத்திய காலம்
3. நவீன காலம்

## புராதன காலம் (கி.மு 1ஆம் நூற்றாண்டு - கி.பி 5ஆம் நூற்றாண்டு)

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதல் கி.பி 5 ஆம் நூற்றாண்டு வரையில் கிரேக்க, உரோம பண்பாடுகள் உயர்நிலையில் இருந்த காலப்பகுதியாகும்.

## மத்தியகாலம் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு - கி.பி 15ஆம் நூற்றாண்டு)

கி.பி 5ஆம் நூற்றாண்டில் உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் ஐரோப்பாவில் நிலவிய உயர் பண்பாடு சீர்குலையத் தொடங்கியது. கிறிஸ்தவ சபையால் கட்டியெழுப்பப்பட்ட கல்வி, பண்பாட்டு வளர்ச்சி காரணமாக நிலைமை படிப்படியே முன்னேற்றம் அடையத் தொடங்கியது. கி.பி 15ஆம் நூற்றாண்டு வரை நிலவிய இக்காலப்பகுதி மத்திய காலம் எனப்படுகிறது.

## நவீன காலம் (கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்)

கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் பின்னர் மீண்டும் சிறந்த நாகரீகமொன்று உதயமாகியது. அக்காலம் முதல் தற்காலம் வரை இது வளர்ச்சியடைந்து வருகின்றது. இக்காலப் பகுதி **நவீன காலம்** எனப்படும்.

## கிறிஸ்தவ சமயத்தின் தோற்றமும் பரவலும்

ஐரோப்பாவில் ஒழுங்காக அமைப்புப் பெற்ற முதலாவது சமயம் கிறிஸ்தவ சமயமாகும். ஐரோப்பிய பண்பாட்டை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்ததும் கிறிஸ்தவ சமயமாகும்.

## கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பம்

கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்ப கர்த்தா (ஸ்தாபகர்) கிறிஸ்துநாதராவார். அவர் பலஸ்தீனத்தில் சிறிய ஊராகிய பெத்லகேமில் பிறந்தார். தற்போது பாவனையில் உள்ள கிறிஸ்துவுக்குப்பின் எனப்படும் காலம் கிறிஸ்துவின் பிறப்பை முன்னிட்டே கணிப்பிடப்படுகிறது. கிறிஸ்தவர்களின் மதிப்பிற்குப் பாத்திரமான மரியாள், இயேசுவின் தாயாவாள். இயேசுவின் பிறப்பு நிகழ்ந்த காலத்தில் யூத இனத்தவர் உரோமப் பேரரசின் கீழ் இருந்தனர். உரோமப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய பலஸ்தீனாவின் கலிலேயப் பகுதியை ஏரோது எனும் யூத இன அரசன் ஆட்சி செய்தான். ஜெருசலேமின் ஆளுனராக உரோம இனத்தைச் சேர்ந்த பிலாத்து இருந்தான்.

யூதர்களின் மீட்பின் பொருட்டு மீட்பர் ஒருவர் வருவாரென யூதர்கள் நம்பினர். அக் காலத்தில் அவரது வருகையை மக்கள் எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். மீட்பரைப் பற்றிப் போதித்து அவரை வரவேற்க மக்களை ஆயத்தப்படுத்தியவர் திருமுழுக்கு யோவான் ஆவார். முப்பது வயது வரை கலிலேயாவில் நாசரேத் ஊரில் அமைதியாக வாழ்ந்த இயேசு, முப்பதாவது வயதில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றுத் தமது பகிரங்க வாழ்வை ஆரம்பித்தார். அவரது பகிரங்க வாழ்வு மூன்று வருடங்கள் மாத்திரமே நிலைத்தது.

உலகப் படைப்பு தொடர்பான கதை தொடக்கம் திருமுழுக்கு யோவான் வரை அதாவது இயேசுவிற்கு முற்பட்ட காலப் பகுதி பழைய ஏற்பாடு எனப்படுகிறது. இயேசுவின் காலந் தொடக்கம் அவரது சொல், செயல்கள் மற்றும் அவரது சீடர்களின் போதனைகள், செயல்கள் என்பன அடங்கிய பகுதி புதிய ஏற்பாடு எனப்படுகிறது. புதிய ஏற்பாட்டையும், பழைய ஏற்பாட்டையும் இணைத்து எழுதப்பட்ட நூலே பரிசுத்த வேதாகமம் என அறிமுகப்படுத்தப்படுகிறது.




இயேசுவின் காலத்தில் பலஸ்தீனம்
படம் 5.1

கிறிஸ்தவர்களின் புனித நூல் பரிசுத்த வேதாகமமாகும்.

கிறிஸ்துநாதர் போதித்த மதம் கிறிஸ்தவ மதம் எனப்படுவதுடன், அதன் மூலம் நீதி, அன்பு, இரக்கம் என்பன அடங்கிய இறை அரசு பற்றிப் போதிக்கப்பட்டது.

தான் மனிதாவதாரம் எடுத்த இறைமகன் என்றும், உலக மீட்பரென்றும் இயேசு போதித்தார். உலகில் இறையரசை நிறுவுவது இயேசுவின் செயலாக இருந்தது.

### இயேசுநாதரின் முக்கிய படிப்பினைகள் சில

* முழு உலகையும் படைத்தவர் இறைவன்
* இறைவன் இரக்கமுடையவர்
* இறைவனின் அரசு அன்பு, சமாதானம், நீதி என்பவற்றைக் கொண்ட அரசாகும்.
* அந்த அரசு இப்போதே எம்மிடையே தோன்றியுள்ளது.
* இறையரசை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு நாம் எமது தவறுக்காக மனம் வருந்தி, எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.
* அன்பு அனைத்தையும் விட மேலானது.
* இறைவன் எம்மை அன்பு செய்தது போல நாமும் ஒருவர் ஒருவரை அன்பு செய்து சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்.
* நாம் இறைவனிடம் விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

சாதாரண மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இயேசு தனது போதனையை முன்வைத்தார்.

இயேசு யூத மதத்தை அழிப்பதற்கு அன்று, அதை நிறைவேற்றுவதற்கே வந்தார். எனினும் அவர் போதித்த சில விடயங்களாலும், அவர் தம்மை இறைமகன் என்றதாலும் கோபமடைந்த யூத சமூகமும், சமயத் தலைவர்களும் அவரைக் கொலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வாறு அவர்கள் இயேசுவைப் பிடித்து மரணத்திற்கு ஏதுவான குற்றத்தை அவர்மீது சுமத்தினர். இயேசு உரோமப் பேரரசனான சீசருக்கு எதிராகப் போதித்து, மக்களைத் தூண்டியதாக அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. இராஜ துரோகம் செய்தோருக்கு மரணதண்டனை வழங்கும் முறையாக சிலுவையில் அறைந்து



*இயேசுநாதரின் பிறப்பு*
*படம் 5.2*

கொலை செய்யும் முறையே அன்று இருந்தது.

இவ்வாறு யூதத் தலைவர்களின் வற்புறுத்தலால் ஆளுநர் பிலாத்துவால் இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டார்.

தாம் யூதத் தலைவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு மரணத்திற்கு உள்ளாக்கப்படுவதாகவும், மூன்றாம் நாள் மரணத்தினின்றும் தாம் உயிர்த் தெழுவதாகவும் இயேசு தம் சீடர்களுக்குக் கூறினார். இயேசு தாம் கூறியபடியே மூன்றாம் நாள் மரணத்தினின்றும் உயிர்த்தெழுந்ததுடன், தம் சீடர்களுக்குப் பலமுறை காட்சி கொடுத்தார். இயேசு மரித்த மூன்றாம் நாள் உயிர்ந்தெழுந்தது கிறிஸ்தவ சமயத்தினருக்கு முக்கிய நிகழ்வாகும். கிறிஸ்தவர்கள் தமது முக்கிய விழாவாகக் கொண்டாடப்படுவதும் இதனையேயாகும்.

கிறிஸ்து என்பது 'கிறிஸ்டோஸ்' என்ற கிரேக்க சொல்லிருந்து வந்ததாகும். இதன் கருத்து ''அருட்பொழிவு'' செய்யப்பட்டவர் (அபிஷேகம் செய்யப்பட்டவர்) என்பதாகும். அதாவது மனிதரின் மீட்புப் பணியை நிறைவேற்றும் பொருட்டு இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்டவர் என்பதாகும். இதனால் அவரை இயேசுக் கிறிஸ்து என்கிறோம். கிறிஸ்தவர் என்ற சொல்லும் இந்தச் சொல்லிலிருந்து வந்ததேயாகும்.

## கிறிஸ்தவ சமயம் பரவுதல்

கிறிஸ்தவ சமயம் இயேசுவின் மரணத்தின் பின்னரே பரவத் தொடங்கியது. இயேசுநாதர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பன்னிரு சீடர்களைத் தெரிவு செய்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தார். இந்தப் பன்னிருவரும் திருத்தூதர்கள் என அழைக்கப்பட்டதுடன், மேலும் பலர் அவரது சீடர்களாகினர்.

இயேசு மரணத்தினின்றும் உயிர்த்த நாற்பதாம் நாள் விண்ணுலகை அடைந்தார். அவ்வாறு அவர் விண்ணுலகை அடையும் முன்னர் தம் சீடர்களை நோக்கி ஜெருசலம் தொடங்கி உலகம் முழுவதிலும் நற்செய்தியை அறிவிக்கும்படி (இறையரசு தொடர்பான செய்தி) கூறினார். இதன் பொருட்டு அவர்கள் திடத்தினைப் பெறும் வரையில் ஜெருசலேமில் தங்கியிருக்கும்படி வேண்டினார்.

இயேசு விண்ணுலகை அடைந்த பத்தாம் நாள் அதாவது அவரது உயிர்ப்பின் பின்னர் ஐம்பதாம் நாள் இயேசுவின் செய்தியை அவரது சீடர்கள் அறிவிக்கத் தொடங்கினர். இந்த நாள் பெந்தகொஸ்த திருநாள் எனவும் அழைக்கப்படுகிறது. பெந்தகொஸ்த என்பதன் கருத்து 50ஆவது நாள் என்பதாகும். அன்றைய தினமே ஜெருசலேமிலிருந்த யூதர்களும், ஏனைய நாடுகளிலிருந்து வந்திருந்த 3000 பேரும் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. அன்று முதல் திருத் தூதர்களும், ஏனைய சீடர்களும் பல இடங்களுக்கு சிதறுண்டு போய் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பினர்.

ஆரம்ப யுகத்தில் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியோர் சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்களாக இருந்த போதிலும், கி.பி இரண்டாம் நூற்றாண்டளவில் உயர் வகுப்பினரைப் போலவே, கற்றவர்கள் பலரும் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர்.

கிறிஸ்தவ சமயம் தமது பேரரசு முழுவதும் பரவுவதை உரோமர்களால் பொறுக்க முடியவில்லை. இதனால் மூன்று நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ மதக் இடையூறுகள் ஆரம்பமாகியது. இவற்றில் முதல் இடையூறு கி.பி 55 - 63 வரை பேரரசன் நீரோவின் காலத்தில் நடைபெற்றது.

உரோம் நகருக்குக் கிறிஸ்தவர்கள் நெருப்பு வைத்தார்கள் எனக் கிறிஸ்தவர்கள் மீது பேரரசன் நீரோ குற்றம் சுமத்தி பிரச்சினையை ஆரம்பித்தான். ஆனால் தனது செயல்களை மறைப்பதற்காகப் பேரரசன் நீரோவே உரோம் நகருக்கு தீ வைத்து அந்தக் குற்றத்தைக் கிறிஸ்தவர்கள் மீது சுமத்தியதாக அக்காலத்தில் வாழ்ந்த பலராலும் கூறப்பட்டுள்ளது.



*உரோமில் அமைந்துள்ள புனித பேதுரு பேராலயம் (பெசலிக்கா) படம் 5.3*



*சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் படம் 5.4*

## கிறிஸ்தவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தண்டனைகள்:

* வரி செலுத்தாமை, படையில் பணிபுரியாமை போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுக் கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்டமை.
* பசியாக இருந்த சிங்கங்களுக்குக் கிறிஸ்தவர்கள் இரையாகப் போடப்பட்டனர்.
* உடலில் எண்ணெய் ஊற்றி, இரவில் தீப்பந்தமாக எரித்தல்.

★ பேரரசின் அதிகாரத்தைப் பெறும் பொருட்டு நிலவிய போட்டியில் கொன்ஸ்டன்டைனுக்குக் கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. கிறிஸ்தவர்களின் உதவியுடன் பேரரசனாக வந்த கொன்ஸ்டன்டைன் கி.பி 313 ஆம் ஆண்டு செய்து கொண்ட மிலான் உடன்படிக்கையின் மூலம் ரோமப் பேரரசு முழுவதும் கிறிஸ்தவ சமயம் உத்தியோக பூர்வமான சமயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.


கொன்ஸ்டன்டைன், படம் 5.5

★ பேரரசன் கொன்ஸ்டன்டைனும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டான்.

★ கி.பி. 380 ஆம் ஆண்டு பேரரசனான தியோடோசியஸ் கிறிஸ்தவ சமயம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் அனைத்தும் அஞ்ஞான மதம் எனக்கூறி அவைகளைப் பின்பற்றுவதைத் தடை செய்தான். அது முதல் கிறிஸ்தவ சமயம் ரோமப் பேரரசின் அரச மதமாகியதுடன் அது விரைவில் பரவவும் தொடங்கியது. பாப்பரசரும் குருமாரும் இம்மதம் பரவும் பொருட்டு ஒன்றிணைந்து செயற்பட்டனர்.

இவ்வாறான தண்டனைகளால் கிறிஸ்தவ சமயத்தை ஒழிக்க முயன்ற பொழுதிலும், அதனைச் செய்ய முடியாது போயின. சமயத்திற்காக உயிரிழந்தோர் தொகை அதிகரித்ததுடன் மேலும் பலர் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர்.

## பாப்பரசரும் திருச்சபையும்

### திருச்சபையின் ஆரம்பம்


கிறிஸ்தவ சமயம் ஆரம்பம் முதலே முறையான அமைப்பினையுடைய தொன்றாகக் காணப்பட்டது. கிறிஸ்துநாதரே சீடர்களிலிருந்து பன்னிருவரைத் தெரிவு செய்து அவர்களுக்குத் திருத்தூதர்கள் எனப் பெயரிட்டார். இந்தப் பன்னிருவரில் பேதுரு எனும் திருத்தூதர் தலைவராக நியமிக்கப்பட்டார். கிறிஸ்துநாதர் இவ்வுலக வாழ்வை முடித்த பின்னரும், பேதுரு அனைத்து சீடர்களாலும் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆரம்ப சபையில் தலைவர்கள் மூன்று பிரினர்களாக இருந்தனர். திருத்தூதர்கள், மூப்பர்கள், திருத்தொண்டர்கள் ஆகியோரே இந்த முப்பிரிவினராவார்கள். பின்னர் திருத்தூதர்களின் இடத்தை வகித்தவர்கள் ஆயர்களெனவும், மூப்பர்களின் இடத்தை வகித்தவர்கள் குருவானவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

கி.பி நான்காம் நூற்றாண்டில் உரோம், ஜெருசலேம், கொன்ஸ்தாந்தி நோபிள், அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா போன்ற கிறிஸ்தவ சமயம் தொடர்பான முக்கிய நகரங்களில் பெற்றியாக் என்போரும் பெரிய நகரங்களைக் கொண்ட பிரதேசத்தில் மெட்ரோபொலிட்டன் எனும் பேராயர்களும், நகரங்களுக்குப் பொறுப்பாக அவர்களும், அந்த ஆயர்களின் கீழுள்ள சிறு பிரதேசங்களிலுள்ளோர் குருமார்களெனவும் அறிமுகமாகினர்.

| | |
|---|---|
| கிறிஸ்தவ சமயம் தொடர்பாக முக்கிய நகரங்களுக்குப் பொறுப்பானவர்கள் → | பெற்றியாக் |
| பெரிய பிரதேசங்களுடனான நகரங்களுக்குப் பொறுப்பானவர்கள் → | மெற்ரோபொலிட்டன் பேராயர்கள் |
| நகரங்களுக்குப் பொறுப்பானவர்கள் → | ஆயர்கள் |
| ஆயர்களின் சிறு பிரதேசங்களுக்குப் பொறுப்பானவர் → | குருமார்கள் |

அனைத்து ஆயர்களிலும், பெற்றியாக்களிலும் உரோமில் இருந்த ஆயர் திருச்சபையின் தலைவராகக் கருதப்பட்டார். அவர் பேதுருவின் இடத்தில் உள்ளவர் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டார். பிற்காலத்தில் இந்தப் பதவி பாப்பரசர் பதவியாக அறிமுகமானது. தற்பொழுதும் கூட பாப்பரசர் உரோம நகர் ஆயராக கருதப் படுகிறார்.

## பாப்பரசர் பதவி


பாப்பரசர்
படம் 5.6

கி.பி நான்காம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளர்ச்சியடைந்த பாப்பரசர் பதவி, ஐரோப்பாவில் சக்திமிக்க பதவியாக மாறியது. உரோமப் பேரரசை வீழ்ச்சியுறச் செய்த கோத்திர மக்கள், கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுக்கொண்டதுடன் பாப்பரசரினதும், திருச்சபையினதும் அதிகாரம் மேலும் வலுவடைந்தது.

உரோமப் பேரரசின் கீழ் இல்லாத பிரதேசங்களில் வாழ்ந்த ஒஸ்ரோகொத், விசிகொத், பிரேங், அங்லோ சாக்சன் போன்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் உரோமப் பேரரசை வீழ்ச்சியுறச் செய்து முறையே இத்தாலி, ஸ்பானியா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடியேறினர். உரோமப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னர்

ஆக்கிரமிப்பாளர்களான மக்களுக்குக் கிறிஸ்தவ சமயத்தைத் தெளிவுபடுத்துதல் ஆசீர்வதிப்பர் சபை உள்ளிட்ட பல துறவற சபைகளால் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய காலத்தின் நடுப்பகுதியில் ஐரோப்பா முழுவதும் கிறிஸ்தவ சமயம் பரவியிருந்ததுடன் திருச்சபைக்கும், பாப்பரசருக்கும் நிறைய அதிகாரங்கள் இருந்தன.

**திருச்சபைக்கு:**

* ஏராளமான நிலங்கள் இருந்தது.
* கல்வி முற்றிலும் திருச்சபையை மையமாகக் கொண்டிருந்தது.
* ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலுமிருந்து வரியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை திருச்சபைக்கு இருந்தது.

## நிலமானிய முறை

### முன்னுரை

மானியம் என்பது சேவையாகும். நிலம் என்பது பூமி. இதன்படி மானியத்துடன் கூடிய நிலம் 'நிலமானியமுறை' எனப்படும். நாட்டின் பொருளாதார, அரசியல், சமூகப், பண்பாடு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட முறை மானியமுறை எனப்படுகின்றது.

* மத்திய காலத்தில் ஐரோப்பாவிலுள்ள அநேகமான நாடுகளில் மானிய முறை நிலவி வந்தது. நிலம் அரசனுக்குச் சொந்தமாக இருந்தது. நாட்டை நிர்வாகம் செய்வதற்கு அரசனுக்கு வேண்டிய சேவைகளை ஆற்றுவோர் வேதனத்துக்குப் பதிலாக நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இப்படியாக நிலத்தைப் பெற்ற பிரபுக்கள் அந்நிலங்களைப் பயன்படுத்தியமைக்கு கைமாறாக அரசனுக்கு சேவை செய்தனர்.

* பிரபுக்கள் அந்நிலங்களைத் தமக்குக் கீழ் மட்டத்திலிருந்தவர்களுக்குப் பயிர் செய்தற் பொருட்டுப் பகிர்ந்து கொடுத்தனர். இப்படியாக நிலங்களைப் பெற்றவர்கள் அவற்றைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தியதோடு அதற்குப் பதிலாக பிரபுக்களுக்கு வேண்டிய பல்வேறு சேவைகளை இலவசமாக வழங்கினர்.

ஒருவன் செய்யும் சேவைக்கு வழங்கும் வேதனத்திற்குப் பதிலாக அவனுக்கு நிலம் வழங்கப்பட்டது. அந்த நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு சேவையை வழங்குதல் **நிலமானிய முறை** எனப்படும். மத்திய காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பொதுவாக இம்முறை நிலவியது.

மத்திய ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு ரீதியில் மானிய முறைக்குப் பழக்கப்பட்டு இருந்தன. அது புராதன காலத்தினின்றும் நவீன காலத்தினின்றும் வேறுபடும் விசேட பண்பாகும்.

## நிலமானிய முறையின் ஆரம்பம்

உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலப்பகுதியான கி.பி 5 ஆம் நூற்றாண்டிலேயே ஐரோப்பாவில் மானிய முறை ஆரம்பமானது. மானிய முறை ஆரம்பமாவதற்கு முக்கிய காரணம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாகும். கி.பி 5 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 10 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பா இரண்டு ஆக்கிரமிப்புக்களுக்கு உள்ளாகியது.

01. உரோமப் பேரரசுக்கு எதிராகக் கொத், ஹன், பிரேங், அங்லே ஜஸ்லாவ் சக்சன் ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு முதலாவது ஆக்கிரமிப்பாகும். அன்றைய உரோமப் பேரரசிற்கு உட்படாத இன்றைய ஜேர்மனிப் பிரதேசத்திலிருந்தே அவர்கள் வந்தனர்.
02. கி.பி 1000 ஆண்டளவில் வடக்கிலுள்ள வைக்கின்ஸ் எனப்பட்ட கோத்திர மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு இரண்டாவது ஆக்கிரமிப்பாகும். நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய பிரதேசங்களிலிருந்தே இவர்கள் வந்தனர்.

- ★ வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றதால் மக்களுக்குப் பாதுகாப்பை வழங்க ஆட்சியாளர்களால் முடியவில்லை. ஆதலால் பெருந்தொகையான மக்கள் தம்மிடமிருந்த நிலங்களைப் பிரபுக்களுக்குக் கையளித்து, அவர்களுக்கு சேவை செய்வதாக வாக்களித்ததுடன், பிரபுக்களின் பாதுகாப்பையும் எதிர்பார்த்தனர். இதன்படி ஆரம்பத்தில் பிரபுக்கள் உரோமப் பேரரசின் மக்களின் நிலங்களையே தமதாக்கிக் கொண்டனர்.
- ★ அரசர்கள் பலவீனர்களாக இருந்ததால் அவர்கள் தங்களது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு (தக்க வைத்துக் கொள்வதற்கு) பிரபுக்களின் உதவி தேவையாக இருந்தது. எனவே அரசனிடமிருந்த நிலங்கள் பிரிக்கப்பட்டுப் பிரபுக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. அவற்றைப் பயன்படுத்துவதற்காகப் பிரபுக்கள் அரசனுக்கு சேவை செய்தனர்.

இந்த நிலங்களைப் பிரபுக்களிடையே பகிர்ந்தளித்தல், அதன் பொருட்டு செய்யப்பட வேண்டிய சேவைகள் என்பவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் போன்ற தொடர்பான பழக்கவழக்கங்கள் இருந்தன. இவை தொடர்பான எழுத்து மூலமான ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை. மரபு ரீதியாக இவை நடைபெற்றன.

உரோமப் பேரரசிற்கும் அதன்பின்னர் 10 ஆம் நூற்றாண்டில் பிரான்சைச் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்ட பேரரசிற்கும் எதிராக ஏற்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்பைக் காரணமாகக் கொண்டு பல விடயங்கள் வெளியாகின.

- ★ அரசியல் நிலை தளர்ந்தமை
- ★ அரசர்கள் பலவீனமடைந்தமை
- ★ பேரரசு முழுவதும் நிலைகொண்ட கோத்திர மக்களிடையே நிலையான அரசியல் முறைமை இல்லாமை.
- ★ ஐரோப்பா முழுவதிலும் கவலைக்குரிய நிலைமை ஏற்படல்
- ★ மக்களுக்குப் பாதுகாப்பின்மை.

இந்தப் பின்னணியில் பிரபுக்கள் பலம் வாய்ந்தவர்களானார்கள். அரசர்கள் பலவீனமானவர்கள். இந்நிலையில் பணப்பரிமாற்றம் இல்லாது நிலத்தை அனுபவிப்பதற்கான சேவையை வழங்கும் முறையான நிலமானிய முறை தோன்றியது.

## நிலமானியப் பொருளாதார முறையின் விசேட பண்புகள்

- ★ நிலம் முக்கிய உற்பத்திக் காரணியாகியமை.
- ★ கிராமத்தை மையமாகக் கொண்ட பொருளாதாரம்.
- ★ விவசாயம் பொருளாதாரத்தின் அடிப்படையானமை
- ★ சுயதேவைப் பொருளாதாரம் உருவானமை.
- ★ நகரங்கள் இல்லாமை.
- ★ பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.
- ★ வர்த்தகம் சிறிதளவே நடைபெறல்.
- ★ அதுவும் பண்டமாற்று முறையில் நடைபெறல்.

மானியமுறையின் பொருளாதார அமைப்பானது விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பண்ணை அதன் முக்கியமான பொருளாதாரக் கூறாக இருந்தது.

- ★ ஒவ்வொரு பண்ணையிலும் பற்றைக் காட்டு நிலம், பொதுவான புல்வெளி, பாழ்நிலம் எனப்பல பகுதிகள் காணப்பட்டன. பண்ணை மக்கள் அனைவரும் இவற்றை, மந்தைகளை மேய்த்தல், விறகு சேகரித்தல், தேன் சேகரித்தல், வேட்டையாடுதல் போன்ற கருமங்களுக்கு பயன்படுத்தினர்.
- ★ பிரபுக்களின் நிலம் பயிர் செய்யும் பொருட்டு பொதுமக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இவர்கள் தமியர்கள் எனப்பட்டனர். தமியர்கள் தமக்குக் கிடைத்த காணியை அனுபவிப்பதற்கு கைமாற்றாக பிரபுக்களின் நிலத்தில் ஊதியமின்றி வேலை செய்வதற்கு அல்லது அறுவடையில் ஒரு பகுதியை கொடுப்பதற்கு அல்லது குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை செலுத்துவதற்கு கடமைப்பட்டிருந்தனர்.
- ★ பண்ணையின் உயர்ந்த இடத்தில் அந்தப் பண்ணைக்குச் சொந்தமான பிரபுவின் மாளிகை இருந்தது.
- ★ அதியுயர் இடத்தில் ஆலயம் அமைந்திருந்தது. திராட்சை இரசம் (வைன்) செய்யும் இயந்திரங்கள், பாண் செய்யும் பேக்கரிகள், கோதுமை அரைக்கும் தொழிற்சாலைகள் என்பன பிரபுக்களிடம் இருந்தன. தமியர்கள் செலவு செய்து (பொருட்களின் மூலம்) அவற்றில் பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நிலமானிய முறையின்மூலம் பண்ணைகள் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் கூறாக இருந்தது.

## நிலமானிய அரசியல் முறையின் விசேட பண்புகள்



நிலமானியமுறையின் பண்ணை அமைப்பைக் காட்டும் படம்
படம் 5.6

★ நாட்டின் அனைத்து இடங்களும் அரசனுக்குச் சொந்தம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ அரசனுக்குத் தேவையான சேவையைப் பெறும்பொருட்டு நிலங்கள் பிரபுக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்படி பிரபுக்களுக்கு ஏராளமான நிலம் உரிமையாக இருந்தது.

★ அரசர்கள் பலம் வாய்ந்தவர்களாக இருக்கவில்லை.

★ நாட்டில் பல பாகங்களிலும் பிரபுக்கள் பலம் வாய்ந்தவர்களாக திகழ்ந்தனர்.

★ அவர்கள் தமது பிரதேசங்களில் சட்டங்களை விதித்தல், வரிஅறவிடுதல் போன்றவற்றைச் செய்யக்கூடிய நிலையைப் பெற்றிருந்தனர்.

★ அரசாங்கத்தில் பதவி வகித்தல், நிலங்களை உரிமையாக்கிக் கொள்ளல் என்பன பிரபுக்களுக்கு மாத்திரமே உரியதாக இருந்தது.

★ படையைக் கூட்டுதல், அதனைப் பரிபாலித்தல் போன்றவையும் பிரபுக்களுடைய கையிலேயே இருந்தது.

★ அரசனுக்கு படை தேவைப்படும்போது அவன் பிரபுக்களின் உதவியை நாட வேண்டியிருந்தது.

★ பிரபுக்கள் தமது அதிகாரத்தைப் பரவலாக்கும் பொருட்டு அடிக்கடி தம்மிடையே சண்டையிட்டனர். அவை இருசாராரிடையேயான சண்டை என அழைக்கப்பட்டது.

★ மானிய அரசியல் முறையானது பலம் வாய்ந்த பிரதேச ஆட்சியாளர்களைக் கொண்ட ஒரு வகையில் கவலைக்குரிய ஆட்சியாக விளங்கியது.

## நிலமானிய முறையின் அரசியலில் அதிகாரம் பரவலாக்கப்பட்டமை.

## நிலமானிய சமூக முறை

நிலமானிய முறையில் மக்களிடையே சமூக சமமின்மை காணப்பட்டது. பிறப்பின்படி சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு காணப்பட்டமை.

★ பிறப்பிலேயே உயர்வாகக் கருதப்பட்டவர்கள் பிரபுக்களாவர். அரசன், பிரபுக்கள், குருமார் என்போர் அப்பிரிவினுள் அடங்குவர்.

★ பிறப்பிலேயே கீழானவர்களாகக் கருதப்பட்டோர் சாதாரண மக்களாவர். இதன்படி மக்களே சமுதாயத்தில் பெரும்பான்மையினராகக் காணப்பட்டனர்.

★ பிரபுக்கள் மாளிகைகளில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர்.

- ★ தமியர்கள் குடிமக்கள் சிறு இல்லங்களில் எளிய வாழ்க்கை வாழ்ந்தனர்.
- ★ எவ்வித சலுகையும் பெற்றிராத தமியர்கள்(குடிமக்கள்) அரசனுக்கும், பிரபுக்களுக்கும் திருச்சபைக்கும் வரி செலுத்த வேண்டிய நிலை இருந்தது.
- ★ மானியமுறை காலத்தில் தனிமனிதன் முக்கியத்துவம் பெறவில்லை. பொதுத் தன்மையும் கூட்டுறவுமே முக்கியத்துவம் பெற்றன.
- ★ தமியர்கள் வேளாண்மை உட்பட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒன்றிணைந்து (ஒற்றுமையாக) செய்தனர். வர்த்தகம் மற்றும் கொடுக்கல் வாங்கலின் போது "Guild" என்ற பொதுவான அமைப்புக் காணப்பட்டது.

சாதாரண மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தனர். பிரபுக்கள் அதிகாரத்தின் பொருட்டு தம்மிடையே அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர்.

நிலமானிய முறையில் சமூகத்தில் சமநிலை காணப்படவில்லை. மக்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு காணப்பட்டது.

## நிலமானியமுறைப் பண்பாடு

மத்தியகால ஐரோப்பாவில் நடைமுறையிலிருந்த மானிய முறையில் காணப்பட்ட அரசியல், பொருளாதார, சமூக அமைப்பிற்கு ஏற்றதாகவே பண்பாடும் இருந்தது. அதன்படி மத்தியகாலப் பண்பாடு புராதன காலத்தையும், நவீன காலத்தையும் விட வேறுபட்டதாகக் காணப்பட்டது.

## நிலமானிய முறைக் காலத்தில் ஐரோப்பாவில் காணப்பட்ட பண்பாட்டு இயல்புகள்

- ★ பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட கத்தோலிக்கத் திருச்சபை முதன் நிலையில் இருந்தது.
- ★ கல்விச் செயற்பாடுகள் திருச்சபையை மையமாகக் கொண்டதாக இருந்தது.
- ★ மக்கள் வாழ்க்கை சமயத்தோடு தொடர்புடையதாக இருந்தது.
- ★ அனைத்துப் பண்பாடுகளும் சமயத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்தன.
- ★ சங்கீதம், நாடகம், சித்திரம், சிற்பம் என்பன லௌகீகத்தைப் பிரதிபலிப்பதாக அமையில்லை. அவை சமயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்தது.
- ★ மக்களது வாழ்க்கை ஒழுக்கமுடையதாகக் காணப்பட்டது.

## நிலமானிய முறையின் வீழ்ச்சி

கி.பி 5 ஆம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளர்ச்சியடைந்த நிலமானிய முறை 13 ஆம் நூற்றாண்டுமுதல் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதற்கான காரணங்கள் பல உண்டு.

★ அடுத்த அத்தியாயத்தில் நாம் கற்க உள்ள சிலுவை யுத்தம் நிலமானிய முறை வீழச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

★ நிலமானிய முறை சிலுவை யுத்தத்தின் காரணமாக வீழ்ச்சியடைந்தது.

**சிலுவையுத்த காலத்தில்........**

★ வர்த்தகம் முன்னேற்றமடைந்தது.

★ நகரங்கள் வளர்ச்சியடைந்தன.

★ பணப்புழக்கம் அதிகரித்தது.

★ நீண்ட கால யுத்தத்தில் ஈடுபட்ட பிரபுக்கள் பலர் இறந்தனர்

★ யுத்தத்திற்கு சென்ற தமியர்கள் மீண்டும் பண்ணைகளுக்குச் செல்லாது நகரங்களில் தங்கி வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டனர். இதனால் மானியமுறை வீழ்ச்சியடைந்தது.

★ அரசர்கள் பலம் வாய்ந்தவர்களாகிப் பலம் வாய்ந்த இராச்சியங்களைக் கட்டியெழுப்பியதால் நிலமானிய அரசியல் முறை வீழ்ச்சி அடைந்தது.

★ பணப்புழக்கம் அதிகரித்ததால் நடுத்தர வகுப்பினர் எழுச்சியுற்றனர்.

பண்ணைமுறை வீழச்சியடைந்ததுடன் பிரபுக்களின் சமூகநிலையும் தளர்ச்சியுற்றது. அத்தோடு நிலமானிய முறையும் வீழ்ச்சியடைந்தது.

★ 12 ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக நிலமானியமுறைக் காலத்தில் இருந்த சமய சமூக நிலைமைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின.

15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவின் சகல நாடுகளிலும் நிலமானிய முறை வீழச்சியடைந்தது. நவீன ஐரோப்பாவின் உதயம் ஆரம்பமாகியது.

**பயிற்சி**

01. மத்திய காலம் என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்துக.

02. நிலமானிய முறை என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்துக.

## செயற்பாடு

1. *நிலமானிய முறையின் வீழச்சிக்கான காரணங்களை அட்டவணைப்படுத்துக.*
2. *"மத்திய கால ஐரோப்பிய நிலமானிய முறை" என்ற தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதுக.*

## சிலுவை யுத்தம்

### முன்னுரை

கிறிஸ்தவ சமயத்தின் ஸ்தாபகரான இயேசு பலஸ்தீனத்தில் பெத்தலகேம் எனும் ஊரில் பிறந்தவரென்றும் ஜெருசலேமில் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்தவரென்றும் நாம் கற்றுள்ளோம். இந்த இடங்களை இப்பொழுதும் கிறிஸ்தவர்கள் புனித பூமியாகக் கருதுகிறார்கள். எனவே இந்த இடங்களை முன்னிட்டு பிற மதத்தினரால் சவால்கள் ஏற்படும்போது அவர்கள் ஆத்திரமடைகிறார்கள்.

இஸ்லாமியர்களால் அப்பிரதேசங்களுக்கு சவால்கள் ஏற்பட்டபோது ஐரோப்பா முழுவதிலும் பரவியிருந்த பாப்பரசரைத் தலைவராகக் கொண்ட கிறிஸ்தவர்கள் ஆத்திரமடைந்தனர். இவற்றை மனதிலிருத்தி சிலுவை யுத்தம் என்றால் என்ன என்பதனைக் கற்போம். பல நூற்றாண்டுகளாக உரோமப் பேரரசின் கீழிருந்த பலஸ்தீனர் 7 ஆம் நூற்றாண்டில் அரேபியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர். எனினும் கிறிஸ்தவர்கள் பலஸ்தீனத்திலிருந்த புனிதத் தலங்களுக்கு எவ்வித இடையூறுமின்றி சென்று வந்தனர். கி.பி 11 ஆம் நூற்றாண்டளவில் செல்யுக்ஸ் துருக்கியர்கள் (Seljuk Turks) அப்பிரதேசங்களைக் கைப்பற்றினர். அதன்பின்னர் கிறிஸ்தவர்கள் அப்பிரதேசங்களில் திருயாத்திரை செல்வதற்குத் தடையேற்பட்டது. புனித யாத்திரையை மேற்கொண்டவர்கள் துன்புறுத்தப்பட்டதுடன், சிலர் கொல்லப்பட்டனர்.

இதனைக் கண்டு கலக்கம் அடைந்த பாப்பரசர் புனித பூமியைப் பாதுகாப்பதற்காக ஒன்று திரளும்படி ஐரோப்பாவிலிருந்த கிறிஸ்தவர்களைக் கேட்டுக் கொண்டார். இதன் விளைவாகப் பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி போன்ற சகல கிறிஸ்தவ நாடுகளும் அரசர்கள், பிரபுக்களின் தலைமையின் கீழ் பெருந்திரளாக அணி திரண்டனர். இவர்கள் செய்த யுத்தம் கிறிஸ்தவ சமயத்தை முன்னிட்டு செய்த படியால் ''சிலுவை யுத்தம்'' என்று குறிப்பிட்டனர்.

வெற்றி தோல்விகள் இரு சாராருக்கும் மாறி, மாறி ஏற்பட்டதுடன் இரண்டு நூற்றாண்டுகள் வரை சிலுவை யுத்தங்கள் நடைபெற்றன. எனவே சிலுவை யுத்தம் என்பது ஒரு யுத்தம் மட்டுமல்ல. அது பல யுத்தங்களாக இருந்தன. இந்த யுத்தங்களின் இறுதி விளைவாகக் கிறிஸ்தவர்களால் புனித பூமியைக் கைப்பற்ற முடியாது போனதுடன் ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார பண்பாட்டின் மத்திய நிலையமாக விளங்கிய கொனஸ்தாந்திநோபிள் கி.பி. 1453ஆம் ஆண்டு துருக்கியர் வசமானதும் கிறிஸ்தவர்கள் சமய ரீதியாகவும், பொதுவாக ஐரோப்பியர்கள் அரசியல், பொருளாதார சமூக ரீதியாகத் தோல்வியடைந்திருந்தனர்.



### சிலுவை யுத்தத்தின் விளைவுகள்

சிலுவை யுத்தமானது ஐரோப்பாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

* சிலுவை யுத்தம் நிலமானிய முறையின் வீழச்சிக்கு பலவிதத்திலும் வழிவகுத்தது.
* மத்தியகால ஐரோப்பாவில் காணப்பட்ட பல இயல்புகள் வீழ்ச்சியுற்று நவீன காலம் தோன்றவதற்கு வழி வகுத்தது.
* கீழ் நாடுகளில் காணப்பட்ட அறிவும், உற்பத்திப் பொருட்களும் ஐரோப்பாவைச் சென்றடைந்தன.

எடுத்துக்காட்டாக

* இந்தோ அராபிய இலக்கங்கள் கேத்திரக் கணிதம், கீழ்நாட்டு மெய்யியல், கடதாசி, மாலுமிகளின் திசையறிகருவி என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
* கீழ்நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள், துணிவகைகள், மஸ்லின், சீன, மருந்துவகைகள், பெறுமதி வாய்ந்த இரத்தினக்கற்கள், கண்ணாடி, பழவகைகள் என்பனவற்றுக்கு ஐரோப்பிய நாடுகளில் கேள்வி அதிகரித்தது.
* இவ்வாறு பொருட்களுக்கு கேள்வி அதிகரிக்கவே மேல்நாட்டு - கீழ் நாட்டு வர்த்தகம் விருத்தி அடைந்தது.
* மத்தியகால ஐரோப்பாவில் நிலமானிய முறையில் கட்டுப்பட்டிருந்த மக்கள், சிலுவை யுத்தத்தின் காரணமாக வெளி உலகுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய கால ஐரோப்பாவை நவீன கால ஐரோப்பாவாக மாற்றுவதற்கு சிலுவை யுத்தம் உதவியது.

### செயற்பாடு

*மத்திய கால ஐரோப்பாவில் சிலுவை யுத்தத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் சுவர்ப் பத்திரிகைக்கு கடிதம் ஒன்று எழுதுக.*

### பயிற்சி

* சிலுவை யுத்தம் என்றால் என்ன என்பதை விளக்குக.
* சிலுவை யுத்தத்தின் காரணமாக ஐரோப்பியாவிற்கு கீழ்நாடுகளிலிருந்து கிடைத்தவை எவை?
* வேதாகமம், கன்னி மரியாள், எருசலேம், இறைமகன், படைப்பின் கர்த்தா என்பன பற்றிய சிறு குறிப்புகளுடனான கைநூல் ஒன்றைத் தயாரிக்குக.

# 06 பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் இலங்கை

பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் இந்நாட்டு வரலாற்றில் காணக்கூடிய முக்கிய இயல்பு மிகக் குறுகிய காலத்திற்கு மட்டும் நிலைக்கக் கூடிய இராசதானிகள் பல தோன்றியமையாகும். தென்மேற்கில் உருவாகி குறுகிய காலத்தில் வீழச்சி அடைந்த தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல, கம்பளை, கோட்டை எனும் பிரதான இராசதானிகளுக்கு மேலதிகமாக யாழ்ப்பாண இராச்சியமும் இக்காலத்தில் காணப்பட்டது. இவ்வரசுகளைப் பற்றிய விடயங்களை கற்பதே இவ்வத்தியாயத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது மூதாதையரால் நிர்மாணிக்கப்பட்ட பராக்கிரம சமுத்திரம் போன்ற பெரிய குளங்களை அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்களில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான பெருங்குளங்களை அமைத்ததன் காரணம் என்ன?

அவர்கள் குளங்களுடன் தொடர்புடைய அரசியல், சமூக, பொருளாதார நிலைகளுக்கு அமைய வாழ்ந்தனர். அச்சமூகமானது குளமும் தாதுகோபமும் எனும் அடிப்படையின் மீது கட்டியெழுப்பப்பட்டிருந்தது. புராதன கால அரசர்கள் குளங்களையும் தாதுகோபங்களையும் கட்டியெழுப்புவது தமது கடமையெனக் கருதிச் செயற்பட்டனர்.

எனினும் குளங்களுடன் தொடர்புடைய நீர்வள நாகரிகம் இந்தியாவிலிருந்து வந்த கொடூரமான மாகன் என்பவனின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு அழிந்தொழிந்த தென்பதை நாம் முன்னர் அறிந்தோம். அத்தோடு குளமும், தாதுகோபமும் என்ற கோட்பாடும் முற்றாக இல்லாமல் போய்விட்டது.

## மாகனால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகள்


- ★ நிர்வாகத்துடன் தொடர்புடைய குடும்பங்களை அழித்தமையால் நிர்வாக நடவடிக்கைகள் சீர்குலைந்தமை.
- ★ தலைநகர் உட்பட இராசரட்டையின் பல இடங்களிலிருந்த கட்டடங்களை அழித்தல்
- ★ விகாரைகளை அழித்து அங்கிருந்த ஏட்டுச் சுவடிகளைப் பாழ்படுத்தியமை
- ★ குளங்களை அழித்துப் பொருளாதாரத்தை சீர்குலைத்தமை.

## இராசதானிகள் தெற்மேற்கிற்கில் இடம் பெயர்தல்

மேற்கூறப்பட்ட நிலைமை தோன்றியதால், தலைவர்கள் பௌத்த குருமார், பொதுமக்கள் ஆகியோர் பாதுகாப்புத் தேடித் தென்மேற்குப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்தனர். அவர்களில் சிலர் அப்பிரதேசங்களில் காணப்பட்ட காட்டுப் பகுதிகளையும் குன்றுப் பகுதிகளையும் அண்மித்த இடங்களைத் தலைநகராகக்

கொண்டு, அவற்றைச் சூழவுள்ள பகுதிகளை ஆட்சி செய்தனர். அவ்வாறு ஆட்சி செய்தவர்களில் சிலர் வருமாறு

| | | |
|---|---|---|
| யாப்பகூவ | - | சுப (படைத்தளபதி) |
| மினிப்பே | - | சங்க (படைத்தளபதி) |
| கோவிந்தமல | - | புவனேகபாகு ஆதிபாத (பிரதானி) |
| தம்பதெனிய | - | விஜயபாகு (இளவரசன்) |




*13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டுவரையிலான இலங்கையின் இராசதானிகள்*

படம் *6.1*

## தம்பதெனிய இராசதானி (கி.பி 1232 - 1270)

பிரதேச இராசதானிகளை அமைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவனாக இருந்தவன் வன்னித்தலைவன் என்ற வகையில் செயற்பட்ட வத்ஹிமி விஜயபாகு இளவரசனாவான். (மூன்றாம் விஜயபாகு) பௌத்த குருமார்களதும், வன்னித் தலைவர்கள் சிலரினதும் உதவியைப் பெற்று இவன் அரசனானான். தம்தெனிய அரசின் முதல் அரசன் இவனாவான். ஓரளவு பாதுகாப்பான இடத்தில் தம்பதெனிய அமைந்திருந்தமை இதனைத் தலைநகராக்கியமைக்கான காரணமாக இருக்கலாம்.

பொலன்னறுவையில் இருந்த மாகனைத் துரத்திவிடுவதற்கு ஆயத்தங்களை மேற்கொள்வதற்குப் பொருத்தமான இடமாக இதனை அம்மன்னன் கருதியிருக்கலாம்.

மூன்றாம் விஜயபாகு மன்னனால் மாகனைத் தோற்கடிக்க முடியாது போனாலும், எதிரிக்கு எதிராக ஒன்று திரண்டு எதிர்க்கக்கூடிய ஒரு நிலையத்தைத் தேர்ந்தெடுத்த பெருமையை அம்மன்னன் தனதாக்கிக் கொண்டான்.

கொத்மலையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவைக் கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல குன்றின் உச்சியில் தலதாமாளிகையை அமைத்து, அதனை அங்கே வைத்த பெருமையும் விஜயபாகுவிற்கே உரியதாகும். தந்ததாதுவைப் பெற்றதால் தனது அரசியல் உரிமையையும் இவன் நிலைநாட்டிக் கொண்டான்.

மூன்றாம் விஜயபாகுவின் மரணத்தின் பின்னர் அவனது மகன் இரண்டாம் பராக்கிரமபாகு அரசனானதுடன் கி.பி 1270 வரை முப்பத்தைந்து ஆண்டுகளாக ஆட்சி செய்தான். தம்பதெனிய அரசின் சிறந்த அரசனாக அவன் மதிக்கப்படுகின்றான்.

### இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் சாதனைகள்

★ 1255 இல் பாண்டிய படையினரின் உதவியைப் பெற்று நாற்பது ஆண்டுகளாக இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த கலிங்க மாகனைத் தோற்கடித்தான்.

★ பாண்டியரின் உதவியைப் பெற்று, ஜாவா நாட்டைச் சேர்ந்த சந்திரபானுவைத் தோற்கடித்தான்

★ இரண்டாம் பராக்கிரமபாகு சிறந்த கவிஞனாவான்.

இரண்டாம் பராக்கிரமபாகுவின் பின்னர் அவனது மகனான போதிசத்துவ விஜயபாகு எனப்பட்ட நான்காம் விஜயபாகு அரசனானான். ஆனால் இவன் இரண்டு ஆண்டுகளே ஆட்சி செய்தான். மித்த என்ற படைத்தலைவன், வேலையாள் ஒருவனுக்கு இலஞ்சம்

கொடுத்து கி.பி 1272 இல் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். அரசுரிமை இல்லாத ஒருவன் அரசனானதால் கலகம் ஏற்பட்டது. எனவே மித்த என்ற படைத்தலைவனைக் நீக்கிவிட்டு அரசுரிமையை நான்காம் விஜயபாகு மன்னனின் சகோதரன் திரும்பவும் ஆட்சிப் பொறுப்பை பெற முயற்சி செய்து வெற்றிப் பெற்றான்.

## யாப்பகூவ இராசதானி (கி.பி 1272 - 1300)

தம்பதெனிய அரசின் மன்னனாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாம் புவனேகபாகு தம்பதெனியவை விட யாப்பகூவ பாதுகாப்பான இடம் என உணர்ந்து தன் இராசதானியை யாப்பகூவவிற்கு மாற்றிக் கொண்டான். பொலன்னறுவையில் இருந்த மாகனின் எதிர்ப்பை சமாளிக்கும் பொருட்டு சுப என்ற படைத் தலைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட குன்றுகள் நிறைந்த பாதுகாப்பான இடமே யாப்பகூவவாகும்.

முன்னர் தம்பதெனியாவை ஆண்ட போதிசத்துவ விஜயபாகு அரசனுக்கு ஆதரவளித்த வன்னித் தலைவன் ஒருவன் இவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தான். மேலும் காலிங்கராயர், போதி கங்கதேவ எனும் இவரின் தலைமையின் கீழ் திராவிட ஆக்கிரமிப்பாளர்களுக்கு முகங் கொடுக்கவும் நேர்ந்தது. இச்சவால்களை வெற்றிகரமாக அவனால் சமாளிக்கவும் முடிந்தது.

இக்காலத்தில் வடக்கில் சந்திரபானு என்ற அரசன் (செந்தமேன்) ஆண்டதாக மார்க்கபோலோ எனும் சஞ்சாரியின் குறிப்புக்களில் கூறப்பட்டுள்ளது. அவன் பாண்டியனின் உதவியைப் பெற்ற மன்னன் ஆவான். முதலாம் புவனேகபாகு மன்னனுக்க அவனது ஆக்கிரமிப்பை எதிர்த்பார்த்து தயார் நிலையில் இருக்க வேண்டியிருந்தது.



யாப்பகூவ இராசதானி
படம் 6.3

இம்மன்னன் வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக எகிப்து நாட்டுடன் தொடர்புகளை மேற்கொள்ள முயற்சித்துள்ளான். இந்நாட்டில் உள்ள வளங்களைப் பற்றியும் மேற்கொள்ளக் கூடிய வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும் எகிப்திய சுல்தா (மன்ன)னிடம் தெரியப்பபடுத்துவதற்காக கி.பி 1283 ஆம் ஆண்டில் தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்தான்

முதலாம் புவனேகபாகு மரணத்தின் பின்னர் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து இரண்டாம் புவனேகபாகு (முதலாம் புவனேகபாகுவின் மகன்) அரசேற்றான். ஏழாண்டுகளின் பின்னர் தனது தலைநகரத்தை குருநாகலைக்கு இவன் மாற்றிக் கொண்டதோடு, இவ்விராசதானியின் வரலாறு முற்றுப் பெற்றது.

## குருநாகல் இராசதானி (கி.பி 1300 - 1341)

குருநாகல் இராசதானி கி.பி. 1300 ஆம் ஆண்டு இரண்டாம் புவனேகபாகுவால் இராசதானியாக்கப்பட்டது. அவனுக்குப் பின்னர் அவனது மகனான நான்காம் பராக்கிரமபாகு அரசனானான். குருநாகலை காலத்தின் சிறந்த அரசனாக இவன் போற்றப்பட்டான். புத்த சமயத்தினதும், கல்வியினதும் வளர்ச்சிக்காக இவன் பல பணிகளை ஆற்றினான். இவன் 'பண்டித பராக்கிரமபாகு' எனவும் அழைக்கப்பட்டான்.

இவனது ஆட்சி குருநாகல் பிரதேசத்தில் மட்டுமின்றி கண்டி, கேகாலை, கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய தென்மேற்குப் பிரதேசங்களிலும் பரவியிருந்தது.

இவனது ஆட்சியின் பின்னர் பதினைந்து ஆண்டுகள் வரை பல அரசியல் நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன. என்றாலும் அடுத்து மூன்றாம் புவனேகபாகு, விஜயபாகு எனும் இருவர் அரசாண்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## கம்பளை இராசதானி (கி.பி 1341 - 1415)

கம்பளை அரசின் ஆட்சியாளன் கி.பி 1341 இல் அரசனான நான்காம் புவனேகபாகு ஆவான். அராபிய தேச யாத்திரிகனான இபின்பதூதா என்பவரின் கூற்றுப்படி, இவன் வலிமையற்ற மன்னனாவான். இவனுக்குப் பின் அரசனான 5 ஆம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை என்பன நிறுவப்பட்டன. மரவேலைப்பாட்டிற்குப் புகழ்பெற்ற அம்பக்க தேவாலயம் அமைக்கப்பட்டதும் இக்காலப்பகுதியிலேயே ஆகும்.



*லங்காதிலக விகாரை*
*படம் 6.4*



*அம்பக்கே மரச்செதுக்கல்*
*படம் 6.5*

கம்பளை காலத்தின் இறுதிப் பகுதியில் அரசர்களை விட சேனாதிபதிப் பதவிகளை வகித்த பிரதானிகளின் குடும்பத்தவர்கள் பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வாறு பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்த இரு குடும்பங்கள் கம்பளை சேனாதிலங்கார குடும்பமும் இறைகம அழகேஷ்வரர் எனப்பட்ட

அழக்ககோனார் குடும்பங்களுமாகும். சேனாதிலங்கார நான்காம் புவனேகபாகுவின் பிரதம அமைச்சராக இருந்து புகழ்பெற்றான்.

நான்காம் புவனேகபாகு மன்னனின் பின்னர் கம்பளைக்கு ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னனானான். அவனைப் பதவி கவிழ்த்து, கி.பி 1360 இல் மூன்றாம் விக்கிரமபாகு அரசனானான். இவ்வரசனின் காலத்தில் வடக்கை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் எனும் அரசர்கள், நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் கொள்ளையிட்டு மக்களுக்குப் பேரிடர் விளைவித்தனர். அவ்வபாயத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க முக்கியமான போர்த்தளம் ஒன்று தேவையாய் இருந்தது.

**ஆரியச் சக்கரவர்த்தியின் ஆக்கிரமிப்பு சார்ந்த விடயங்கள்**

★ இக்காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் தெற்கிலும் பரவிக் கொண்டிருந்தது.

★ அவர்கள் கம்பளை இராச்சியத்தின் மீது வெற்றிகரமான ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு, அப்பிரதேசங்களில் வரிவசூலிப்பதிலும் ஈடுபட்டனர்.

★ சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, கொழும்பு ஆகிய இடங்களில் கோட்டைகளையும் நிறுவிக் கொண்டனர். அதன் மூலம் மேற்குக் கரையிலுள்ள துறைமுகங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி வருமானத்தையும் ஆரியச் சக்கரவர்த்திகள் ஈட்டிக் கொண்டனர்.

இத்தேவைகளுக்காவே மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் தளபதியாகத் திகழ்ந்த பிரதானி நிஸங்க அழகக்கோனார் அல்லது அழகேஸ்வர என்பவரால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை கட்டியெழுப்பப்பட்டது. இக்கோட்டை சதுப்பு நிலப் பிரதேசத்தில் நீர்ப் பாதுகாப்பைக் கையாண்டு அமைக்கப்பட்டது. இக்கோட்டையைப் பயன்படுத்தி, ஆரியச் சக்கரவர்த்திகளைத் துரத்தியடித்து துறைமுகங்களை மீட்டெடுத்து, விக்கிரமபாகு மன்னனின் பலத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் அழகேஸ்வர வெற்றிபெற்றான்.


மூன்றாம் விக்கரமபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் அரசானான ஐந்தாம் புவனேகபாகுவும் பலவீனமானவனாக இருந்தான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் அழகக்கோனார் வம்சத்தின் அதிகாரம் உச்சநிலையில் இருந்தது. அடுத்து அரசேற்ற வீரபாகு அரசனின் காலத்தில் வீர அழகேஸ்வர என்பவன், றைகமையில் ஆட்சி செய்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இதன்படி அழகேஸ்வர குடும்பம் கம்பளை இராசதானிக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு, இறைகமையில் இருந்து கொண்டு அப்பிரதேசத்தை ஆட்சிசெய்திருப்பது தெரியவருகிறது. இவ்வாறு கம்பளை, இறைகம என்று இரண்டு ஆட்சியாளர்கள் இருந்த காலத்தில் சீனப் பேரரசன் இலங்கையின் அரசியல் நடவடிக்கையில் தலையீடு செய்துள்ளான்.

## சீனத் தலையீடு தொடர்பான விபரங்களாவன

- ★ சீனாவின் யுங் லோ பேரரசனால் அனுப்பப்பட்ட செங்ஹோ சேனாதிபதி கி.பி 1405 இல் இலங்கையை வந்தடைந்தான்.
- ★ இவன் அரசனுக்கு ஏனைய பிரதானிகளுக்கும், வணக்க ஸ்தலங்களுக்கும் காணிக்கைகள் கொண்டு வந்தான்.
- ★ இறைகம ஆட்சியாளனான அழகேஸ்வர இவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.
- ★ சீனத் தளபதி கொண்டுவந்த காணிக்கைகளை தெவுந்தரை தேவாலயத்திற் சமர்ப்பித்து விட்டுத் திரும்பிச் சென்றான்.
- ★ கி.பி 1411 இல் செங்ஹோ தளபதி பெரும்படையுடன் மீளவும் இலங்கைக்கு வந்தான்.
- ★ வீர அழகேஸ்வர சண்டைக்கு ஆயத்தமாயிருந்தான்.
- ★ வீர அழகேஸ்வரனைத் தோற்கடித்து அவனைக் கைது செய்து சீனாவுக்குக் கொண்டு சென்றான்.

## கோட்டை அரசு (கி.பி 1415 - 1521)

அழகேஸ்வரன் என்ற சேனாதிபதியால் பாதுகாப்பு அரணாகவும், யுத்த மத்திய நிலையமாகவும் ஆரம்பித்த நகர் கி.பி 1415 ஆம் ஆண்டு இலங்கை அரசின் தலைநகராகியது. 6ம் பராக்கிரமபாகு கி.பி 1415 ஆம் ஆண்டு இறைகம பாராக்கிரமபாகு எனும் பெயரில் கோட்டைக்கு அரசனானான். இவன் கோட்டையின் அரசனாகும் போது இலங்கையில் பல பிரதேச அரசுகள் இருந்தன. வடக்கில் யாழப்பாணப் பிரதேசத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி செய்தனர். மலைநாடு ஜோதிய எனும் பிரதேச ஆட்சியாளன் ஒருவனால் ஆளப்பட்டது. கோட்டை அரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளாத இவர்கள் சுதந்திர ஆட்சியாளர்களாகச் செயற்பட்டனர். இவை தவிர்ந்த வன்னிப் பிரதேசங்களில் பல சுதந்திர அரசுகள் இருந்தன.





*கோட்டைஇராச்சியம் நில அமைப்பு*
*படம் 6.6*

6 வது பராக்கிரமபாகு மன்னன் இலங்கையை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தமை.

- ★ வன்னி ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தி அப்பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிறுவினான்.
- ★ தமது வளர்ப்பு மகனான சம்புமல் குமாரன் மூலம் கி.பி 1450 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசை வெற்றிக் கொண்டு அதனைக் கோட்டையுடன் இணைத்தான். தான் வெற்றி கொண்ட பிரதேசத்தின் ஆட்சியாளனாக சப்புமல் குமாரனையே நியமித்தான்.
- ★ மலைநாட்டு ஆட்சியாளனான ஜோதிய என்பவனால் மேற்கொள்ளப்பட்ட கலவரத்தை அடக்கும்பொருட்டு சம்புமல்குமாரனின் சகோதரனான அம்புலுகல குமாரனின் தலைமையில் படையொன்றை அனுப்பி அப்பிரதேசத்தையும் கோட்டையுடன் இணைத்துக் கொண்டான்.
- ★ இலங்கையை ஒன்றிணைத்த இறுதி ஆட்சியாளனாக விளங்குபவன் 6 ஆம் பராக்கிரமபாகு ஆவான்.

6 ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலம் அமைதியும், சுபீட்சமும், நிலவிய காலப்பகுதியாக விளங்கியது, 6வது பராக்கிரமபாகுவிற்கு ஆண்பிள்ளைகள் இல்லாததால் அவனது மகளின் மகனான ஜயபாகுவிற்கு அரசுரிமை கிடைத்தது. ஆனால் அக்காலத்தில் யாழ்ப்பாண ஆட்சியாளனாக விளங்கிய சப்புமல்குமாரன் அவனைக் கொன்றுவிட்டு 6ஆம் புவனேகபாகு என்ற பெயரில் கோட்டையின் அரசனானான். இவனுக்கு எதிராகப் பல கலவரங்கள் ஏற்பட்டன. அவன் அவற்றை அடக்கியபொழுதிலும் அவனது மரணத்தின் பின் அரசு மீண்டும் பிளவுப்பட்டது. இவனுக்குப் பின் 7 ஆம் பராக்கிரமபாகு அரசனானான். எனினும் அம்புலுகலகுமாரன் புதிய அரசனை எதிர்த்து தோல்வியுறச் செய்து எட்டாம் வீர பராக்கிரமபாகு என்ற பெயரில் அரசனானான். இக்காலத்தில் யாழ்ப்பாணம், கண்டி ஆகிய அரசுகள் கோட்டை அரசினின்று பிரிந்து சுதந்திர அரசுகளாகின. இந்த அரசனது காலத்திலேயே போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர்.




விஜயபாகு கொலையின் பின்னர் இலங்கையின் அரசியல் பிரிவுகள்
படம் 6.4

### பயிற்சி

01. பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின்னர் தோன்றிய அரசுகளின் முக்கிய ஆட்சியாளர்கள் பற்றிய விபரங்களை சேகரித்துக் கைநூல் ஒன்று தயாரிக்க.

02. பொலன்னறுவை இராசதானியின் பின்னர் உருவான இராசதானிகள் எதிர்நோக்கி இருந்த உள்நாட்டு படையெடுப்புகளை அட்டவணைப்படுத்துக.

## பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள்

வீர பராக்கிரமபாகு மன்னனின் பின்னர் 9ஆம் பராக்கிரமபாகு எனும் தர்மபராக்கிரமபாகுவும், அதன் பின்னர் 6ஆம் விஜயபாகுவும் அரசனாகினர். 6 ஆம் விஜயபாகுவுக்கு எதிராக அவனது பிள்ளைகள் மூவரும் கி.பி 1521ம் ஆண்டு செய்த சதியின் விளைவாக அரசன் கொல்லப்பட்டான். இச்சம்பவம் விஜயபாகு கொலை எனப்படும். இதன் பின்னர் கோட்டை அரச சகோதரர்கள் மூவரிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது. இதன்படி கோட்டை, சீதாவாக்கை, இறைகம எனும் மூன்று பிரிவுகள் ஏற்பட்டதுடன் யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இராச்சியங்கள் சுதந்திர அரசுகளாக செயற்படத் தொடங்கின. இவை தவிர பழைய இராஜரட்டைப் பிரதேசத்திற்குச் சொந்தமான வனாந்தரமான பிரதேசம் 'வன்னியர்' எனப்பட்ட சுதந்திர ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்தது.

## சமூக, பொருளாதார, இலக்கிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

குளங்களுடன் (விவசாயத்துடன்) தொடர்புடைய பண்பாடு நிலவியது, அரசுக்கள் பல இடங்களுக்கும் மாற்றம் பெற்றன. அரசின் பாதுகாப்பிற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டு இயற்கை அரண்களால் சூழப்பட்ட இடங்கள் இராசதானிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இவ்வாறு மாற்றம் பெற்ற இராசதானிகள் சிறிது காலமே ஓரிடத்தில் நிலைத்திருந்தன. இதனால் அரசர்கள் விவசாயத்திலும் நீர்ப்பாசனத்திலும் அதிக கவனம் செலுத்தவில்லை. விவசாயத்தின் பொருட்டு மழையையே நம்பி இருந்தனர்.

விவசாயத்தில் நெல் முக்கிய இடம் வகித்தது. தண்ணீர் குறைவான இடங்களில் சேனைப் பயிர்ச்செய்கையும், சற்று உயர் நிலங்களில் தென்னை, பலா, பாக்கு, வெற்றிலை, மிளகு போன்றனவும் பயிரிடப்பட்டன. கரையோரப் பகுதியான களுத்துறை, பெந்தோட்டை, தொட்டகமுவ, மொரட்டுவ, களனி போன்ற இடங்களில் தெங்குப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தது. கறுவா முக்கிய பயிர்ச் செய்கையாக இருந்ததுடன் பிரதான ஏற்றுமதிப் பொருளாகவும் விளங்கியது. அதனோடு பாக்கு, மிளகு, சாதிக்காய், ஏலம் என்பனவும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் நெற்பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம் குறைந்தது. இரத்தினக்கற்கள் யானைதந்தங்கள் என்பவனவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியா, அராபியா, சீனா, பாரசீகம், எகிப்து ஆகிய நாடுகளே வர்த்தகத்துடன் அதிகம் தொடர்பு கொண்ட நாடுகளாகும். வெளிநாட்டு வர்த்தகம் அரசனின் ஏகபோக உரிமையாக இருந்தது.

## மக்கள் வாழ்க்கையில் வெளிப்படையாகக் காணப்பட்ட இயல்புகள்

- ★ தொழில் அடிப்படையில் சாதிப்பாகுபாடு.
- ★ தந்தையைத் தலைமையாகக் கொண்ட சமுதாயம்.
- ★ சமய, பண்பாட்டு விடயங்களில் ஈடுபட்ட பெண்களும் இருந்தமை.
  உ-ம் : உலகுடையதேவி, பத்மாவதி
- ★ சில விளையாட்டுக்கள் சமூகத்திற்கு அறிமுகமாதல் (ஊஞ்சலாட்டம்).
- ★ வெசாக், பொசன், எசல போன்ற விழாக்கள் சேர்த்துக் கொள்ளப்படல்.
- ★ பெயர் வைத்தல், திருமணம், மரணம் போன்றவை தொடர்பான சடங்கு முறைகள் சேர்த்துக் கொள்ளப்படல்

### பயிற்சி

பொலன்னறுவை வீழ்ச்சியின் பின்னர் உள்ள காலப்பகுதியின் மக்கள் வாழ்க்கை பற்றிய விபரங்களுடன் சுவர்ப் பத்திரிகைக்கு கடிதம் ஒன்று எழுதுக.

## சமயம்

மாகனின் ஆக்கிரமிப்பினால் இராசரட்டை வீழ்ச்சியுற்ற விதம் முன்னைய பாடங்களில் விபரிக்கப்பட்டுள்ளது. இராசரட்டைப் பண்பாட்டில் சமயம் அரசியலோடு பின்னிப் பிணைந்து இருந்தது, இதனால் மாகனின் ஆக்கிரமிப்புக் கொள்கை பௌத்த சமயத்துடன் தொடர்புடையதாக இருந்தது, பௌத்த நூல்கள், கட்டடங்கள் என்பன அழிக்கப்பட்டதுடன், பிக்குகளும் துன்புறுத்தப்பட்டனர். இதனால் பிக்குகள் வெளிநாட்டுக்கும். இலங்கையின் தென்மேற்குப் பிரதேசத்திற்கும் இடம்பெயர்ந்தனர். எனவே குறிப்பிட்ட பிரதேசத்தை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட முதலாவது இராசதானியான தம்பதெனியாவைக் கட்டியெழுப்பிய 3 ஆம் விஜயபாகு மன்னன் பௌத்த மத மேம்பாட்டிற்காக பல பணிகளை ஆற்றினான்.

## தம்பதெனியாக் காலம்

### 3 ஆம் விஜயபாகு மன்னனின் சமயப் பணி

- ★ மாகனின் படையெடுப்பால் இடம்பெயர்ந்த பிக்குகளை மீண்டும் வரவழைத்தல்
- ★ தலைநகரில் விஜயசுந்தரராம எனும் விகாரையை நிர்மாணித்து அதனைப் பிக்குகளின் தலைமைப் பீடமாக ஏற்படுத்தல்.
- ★ கொத்மலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை வைப்பதற்காக கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல மலையின் உச்சியில் தலதா மாளிகை ஒன்றினை அமைத்தான்.

* களனி விகாரை, அத்தனகல விகாரை போன்ற விகாரைகளைப் புனருத்தாரணம் செய்தல்.
* உபசம்பதா வைபவத்தை மீண்டும் நடாத்தி, பௌத்த சங்கத்தை கட்டி எழுப்புதல்
* அழிந்து போன பௌத்த நூல்களைக் கல்விமான்கள் மூலம் மீண்டும் எழுதுவித்தல்.
* பிக்குகளின் ஒழுக்க மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
* மூன்றாம் விஜயபாகுவின் பின்னர் அரசனான 2 ஆம் பராக்கிரமபாகு சமயத்திற்கும், பண்பாட்டிற்கும் மகத்தான பணியாற்றினான்.
* பிக்குகளினதும் விகாரைகளினதும் தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஒழுக்கக் கோவையொன்றைத் தொகுத்தான். தம்பதெனிய கத்திகாவத்த என்று இது அழைக்கப்படுகின்றது.
* பெலிகலையில் வைக்கப்பட்டிருந்த பற்சின்னத்தைத் தம்பதெனியாவில் அமைக்கப்பட்ட தலாதா மாளிகைக்கு கொண்டு வந்தான்.
* ஆண்டுதோறும் உபசம்பதா வைபவத்தை நடத்துவித்தான்.

## குருநாகல் காலம் (குருநாகல் யுகம்)

* குருநாகலைக் காலத்தில் பௌத்த மதத்தின் வளர்ச்சியின் பொருட்டுப் பல நூல்கள் எழுதப்பட்டன. பன்சிய பணஸ் ஜாதிகய, சிங்கள போதி வங்ச, அநாகத்த வங்ச, தலதா சிறித என்பனவே அவைகளாகும்.
* நான்காம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலக்கியம் வளர்ச்சியுற்றது. எடுத்துக்காட்டாக கண்டி, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் சமயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதைக் குறிப்பிடலாம்.
* வீதாகம ஸ்ரீ சாரானந்த பிரிவெனாவும், நான்காம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டதாகும்.

## கம்பளைக் காலம் (கம்பளை யுகம்)

* கம்பளைக் காலத்தில் லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை, அம்பக்க தேவாலயம் என்பன நிர்மாணிக்கப்பட்டன. கடலாதெனிய, லங்காதிலக விகாரைகளில் தென்னிந்தியக் கட்டிடக்கலையின் அம்சங்களைக் காணலாம்.
* இக்காலகட்டத்தில் பௌத்த சமயத்தில் மகாயானப் பிரிவினதும் இந்து சமயத்தினதும் தாக்கம் இருந்தமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக கடலாதெனிய. லங்காதிலக்க விகாரைகளை நோக்கும்போது பாரிய புத்தர் திருவுருவம் வழிபாட்டிற்குரிய முக்கிய சிலையாக மூலக் கோவிலும், உபுல்வன், சிவன், வீபீஷணன், கணேசர், முருகன் எனும் தெய்வங்களின் சிலைகள் வெளிப்புறச் சுவர்களின் இடையிலும் (மாடக்குழிகளில்) வைக்கப்பட்டுள்ளன.

### கோட்டைக் காலம்

- ★ கோட்டைக்காலத்தில் சமய வளர்ச்சியின் பொருட்டு பல கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ★ 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனால் பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனா வீதாகம பிரிவெனா, பத்மாவதி பிரிவெனா, தெவிநுவர குலதிலக்க பிரிவெனா போன்ற பௌத்த மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டன.

**பயிற்சி**

பொலன்னறுவை இராசதானியின் வீழச்சியின் பின்னரான காலங்களை மனதில் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| காலம் | செய்யப்பட்ட சமயப் பணிகள் | உதவி புரிந்தோர் |
|---|---|---|
| | | |

### மொழியும் இலக்கியமும்

பொலன்னறுவையின் வீழ்ச்சியின் பின்னரான தம்பதெனிய கோட்டை காலங்களில் மொழி, இலக்கிய வளர்ச்சி சிறப்புற்றுக் காணப்பட்டன. கல்விக்கும், இலக்கிய வளரச்சிக்கும் அரசர்களின் ஆதரவு கிடைத்தமையும், கல்வி மத்திய நிலையங்கள் பல அமைக்கப்பட்டமையும், கல்விமான்கள் பலர் இருந்தமையும் இவ்வாறான எழுச்சிக்கு காரணங்களாக அமைந்தன.

தம்பதெனிய அரசின் முதலாவது மன்னனான மூன்றாம் விஜயபாகுவின் காலத்திலேயே இலக்கிய வளர்ச்சி ஆரம்பமானது. அவன் உள்நாட்டு, வெளிநாட்டு கல்விமான்களைக் கொண்டு நூல்கள் எழுதுவித்ததாகக் கூறப்படுகின்றது. அடுத்தாக தம்பதெனியாவை ஆட்சி செய்த 2 ஆம் பராக்கிரமபாகு இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினான். அவனும ஒரு சிறந்த கல்விமானாக இருந்தான். 'கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டிதன்' எனும் சிறப்புப் பெயரையும் இவன் பெற்றுள்ளான்.

### இம்மன்னரது காலத்தில் எழுதப்பட்ட நூல்களாவன

தர்மசேனரின் சத்தர்மரத்தனாவலிய, புத்த புத்ர தேரரின் பூஜாவலிய என்பன இந்தக் காலத்தைச் சேர்ந்த முக்கிய நூல்களாகும். 'கவிசிலுமின' 2ஆம் பராக்கிரம பாகு மன்னனால் எழுதப்பட்டதாகும்.

- ★ சித்தசங்கராவ என்ற பிரசித்தி பெற்ற இலக்கிய நூல்
- ★ பிக்குகளை வழி நடத்துவதற்கென வெளியிடப்பட்ட 'தம்பதெனி கதிகாவ'
- ★ 2 ஆம் பராக்கிரமபாகு மன்னனின் நாளாந்த செயற்பாடுகளைக் கூறும் கந்தவுரு சிரித்த
- ★ புத்தபுத்ர தேரரின் வைத்தியநூலான 'யோகார்ணாவ' என்பன இக்காலத்தில் எழுந்த நூல்களாகும்.
- ★ இவை தவிர விசுத்திக்மார்க்க சன்னய, சமந்த கூட வர்ணனா ரசவாகினி, சாரசங்கிரஹய, தூபவங்ஸ ஆகிய பாளிய மொழியில் எழுதப்பட்ட நூல்களும் உள.
- ★ பரோபகாரய எனும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நூலும் இக்காலத்தைச் சேர்ந்ததெனக் கூறப்படுகின்றது.

குருநாகலைக் காலமும் இலக்கிய வளர்ச்சியில் சிறந்து விளங்கியதாகக் கூறப்படுகின்றது. உம்மக்க ஜாதகய, பன்சியபனஸ் ஜாதகய, தலதா சிறித, சிங்கள போதி வங்சய, பூஜாவலிய என்பன இக்கால கட்டத்தில் எழுதப்பட்ட இலக்கிய நூல்களாகும். குருநாகலைக் காலத்தில் தந்ததாது, வெள்ளரசுமரம் போன்ற புனிதப் பொருட்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கிய நூல்களைக் காணக்கூடியதாக உள்ளது.

'சந்தேசய'என்ற தூதுப் பிரபந்தங்கள் சிங்கள மொழியில் முதன்முதல் எழுந்தது கம்பளைக் காலத்திலாகும். பழைய சந்தேச காவியமான மயூர சந்தேச (மயில் விடுதூது) எழுதப்பட்டதும் இக்காலத்திலேயே ஆகும். கம்பளைக் காலத்தில் பாளி இலக்கியங்களும் எழுதப்பட்டுள்ளன.

கோட்டைக்காலம் சிங்கள இலக்கிய வரலாற்றில் மிகவும் சிறப்புப் பெறும் காலமாக விளங்குகிறது. இந்தக் காலத்தில் இருந்தவர்கள் தொட்டகமுவே ஸ்ரீராகுல தேரர், சித்தார்த்த விமல கீர்த்தித் தேரர், வனரத்ன தேரர், வீதாகம மைத்திரி தேரர், வெத்தாவே தேரர் என்போராவார்.

கோட்டைக்காலத்தில் இலக்கியம் வளர்ச்சியுறுவதற்கு அக்காலத்தில் அங்கு இருந்த கல்வி நிலையங்களும் உறுதுணையாக விளங்கின. கல்வி நிலையங்களாவன:

வீதாகம ஸ்ரீ குணானந்த பிரிவென, தொட்டகமுவே விஜயபா பிரிவென, கொரகல பத்மாவதி பிரிவெனா, தெவிநுவர திலக்க பிரிவெனா, பெப்லியான சுனேத்ராதேவி பிரிவெனா.

## இலக்கிய நூல்கள் பின்வருமாறு

பெரகும்பா சிரித்த, காவிய சேகர, புதுகுணலங்காரய, குத்தில காவிய, லோவெட சங்கராவ, ஹங்ச பரவி, செலலிஹினி, கிரா சந்தேச காவியங்கள்

இலக்கியம் பல விதமானவையாக இருப்பது கோட்டைக்காலத்தில் காணக்கூடிய சிறப்பம்சங்களாகும்.

உ-ம் குவேனி அஸ்ன, குவன்மல் நிஹண்டுவ, சத்தர்ம ரத்னாகரய, பத்தி சத்தகய

## தமிழ்மொழி நூல்களாவன

(சரசோதிமாலை) சரஸ்வதி மாலை, சேகராசசேகர மாலை, தக்ஷண கைலாய புராணம், இரகு வம்சம்

### பயிற்சி

பொலன்னறுவைக் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்வைணையை நிரப்புக.

| காலம் | இலக்கியநூல் | எழுதியோர் |
|---|---|---|
| | | |

## யாழ்ப்பாண இராச்சியம்

கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின்படி சுயாதீன அரசாக விளங்கிய பொலன்னறுவை அரசின் வீழ்ச்சியின்பின் அதாவது, பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலாகும். யாழ்ப்பாண அரசைப் பற்றி அறியக் கூடியதாக இருப்பது யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூலிலாகும். இந்நூல் 1736 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாக கூறப்படுகின்றது. எனவே யாழ்ப்பாண வைபவமாலையில் விஜயகூளங்கை ஆரியச் சக்கரவர்த்தியுடன் தொடங்கி 16ம் நூற்றாண்டு போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்படும் வரை அதனை ஆட்சி செய்த அரசர்கள் 12 பேரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

01. விஜயகூளங்கை
02. குலசேகரன்
03. விக்கிரமன்
04. வரோதயன்
05. மார்த்தாண்டன்
06. குணபூசணம்
07. வீரோதயன்
08. ஜயவீரன்
09. குணவீரன்
10. கனகசூரியன்
11. பரராசசேகரன்
12. சங்கிலி

ஆரியச் சக்கரவர்த்திகளின் கீழ் பலம் பொருந்தியதாக விளங்கிய யாழ்ப்பாண அரசு சில சந்தர்ப்பங்களில் தென் இலங்கையை ஆக்கிரமித்துக் கப்பம் பெற்றுச் சென்றதும் உண்டு. கம்பளையில் ஆட்சி செய்த 3 ஆம் விக்கிரமபாகு மன்னனின் காலத்தில் மாத்தளை, வத்தளை, களனி ஆகிய பிரதேசங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆக்கிரமித்து சிலாபம் போன்ற பிரதேசங்களில் முத்துக்குளித்தல் போன்றவற்றைத் தமதாக்கிக் கொண்டனர்.

யாழ்ப்பாண அரசு வலிமை பெறுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது தென் இந்திய விஜயநகரப் பேரரசின் உதவி கிடைத்தமையாகும். பின்னர் 6 ஆம் பராக்கிரமபாகு மன்னனால் யாழ்ப்பாண அரசு கோட்டை அரசுடன் இணைக்கப்பட்டது. எனினும் இவனது காலத்தின் பின்னர் 4 ஆம் புவனேகபாகுவின் காலத்தில் யாழ்ப்பாண அரசு சுயாதீன அரசாகியது.

1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்ட பின்னர் அந்த அரசு முடிவுற்றது.

**பயிற்சி**

யாழ்ப்பாண அரசின் தோற்றம், எழுச்சி, வீழ்ச்சி என்பன பற்றி சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்று எழுதுக.

## சுருக்கம்

★ மாகனின் கொடூர ஆக்கிரமிப்புடன் இராஜதானி தென்மேற்கு நோக்கி 13 ஆம் நூற்றாண்டிலிருந்து இடம்பெயரத் தொடங்கியது.

★ தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகல், கம்பளை, கோட்டை எனும் இடங்கள் தலைநகர்களாயின.

★ இவற்றின் முக்கிய இயல்பு, ஒவ்வொன்றும் குறுங்காலத்திற்கே நின்று நிலைத்ததாகும்.

★ அவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம், பாதுகாப்புக் கருதி மிகவும் பொருத்தமான இடங்களுக்கு இடம் மாறியமையாகும்.

★ இவ்வரசுகள் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலேயே அதிகாரத்தைச் செலுத்தின. இறுதியில் உருவான கோட்டையே முழு நாட்டையும் ஆண்டது.

★ இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சுதந்திர அரசொன்று காணப்பட்டது,

★ இராசதானிகள் இடம்பெயரும்போது முன்பு நிலவிய பொருளாதார அமைப்புகளும் மாற்றமுற்றன.

★ இக்காலத்தில் சமய இலக்கிய துறைகளில் முன்னேற்றம் காணப்பட்டது.

### மேலதிக வாசிப்பிற்கான நூல்கள்

வரலாறு தரம் 8, 9 தரங்களுக்கான பாடநூல்கள் 1922 - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பாடத்திட்டம்

## 7.1 புராதன நதிக்கரை நாகரிகங்கள்

| | |
|---|---|
| 7.1.1. | மனிதன் குடியிருப்பதற்காக நதிக்கரைகளைத் தேர்ந்தெடுத்தமைக்கான காரணங்கள். |
| 7.1.2 | நதிக்கரைகளை அண்டி வளர்ந்த நாகரிகங்கள் |
| 7.1.2.1 | மொசப்பெத்தேமிய நாகரிகம் |
| 7.1.2.2 | எகிப்திய நாகரிகம் |
| 7.1.2.3 | இந்து நதி நாகரிகம் |
| 7.1.2.4 | சீன நாகரிகம் |

## 7.2 நாகரிகப் பரம்பல்

| | |
|---|---|
| 7.1.1. | கிரேக்கம் |
| 7.2.2 | உரோம் |
| 7.2.3 | சீனா |
| 7.2.4 | அரேபியா |

## 7.3. தென்னிந்திய ஆக்கிரமிப்பும் அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்

| | |
|---|---|
| 7.3.1 | தென்னிந்திய அரசுகளும் அவற்றின் செல்வாக்கும் |
| 7.3.2 | தென்னிந்திய ஆக்கிரமிப்பு |
| 7.3.3 | அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும் சோழரின் ஆதிக்கமும் |

## பாடத்திட்டம்

### 7.4 பொலன்னறுவை இராசதானி

7.4.1. பொலன்னறுவைக் கால ஆட்சியாளர்கள்

7.4.2 மாகனின் ஆக்கிரமிப்பு

7.4.3 பொலன்னறுவையின் வீழ்ச்சி

### 7.5 மத்திய கால ஐரோப்பா

7.5.1. கிறிஸ்தவ சமய வளர்ச்சி

7.5.2 மானிய முறை

7.5.3 சிலுவை யுத்தங்கள்

### 7.6 பொலன்னறுவை வீழ்ச்சியின் பின் இலங்கை

7.6.1. இலங்கையின் தலைநகரங்களின் இடம்பெயர்வு

7.6.2 யாழ்ப்பாண இராச்சியம்

7.6.3 வாழ்க்கை முறை

7.6.4 சமய வளர்ச்சியும் இலக்கியமும்

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க வகையில் வைத்துப் படியுங்கள்.

பாடசாலைப் பெயர் : ..................................................................................

| ஆண்டு | பாடநூலைப் பெற்றுக் கொண்ட மாணவர் பெயர் | வகுப்பு | வகுப்பாசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2012 | .................................................. | ............. | ............................. |
| 2013 | .................................................. | ............. | ............................. |
| 2014 | .................................................. | ............. | ............................. |
| 2015 | .................................................. | ............. | ............................. |
| 2016 | .................................................. | ............. | ............................. |

ඉතිහාසය (දෙ) 7

2012/ T/ 07/1[illegible]4/ 69,000